# தமிழரசு




1-12-1987 ரூ. 1



மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், 18.11.1987 அன்று தலைமைச் செயலகத்தில் ஆதிதிராவிடர் களுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்கினார்.

சென்னை, கலைவாணர் அரங்கில் 19.11.1987 அன்று, தேசிய ஒருமைப்பாடு வார விழாவினை, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தொடங்கி வைத்தார்.





கடற்கரைப் பகுதியில்

# நல்ல குடிநீர் வழங்கும் புதிய குழாய் அமைப்பு

## மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் பார்வையிட்டார்

கடலோரத்தில் நல்ல குடிநீரை எடுக்கும் புதிய குழாய் அமைப்பை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் 26.11.87 அன்று சென்னை மெரினா கடற்கரையில் பார்வையிட்டார்.

கடற்கரை ஓரங்களில் நல்ல நீர், உப்பு நீருக்குமேல் ஒரு சில இடங்களில் 5 மீட்டர் முதல் 6 மீட்டர் வரையிலும், ஒரு சில இடங்களில் 6 மீட்டர் முதல் 8 மீட்டர் வரையிலும் கிடைக்கிறது. இவ்வாறு கிடைக்கும் நல்ல நீரை, அதிக அளவில் பெற, ஆழம் குறைந்த புதிய குழாய்க் கிணறு அமைப்பினைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உருவாக்கியுள்ளது.

இக்குழாய்க் கிணற்றில் பல திசைகளிலும் நல்ல நீருள்ள நிலத்தடி நீரின் மையப் பகுதியில் நீர் உறிஞ்சு குழாய்கள் ( 9மீட்டர் நீளம்) பதிக்கப்பட்டு, குழாய்க் கிணற்றுடன் இணைக்கப்பட்டுள்ளன.

இந்த நீர் உறிஞ்சு குழாய்கள் மூலம் அதிகப் பரப்பளவில் உள்ள நல்ல நீர் சேகரிக்கப்படுகிறது. இம்முறை, தமிழகக் கடற்கரை ஓரங்களில் வசிக்கும் மக்களுக்குப் பயன்படுகின்ற வகையில் அமையும்.

சோதனை முறையில் செயல்படுத்தப்பட்ட இந்தக் குழாய்க் கிணற்றின் மேல்பரப்பில் காட்சிக்காகப் பதித்து வைக்கப்பட்டிருந்த நீர் உறிஞ்சு குழாய்களை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்வையிட்டார். திரளாகக் கூடியிருந்த மக்களைப் பார்த்துக் கையசைத்துத் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்.

இந்த நவீன குழாய்க் கிணற்றிலிருந்து, கைப்பம்பின் மூலம் தண்ணீர் கொண்டு வருவதற்கு ரூ. 20 ஆயிரம் செலவாகும். நாள் ஒன்றுக்கு 14,400 லிட்டர் தண்ணீர் கிடைக்கும். இதனால் 150 பேர் பயன்பெறுவார்கள்.

விசைப்பம்பு மூலம் தண்ணீர் கொண்டு வருவதற்கு ரூ. 1,50,000 செலவாகும். நாள் ஒன்றுக்கு 1,44,000 லிட்டர் தண்ணீர் கிடைக்கும். இதனால் 500 பேர் பயன்பெறுவார்கள். காற்றாலை மூலம் தண்ணீர் கொண்டு வருவதற்கு ரூ. 1,50,000 செலவாகும். நாள் ஒன்றுக்கு 43,200 லிட்டர் தண்ணீர் கிடைக்கும். இதனால் 500 பேர் பயன்பெறுவார்கள்.

இந்தத் திட்டம் தென்னார்க்காடு மாவட்டத்தில் இரண்டு இடங்களில் பல நாட்களாகச் சோதனை முறையாக வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு, மக்கள் இன்றளவும் பயன் அடைந்து வருகிறார்கள்.

இந்தப் புதிய முறைக் குழாய்க் கிணற்றின் மூலம், கடற்கரைப் பகுதியில் உள்ள கிராமங்கள் அனைத்திற்கும் குறிப்பாக, சென்னை நகரத்திற்கும் நல்ல குடிநீர் மிகமிகக் குறைந்த செலவில் வழங்க முடியும்.

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2018
பிரபவ - கார்த்திகை 15

மலர் : 18 1-12-1987 இதழ் : 11

# படமும் செய்தியும்



மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களை, நெதர்லாந்து தூதர் திருமதி இ. எம். ஸ்கூ அவர்கள், 18-11-87 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்தார்.

பேராசிரியர் கா. சு. பிள்ளை நூற்றாண்டு விழா 26-11-87 அன்று சென்னை ராஜாஜி மண்டபத்தில் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி உயர் நிலைக் குழுத் தலைவர் டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், மாண்புமிகு கல்வி, சட்ட அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் உரையாற்றினர்.





மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சராக திரு. இராம.வீரப்பன் அவர்கள் 5-11-87 அன்று பதவி ஏற்றவுடன், மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கும், மேதகு ஆளுநர் திரு. எஸ். எல். குரானா அவர்களுக்கும் பொன்னாடை போர்த்தி ஆசி பெற்றார்.





# தமிழ்நாட்டில் வேலைவாய்ப்புத் திட்டங்கள்

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர்

**திரு எஸ். இராமச்சந்திரன்**

"எல்லோருக்கும் கல்வி, எல்லோருக்கும் வேலை'' இதுவே நமது குறிக்கோள். வேலை வாய்ப்புத் துறையின் மூலம் இக்குறிக்கோளை நிறைவேற்றத் தமிழக அரசு தன்னாலியன்ற பணிகளைச் செய்து வருகிறது. தமிழ்நாட்டில் தற்போது 42 வேலைவாய்ப்பு அலுவலகங்கள் உள்ளன. உடல் ஊனமுற்றோருக்குச் சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம் உண்டு. தொழில் நுட்பம்பயின்றோருக்கும் தனியே பிரிவுகள் உண்டு. கடந்த 10 ஆண்டுகளில் வேலையில் அமர்ந்திருப்போர் எண்ணிக்கை 5,47,099 ஆகும்.

இவ் வேலைவாய்ப்பு விகிதம் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இந்தியாவின் சராசரியைவிட அதிகம்; 1985-இல்வேலையில் அமர்த்தப்படும் விண்ணப்பதாரர் எண்ணிக்கை இந்தியாவைப் பொறுத்தவரையில் 6.7 விழுக்காடு என்றால், தமிழகத்தில் 10.4 விழுக்காடு ஆகும். இருப்பினும் தமிழகத்தில் வேலை தேடுவோர் எண்ணிக்கை வளர்ந்தவண்ணம் உள்ளது. 1977-ஆம் ஆண்டு இறுதியில்9இலட்சம் பேராக இருந்த எண்ணிக்கை இன்று 24½ இலட்சம் என உயர்ந்துள்ளது. வேலை தேடுவோர் அனைவரும் ஒழுங்கமைந்த துறையில் ( Organised Sector ) ஈடுபடுவதற்குப் போதுமான வாய்ப்பும் இல்லை. ஏனெனில் 1977இல் இவ்வகையில் தமிழ்நாட்டில் 16.8 இலட்சம் பேர் வேலையில் இருந்தனர். 1987-இல் இந்தஎண்ணிக்கை21.66 இலட்சம் ஆகும். மைய அரசின் ஒரு மதிப்பீட்டின்படி வேலை தேடுபவர்களில் 12 விழுக்காடு அளவினரே ஒழுங்கமைந்த துறையில் இடம்பெற முடியும். எஞ்சியுள்ளவர்கள் இதர துறைகளிலோ அல்லது தாமாகவோ தொழில் செய்யவே இயலும். எனவேதான் இளைஞர்களை சுயவேலைவாய்ப்புத் திட்டங்களில் ஈடுபடுத்துவது இன்றியமையாத தேவை ஆகும்.

தமிழகத்தில் கோவையிலும், வடஆர்க்காட்டிலும் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் சுய வேலைவாய்ப்பு மேம்பாட்டுப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. சொந்தத் தொழில்களைத் தெரிந்தெடுக்கும் இளைஞர்களை ஊக்குவித்துப் பதிவு செய்து அத்தகையோருக்கு வங்கிகள் மூலம் கடன் பெற்றுத் தருதலும் இவை ஆற்றும் பணிகளாகும். இவ்வகையில் 31.8.1987 வரை 3,065 பேர்களுக்கு ரூ. 3.17 கோடி நிதியுதவி பெற்றுத் தரப் பட்டுள்ளது.

மேலும், தமிழக அரசு இதைச் செயல் படுத்த ஊரக வளர்ச்சித் துறை, தொழில் மற்றும் வணிக வரித் துறை, ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் வளர்ச்சி வாரியம், சிட்கோ, டிக் மற்றும் சிப்காட் ஆகிய அமைப்புகளின் மூலம் பல்வேறு சுயவேலைவாய்ப்புத் திட்டங்களை நிறைவேற்றி வருகின்றது.

> **தொழில் வளர்ச்சிக்கு உதவுவதோடு சுய வேலை வாய்ப்பை உருவாக்குவதில் தமிழ்நாட்டின் பல்வேறு தொழில் வளர்ச்சிக் கழகங்கள் பெரிதும் துணை புரிகின்றன. குறிப்பாக தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு தொழில் மற்றும் முதலீட்டுக் கழகம், மற்றும் தமிழ்நாடு மாநிலத் தொழில் மேம்பாட்டுக் கழகம் ஆகியவற்றின் மூலம், தமிழ்நாட்டில் இதுகாறும் 1,39,410 பேர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.**

முதலாவது Integrated Rural Development Programmeஎன அழைக்கப்படும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் ஆகும். இத்திட்டத்தின்படி வறுமைக் கோட்டிற்குக் கீழ்வாழும் கிராமப்புறக் குடும்பங்களை இனம் கண்டறிந்து வருவாய் ஈட்டும் தொழில்களில் ஈடுபடுத்துவது; ஆண்டு வருமானம் ரூபாய் 6,400க்குக் குறைவாய் இருந்தால் அவர்கள்

வறுமைக் கோட்டின்கீழ் வருவர். இத்திட்டத்தின்படி ரூ. 10,000 வரை உதவி நிதியாகத் தொழில்களுக்கு வழங்கப்படுகிறது. 25 விழுக்காடு முதல் 50 விழுக்காடு வரை இத்தொழிலில் மானியம் வழங்கப்படுகிறது. கடந்த 7 ஆண்டுகளில் இத்திட்டத்தின் மூலம் பலன் பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை 18.96 இலட்சம். வழங்கப்பட்ட கடன்தொகை ரூ. 392.1 கோடி; தரப்பட்ட மானியம் ரூ. 171.6 கோடி.

மேலும் இதில் கிராமப்புற இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம் Training of Rural Youth for Self Employment (TRYSEM) ஒன்றும் 2.10.1980 முதல் செயல்படுத்தப்படுகிறது. 18 முதல் 35 வரை வயதுடைய வறியவர் குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர்கள் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் மற்றும் தனியார் துறைப் பயிற்சி நிலையங்களில் பல்வேறு தொழிற் பிரிவுகளில் பயிற்சி பெறுகின்றனர். பயிற்சிக் காலத்தில் மாதம் ஒன்றுக்கு 75 ரூபாய் முதல் 200 ரூபாய் வரை உதவித் தொகை வழங்கப்படுகிறது. பயிற்சி முடிக்கப்பட்டபிறகு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சுயதொழில் துவங்க நிதியுதவியும் செய்யப்பட்டு வருகிறது. கடந்த 7 ஆண்டுகளில் பயிற்சி பெற்றோர் 1.92 இலட்சம் பேர். இவர்களில் 50,194 பேர்கள் ஊதியம் பெறும் வேலைகளிலும் ஒரு இலட்சம் பேர்கள் சுய வேலை வாய்ப்புகளிலும் அமர்த்தப் பெற்றுள்ளனர்.

இரண்டாவதாக, அரசு செயல்படுத்தும் வேலைவாய்ப்புத் திட்டம் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் (NREP) ஆகும். ஊர்ப் புறங்களில் பயனுள்ள வேலைவாய்ப்புகளைத் தோற்றுவித்துச் சமுதாயத்திற்கு நலன் பயக்கும் நிரந்தரச் சொத்துக்களை உருவாக்கி அவைகளின் மூலம் கிராமப் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தி, ஏழை, எளிய மக்களின் வருவாயைச் சீராக உயர்த்துவதற்குரிய ஒரு சூழ்நிலையை உண்டாக்குவதே இத்திட்டத்தின் குறிக்கோள். இத்திட்டம் மாநிலத்திலுள்ள 378 ஊராட்சி ஒன்றியங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் 20.96 கோடி மனித உழைப்பு நாட்கள் உற்பத்தி செய்யப்பட்டு, பணியாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டன.

மூன்றாவதாக, ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டம்(Rural Landless Employment Guarantee Programme) இது 1983 -84 முதல் தமிழ்நாட்டில் அமலில் இருக்கிறது. கிராமப்புறத்தில் நிலமற்ற தொழிலாளர் குடும்பத்தில் ஒருவருக்காவது ஆண்டில் 100 நாட்கள் வேலை அளிப்பதும், இவர்களுடைய வாழ்விற்கு உறுதி செய்வதும், கிராமியப் பொருளாதார முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதற்காக நிரந்தரமான சொத்துக்களையும், அடிப்படை வசதிகளையும் உருவாக்கித் தருவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்தத்திட்டத்தின்பயனாக 31.3.87 வரை பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி 9.23 கோடி மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டு, பணியாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

நான்காவதாக, பாரதப் பிரதமரின் படித்த வேலையற்றோரின் சுயவேலைவாய்ப்புத் திட்டம். இந்தத் திட்டம் பள்ளி இறுதி வகுப்பு அதற்கு மேலும் படித்த, 18 முதல் 35 வயது வரை உள்ள இளைஞர்களுக்குத் தொழில், பணிகள் மற்றும் வணிகத் துறைகளில் சுய தொழில்களைத் துவங்க உதவி செய்தலாகும். தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் உதவித் தொகையாக ரூபாய் 35,000 வரை இவர்கள் பெறலாம். கடன் தொகையில் கால் பங்குத் தொகையை அரசு மானியமாக வழங்குகிறது. எளிதான தவணைகளில் 3 முதல் 8 ஆண்டுகள் வரை திருப்பிக் கட்டலாம். இத்திட்டம் 1983-84 முதல் அமல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை 57,717 பேர்கள் பலன்பெற்றுள்ளனர். 31.8.87 வரை ரூ. 108.68 கோடி நிதியுதவியாக இத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## கோடிநாள் நிதி வசூல் இலக்கு

கோடிநாள் நிதிக்காக 1987-ஆம் ஆண்டுக்கு ரூ 88 இலட்சம் வசூலிப்பதென தமிழக அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. '1986-ஆம் ஆண்டில் நிர்ணயம் செய்யப்பட்ட இலக்கை மீறிய சாதனையாக ரூ 76½ இலட்சம் கொடிநாள் நிதி வசூல் செய்ததற்காக, இந்திய அரசிடமிருந்து தமிழக அரசு இரண்டு பரிசுகளைப் பெற்றது.

ஐந்தாவது, சுயவேலைவாய்ப்புத் திட்டம் தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தினால் அமல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் இரு வகைப்படும்

1 நகர்ப்புறச் சுயவேலைவாய்ப்புத் திட்டம்.

2. மற்றொன்று, சுயதொழில் கடன் மற்றும் மானியத் திட்டம்.

இந்தத் திட்டங்களின் கீழ் நகர்ப்புறங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வசிக்கும் ஆதிதிராவிட மக்களுக்குச் சுய வேலைவாய்ப்புத் தொழில்களில் ஈடுபட நிதியுதவி வழங்கப்படுகிறது.

நகர்ப்புறச் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் துவக்கப்பட இருக்கும் தொழிலில், தொழிலின் மதிப்பீட்டில் 50 விழுக்காடு மானியமும், 4 விழுக்காடு வட்டியுடன் 25 விழுக்காடு வரம்புத் தொகையும் ( Margin Money ) வழங்கப்படுகிறது. அதேபோல் சுயதொழில் கடன் மற்றும் மானியத் திட்டத்தின் கீழ் துவக்கப்பட இருக்கும் தொழில்களின் மதிப்பீட்டில் 25 விழுக்காடு மானியமாகவும், 4 விழுக்காடு வட்டியுடன் கூடிய 25 விழுக்காடு வரம்புத் தொகையாகவும் வழங்கப்படுகிறது. இத்திட்டங்கள் துவக்கப்பட்ட நாளிலிருந்து 30.9.1986 வரை 16.984 பேர்களுக்குச் சுய

வேலைவாய்ப்பு துவங்குவதற்கு உதவி செய்யப்பட்டுள்ளது. இவர்களுக்கு ரூபாய் 4.21 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், முதலமைச்சரின் குழந்தைகளுக்கான மதிய உணவுத் திட்டத்தின் கீழ் 1,98,990 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இவர்களில் 38,193 விதவைகளும், ஆதரவற்றவர்களும், 37,906 தாழ்த்தப்பட்ட இனத்தவர்களும் அடங்குவர்.

தொழில் வளர்ச்சிக்கு உதவுவதோடு, சுயவேலைவாய்ப்பை உருவாக்குவதில் தமிழ் நாட்டில் பல்வேறு தொழில் வளர்ச்சிக் கழகங்கள் பெரிதும் துணை புரிகின்றன. குறிப்பாகத் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (SIDCO), தமிழ்நாடு தொழில் மற்றும் முதலீட்டுக் கழகம் (TIIC) மற்றும் தமிழ் நாடு மாநிலத் தொழில் மேம்பாட்டுக் கழகம் (SIPCOT) ஆகியவற்றின் மூலம், தமிழ்நாட்டில் இதுகாறும் 1,39,410 பேர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இவையன்றி எளிதில் வேலை பெற, படித்தவர்களுக்குத் தொழிற் பயிற்சியும் பல்வேறு திட்டங்கள் மூலம் அளிக்கப்படுகின்றன. அரசின் இப் பல்வேறு திட்டங்களைப் பயன்படுத்தி, வேலையற்ற இளைஞர்கள் தொழில் துவங்க முன்வரவேண்டும்.

சுயவேலைவாய்ப்பு சம்பந்தமான தொழில்கள், இத்திட்டங்களைச் செயல்படுத்தும் நிறுவனங்கள், நிதி உதவி பெறத் தகுதி, தொழில்களைத் தேர்ந்தெடுத்தல், சுயவேலையில் ஈடுபடத் தேவையான பயிற்சி வசதிகள் போன்ற எல்லா விவரங்களையும், ஒவ்வொரு மாவட்டத்திலும் இயங்கிவரும் மாவட்ட வேலை வாய்ப்பகங்களில் உள்ள தொழில் முறை வழிகாட்டும் அலுவலரை (Vocational Guidance Officers) இளைஞர்கள் அணுகி, தகுந்த பயன் அடையலாம்.

வேலையின்மையைப் போக்குவது கூட்டு முயற்சியின் மூலமே முடியும். அரசும், நிதி நிறுவனங்களும் துணை புரியலாம். ஆனால் இளைஞர்களின் முயற்சியும் தன்னம்பிக்கையுமே வெற்றியை ஏற்படுத்தும். ஆகவே, படித்த இளைஞர்கள் ஒரு புதிய தமிழகத்தை வறுமை, வேலையின்மையில்லாததமிழகத்தை உருவாக்க முன்வரவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

**(மாண்புமிகு உளவுத்துறை அமைச்சர் அவர்கள், 5.10.87 அன்று வானொலியில் ஆற்றிய உரை.)**



**ரூபாய் 60 இலட்சம் செலவில் புதிதாகக் கட்டப்பட்ட கரூர் நகராட்சிப் பேருந்து நிலையதத்னை, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் 24-11-87 அன்று திறந்து வைத்தார். மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி அவர்களும், மாண்புமிகு சத்துணவு அமைச்சர் திரு ஆர். சௌந்தரராஜன் அவர்களும், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு அ. அருணாசலம் அவர்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.**




# புதுடெல்லியில் தமிழ்நாடு தின விழா



புதுடெல்லியில் நடைபெற்றுவரும் சர்வதேச வர்த்தகப் பொருட்காட்சியில், தமிழ்நாடு அரசு அரங்கம் ஒன்று அமைத்துப் பங்கேற்றுள்ளது. தமிழ்நாடு அரசின் தொழில் வளர்ச்சியினை விளக்கும் வகையில் மாநில அரசின் தொழில் துறை நிறுவனங்களான சிட்கோ, டிட்கோ, சிப்காட், டால்கோ, டாமின் போன்ற நிறுவனங்களும், தனியார் துறை நிறுவனங்களும் தாங்கள் தயாரித்துள்ள பல்வேறு பொருட்களைக் காட்சிக்காக வைத்துள்ளன. அரசின் பல்வேறு திட்டங்களை விளக்கும் புகைப்படக் காட்சியினைச் செய்தித்துறை இப்பொருட்காட்சியில் வைத்துள்ளது.

இப்பொருட்காட்சியில் தமிழ்நாடு அரசின் சார்பில், தமிழ்நாடு தினம் 25.11.87 அன்று கொண்டாடப்பட்டது. மாண்புமிகு நாடாளு மன்றத் துணை சபாநாயகர் டாக்டர் தம்பிதுரை அவர்கள், மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் திரு க. இராசாராம் அவர்கள் தலைமையில், மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் திரு வி. வி. சுவாமிநாதன் அவர்கள் முன்னிலையில், தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு மத்திய தொழில்துறை இணை அமைச்சர் திரு எம். அருணாசலம் அவர்களும், மாண்புமிகு மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு ப. சிதம்பரம் அவர்களும், தமிழ் நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு எம். பட்டுராஜன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள்.

விழாவில், திருமதி அருணா சுப்பிரமணியம் குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது.




# மூதறிஞர் இராஜாஜி

தமிழ்நாட்டில் பிறந்து, அறிவாலும், ஆற்றலாலும், பண்பாலும், இந்திய நாட்டிற்கே பெருமையையும், உயர்வையும் தேடித் தந்த அரசியல் ஞானி மூதறிஞர் இராஜாஜி. 'தமிழ் நாட்டு அறிவு' என்று இவரைத் தமிழ்த் தென்றல் திரு.வி.க. பாராட்டினார். 'தனது மனச்சாட்சியின் காப்பாளர்' என்று அண்ணல் காந்தியடிகள் போற்றினார்.

அண்ணல் காந்தியடிகள் தம் சுக போகங்களையும், செல்வம் முதலிய சிறப்புகளையும் தியாகம் செய்து விட்டு, பொதுத் தொண்டிற்காகத் தம் வாழ்வையே அர்ப்பணித்ததைப் போலவே மூதறிஞர் இராஜாஜி அவர்களும் தம் செல்வச் செழிப்பையும் ஆடம்பர வாழ்வையும் உதறித் தள்ளி விட்டு, எளிய வாழ்க்கை வாழ்ந்ததோடு, தேச சேவைக்காகவே தம் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தார்.

சாதி வேற்றுமைகளையும், சமய வேற்றுமைகளையும் ஒழித்து, சமூகத்தில் ஒற்றுமையையும், சமத்துவத்தையும் நிலைநாட்ட அரும்பாடு பட்டார். கலப்புத் திருமணத்தை ஆதரித்தார். தீண்டாமை, மது ஆகிய இரு அரக்கர்களையும் எதிர்த்துப் போராடினார். 'கதர் இயக்கத்தின் தந்தை' என்று போற்றப்படும் வகையில், தமிழ்நாடு கதர் உற்பத்தியில் புகழ் பெற மூலகாரணராக இருந்தார்.

சத்தியம், அகிம்சை என்ற இரு கோட்பாடுகளின் அடிப்படையில் இந்திய சுதந்திரப்போரை நடத்திய மகாத்மா காந்தியின் நம்பிக்கைக்குரிய தளபதிகளுள் ஒருவராக நாட்டு விடுதலைப் போரில் ஈடுபட்டார். நடைமுறை வாழ்க்கையில் முழுக்க முழுக்க காந்தியவாதியாக இருந்தார். பண்டித ஜவகர்லால் நேரு, சர்தார் பட்டேல், பாபுராஜேந்திர பிரசாத் ஆகிய தலைவர்களோடு நெருக்கமான தொடர்பு வைத்திருந்ததோடு, ஆக்கப்பூர்வமான யோசனைகளை நல்கிச் சிறந்த வழிகாட்டியாக விளங்கினார்.

அவர் மனச்சாட்சிக்கு எது சரி, எது நியாயம் என்று தோன்றுகிறதோ, அதை யார் எதிர்த்தாலும் விட்டுக் கொடுக்க மாட்டார். சொந்த வாழ்வில் கண்ட எளிமையையும், சிக்கனத்தையும், பொதுவாழ்விலும் கடைப் பிடித்தார்.

எங்கிருந்தாலும், எத்தகைய உயர்பதவியில் இருந்தாலும், தமிழ் நாட்டின் உயர்வுக்காகவும், தமிழ் மக்களின் நன்மைக்காகவும், தமிழ் மொழியின் ஆக்கத்திற்காகவும் பாடுபடுவதை இராஜாஜி தம் கடமையாகக் கருதினார்.

அவர் ஆங்கிலத்தில் பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டால் ஒழிய, பெரும்பாலும் தமிழிலேயே பேசுவார். எத்தகைய பிரச்சினைகளையும் பொருத்தமான உதாரணங்களுடன் நகைச்சுவை ததும்பப் பேசித் தெளிவு படுத்துவார். மாற்றாரும் வியக்கும் வகையில் வாதிடுவார். அவரது சொற்பொழிவு அறிவுக்கு விருந்து.

தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காக அவர் ஆற்றிய பணி உன்னதமானது. நன்னெறி காட்டிடும் தமிழ் நூல்களைத் தமிழ் அன்னைக்குச் சூட்டி இருக்கிறார். இலக்கியத்தைப் பற்றி அவர் கூறும்போது, 'ஒரு புத்தகம் அல்லது சஞ்சிகை திரும்பப் பெற முடியாத சில மணிநேரங்களை உன்னிடமிருந்து அபகரித்துக் கொண்டு விடுகிறது; பதிலுக்கு உனக்கு அது ஏதாவது நன்மை செய்திருக்கிறதா என்று பார்க்க வேண்டும்,' என்பார். 'சக்கரவர்த்தி திருமகன்' 'வியாசர் விருந்து' போன்ற நீதிநெறி நூல்களைக் குழந்தைகளின் எதிர்கால நல்வாழ்வு கருதியே எழுதினார். இவரது சிறு கதைகள், கட்டுரைகள் பெரும்பாலும், மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு, கதர் அபிவிருத்தி ஆகிய நிர்மாணத் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டே எழுதப்பட்டவை. திருக்குறளுக்கு இவர் ஆங்கிலத்தில் எழுதிய உரை சிறந்த தொண்டாகப் போற்றத்தக்கது.

நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடி, சமுதாயத் தொண்டில் ஈடுபட்டு, நகராட்சித் தலைவர், காங்கிரஸ் தலைவர், முதலமைச்சர், கவர்னர், மத்திய அரசு அமைச்சர், சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல்- இப்படிப் பல்வேறு பதவிகளில் நிர்வாகத் திறமையைக் காட்டி 94 ஆண்டுகள் வாழ்வாங்கு வாழ்ந்த அறிவுலக மேதை மூதறிஞர் இராஜாஜி நம் உள்ளங்களில் ஒளியாக என்றும் நிறைந்திருப்பார்.

– வ. இராசமனோகரன்



# மூதறிஞர் இராஜாஜி

## வாழ்க்கைக் குறிப்பு

**1878-** ஒசூருக்கு அருகில் உள்ள தொரப்பள்ளி கிராமத்தின் முன்சீப்பாக இருந்த சக்கரவர்த்தி வேங்கடார்யா, சிங்காரம்மா தம்பதியருக்கு 10-12-1878 செவ்வாய்க் கிழமை மூன்றாவது மகனாகப் பிறந்தார்.

ஒசூரில் பள்ளிக் கல்வி-பெங்களூரில் உயர்நிலைக் கல்வி - கல்லூரிக் கல்வி. சென்னை மாநிலக் கல்லூரியில் பட்டப்படிப்பு.

**1896 -** பி. ஏ. பட்டதாரியானார்.

**1898 -** சித்தூர் திருமலை சம்பங்கி அய்யங்கார் மகள் அலர்மேலு மங்கம்மாளை(மங்கா) மணந்தார். மூன்று ஆண்கள், இரண்டு பெண்கள் பிறப்பு.

**1900 -** வழக்குரைஞர் பட்டம்— வழக்குரைஞர் பணி சேலத்தில் துவக்கம்.

பிரபல வழக்குரைஞர் சி. விஜயராகவாச்சாரியாரின் நட்பைப் பெற்றார். புகழ்மிகுந்த வழக்குரைஞராகத் திகழ்ந்தார்.

**1901 -** நண்பர்களுடன் இலக்கிய மன்றம் துவக்கினார்.

**1906 -** சென்னை உயர்நீதிமன்ற வழக்குரைஞராகப் பதிவு செய்தல். தாயார் மறைவு.

சேலம் கல்லூரியில் ஆதிதிராவிட மாணவர்களைச் சேர்க்க முயன்று வெற்றி கண்டார். கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார். அவர் அரசியலில் புகுவதை உறுதிப்படுத்தியது இந்தக் கல்கத்தா காங்கிரஸ்தான்.

**1907 -** சூரத் காங்கிரஸ் மாநாட்டிற்குச் சென்றார்.

**1909 -** புதுவைக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியாருடன் சந்திப்பு.

**1910 -** கர்நூல் சமூக சீர்திருத்த மாநாட்டில் கலந்து கொண்டு கலப்புத் திருமணத்தை ஆதரித்துப் பேசினார் - காந்தியடிகளுடன் சந்திப்பு - காந்தியடிகளின் நூல்களைப் படித்து மகிழ்ந்தார்.

**1911 -** சேலம் நகராட்சி உறுப்பினர்.

**1915 -** மனைவி மறைவு.

**1916 -** 'விஞ்ஞானத் தமிழ்ப் பதங்கள் சங்கம்' தோற்றுவித்தார் - சுயாட்சி சங்கத்தில் சேர்ந்திருந்தார்.

**1917 -** நகராட்சி உறுப்பினராக இல்லாமலேயே சேலம் நகராட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். வைதிகர் எதிர்ப்புக்கிடையே ஆதிதிராவிடர்களைப் பணியில் சேர்த்தார்.

**1918 -** பம்பாய் காங்கிரஸ் மாநாட்டில் பங்கேற்பு - காஞ்சிபுரம் தமிழ் மாகாண மாநாட்டில் பங்கேற்பு- டாக்டர் வரதராஜுலு நாயுடு மீது சாட்டப்பட்ட ராஜதுவேஷ வழக்கில் வாதாடி வெற்றி பெற்றார்.

**1919 -** சேலம் நகராட்சித் தலைவர் பதவியை ராஜினாமா செய்தார். சென்னையில் மயிலாப்பூர் 'திலகர் பவனத்தில்' குடியேறினார். காந்தியடிகள் சென்னை வந்த போது இராஜாஜி வீட்டில் தங்கினார்-சென்னையில் சத்தியாகிரக சபைக்கு இராஜாஜி செயலாளர் ஆனார்.

**1920 -** திருநெல்வேலி தமிழ் மாகாண மாநாட்டில் பங்கேற்பு.

**1921 -** ஒத்துழையா இயக்கப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு முதன் முறையாக வேலூர்ச் சிறையில் அடைக்கப்பட்டார்.
மூத்த சகோதரரும், தந்தையாரும் மறைவு.

**1922** - 'யங் இந்தியா', 'லீடர்' 'நோ சேஞ்ச்' ஆகிய ஏடுகளின் ஆசிரியர் பொறுப்பு.

**1925** - திருச்செங்கோட்டை அடுத்துள்ள புதுப்பாளையத்தில் காந்தி ஆசிரமம் துவக்கம். 'புரொகிபிஷன்' என்ற ஆங்கில ஏட்டிற்கும், 'விமோசனம்' என்ற தமிழ் ஏட்டிற்கும் ஆசிரியராக இருந்தார். அகில இந்திய மதுவிலக்குச் சங்கத்திற்கும், காங்கிரஸ் மதுவிலக்குக் கமிட்டிக்கும் செயலராக இருந்தார்.

**1929** - மதுவிலக்குப் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டார்.

**1930** - வேதாரண்யம் உப்பு சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு, 9 மாத சிறைத்தண்டனை.

**1932** - அரிசனங்கள் ஆலயப் பிரவேச இயக்கத்தில் தீவிரம்.

**1933** - மகள் லட்சுமிக்கும், காந்தியடிகள் மகன் தேவதாசுக்கும் திருமணம்.

**1937** - பிரிக்கப்படாத சென்னை மாநிலத்தின் பிரதம அமைச்சரானார். வெள்ளையர் நீல் துரையின் உருவச்சிலை அகற்றப்பட்டு மியூசியத்தில் வைக்கப்பட்டது.

**1938** - விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் - மதுவிலக்குத் திட்டம் முதன் முதலாக சேலம் மாவட்டத்தில் அமுல்படுத்தப்பட்டது.

**1939** - பிரதம அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார்.

**1940** - இந்தியப் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டு வேலூர்ச் சிறையில் அடைக்கப்பட்டார். சிறைவாசத்தில் தமிழில் நூல்கள் எழுதினார்.

**1942** - காங்கிரசின் கொள்கையில் மாறுபட்டு, காங்கிரசு இயக்கத்தை விட்டு வெளியேறினார்.

**1945** - மீண்டும் காங்கிரசில் சேர்ந்தார்.

**1946** - பண்டித நேருவின் தலைமையில் அமைந்த இடைக்கால அமைச்சரவையில் அமைச்சர் ஆனார்.

**1947** - ஆகஸ்டு-15, இந்தியா விடுதலை- மேற்கு வங்காளத்தில் ஆளுநர் பொறுப்பு.

**1948** - இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாகப் பொறுப்பு ஏற்றார்.

**1950** - இராசேந்திர பிரசாத் குடியரசுத் தலைவரானதும், இராஜாஜி மைய அரசின் அமைச்சர் ஆனார்.

**1952** - மைய அரசு அமைச்சர் பொறுப்பிலிருந்து விலகி

சென்னை மாநில முதலமைச்சர் ஆனார்.

**1954** - பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது. மாநில முதலமைச்சர் பொறுப்பிலிருந்து விலகினார்.

**1960** - சுதந்திராக் கட்சியை உருவாக்கினார். 'சுயராஜ்யா' என்ற ஆங்கிலப் பத்திரிகையை நடத்தினார்.

**1962** - தம் 85-வது வயதில் அணு ஆற்றலைத் தீய செயலுக்குப் பயன்படுத்துவதை எதிர்க்கும் குழுவில் பங்கு பெற்று, அமெரிக்கா சென்று அந்நாளைய அமெரிக்கக் குடியரசுத் தலைவர் கென்னடியைச் சந்தித்தார்.

**1967** - தமிழ்நாட்டில் பொதுத் தேர்தலில் பேரறிஞர் அண்ணாவுக்கு உறுதுணையாக இருந்து, காங்கிரஸ் அல்லாத ஆட்சி அமையப் பாடுபட்டார்.

**1972** - அக்டோபர் 8 அன்று, சென்னை கிண்டி காந்தி மண்டபத்தில் காந்தி பிறந்த நாள் விழாவில் கலந்துகொண்டு பேசினார். அதுதான் அவரது கடைசி உரை.

டிசம்பர் 25 - சென்னையில் மறைவு. டிசம்பர் 26-ல் அவரது உடல் அரசு மரியாதையுடன் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள கிருஷ்ணாம்பேட்டை மயானத்தில் எரியூட்டப்பட்டது.

★ நம்முடைய சமூகம் சுதந்திர வாழ்க்கை அடைந்து விட்டது. சுதந்திரத்துடன் சுகமும் பெற வேண்டுமானால், மக்கள் அற வழியில் நிற்கவேண்டும்.

— மூதறிஞர் இராஜாஜி

## நினைவில் இராஜாஜி

**1973** - டிசம்பர் 25 அன்று இராஜாஜி நினைவு 20 காசு அஞ்சல் தலையை மைய அரசு வெளியிட்டுச் சிறப்பித்தது.

**1975**- சென்னை கிண்டி படேல் சாலையில் காந்தி மண்டபம் அருகில் இராஜாஜி நினைவாலயம் தமிழக அரசால் கட்டப்பட்டு, 5.5.1975 அன்று திறக்கப்பட்டது. இராஜாஜி வாழ்க்கை நிகழ்ச்சிகள் தொடர்பான படங்களும், இராஜாஜி பற்றிய நூல்களும் நினைவாலயத்தில் வைக்கப்பட்டுள்ளன. அண்மையில் நூலகக் கட்டிடமும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

## இராஜாஜி நினைவு இல்லம்

**1978**-தர்மபுரி மாவட்டம், தொரப்பள்ளியில் இராஜாஜி பிறந்த வீட்டை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் அரசுடைமையாக்கி, 10-12-1978 அன்று நினைவு இல்லமாக மாற்றினார். இராஜாஜி வாழ்க்கை வரலாற்றை விளக்கும் புகைப் படங்கள் அங்கு நிரந்தரமாக வைக்கப்பட்டுள்ளன.

அதே நாளில் இராஜாஜி நினைவு 25 காசு அஞ்சல் தலையையும் மைய அரசு வெளியிட்டுச் சிறப்பித்தது.

சென்னை உயர்நீதிமன்றத்துக் கருகில் இராஜாஜி சிலை 24.12.78 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வடக்குக் கடற்கரைச் சாலைக்கு இராஜாஜி சாலை என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் இராஜாஜி முழு உருவப்படம் அணி செய்கிறது.

தொகுப்பு: வ இரா



# கூட்டுறவு வளர்ச்சியில் தமிழகம்

முதலாளித்துவப் பொருளியல் தத்துவத்தால் பெரும் வளர்ச்சி அடைந்த நாடு அமெரிக்கா: பொதுவுடைமைப் பொருளியல் தத்துவத்தால் மிகவும் மேம்பாடுற்ற நாடு இரஷ்யா; அந்த இரண்டு தத்துவங்களாலும் இந்தியாவிற்கு வளர்ச்சியடையும் வாய்ப்பு, இன்றைய நிலையில் அமையவில்லை என்பது தெளிவு. இந்தியாவில் வாழுகின்ற ஏழை, எளிய, அடித்தள, நடுத்தர மக்களின் பொருளாதார நிலை உயர வேண்டுமானால், அது கூட்டுறவுப் பொருளியல் தத்துவ முறையால்தான் முடியும்.

உலகில் சின்னஞ்சிறு நாடுகளாக விளங்கும் நார்வே, சுவீடன், பெல்ஜியம், ஹாலந்து டென்மார்க், சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளெல்லாம் வாழ்க்கைத் தரத்தில் மேன்மையுற்று விளங்குவதற்குக் காரணம் கூட்டுறவு இயக்கமேயாகும்.

1844-ஆம் ஆண்டு இங்கிலாந்திலுள்ள இலங்காஷையரில் தோற்றங் கண்ட கூட்டுறவு இயக்கம், ஐரோப்பாக் கண்ட நாடுகளில் பரவி, இந்தியாவில் 1904ஆம் ஆண்டு வேரூன்றிற்று.

இந்தியாவிலேயே முதல் கூட்டுறவுச் சங்கம் 1904ஆம் ஆண்டில், தமிழ் நாட்டில் செங்கல்பட்டு மாவட்டத்தில், கீழச்சேரி என்னும் சிற்றூரில்தான் நிலைபெற்றது. இந்தியாவில் கூட்டுறவு இயக்கத்தைக் கட்டிக்காத்து வளர்த்து, அதனைப்பெயரோடும், புகழோடும் திகழச் செய்து, முன்னணியில் இருந்துவரும் மாநிலங்களிலே, தமிழ்நாடு முக்கியமானதொரு இடத்தைப் பெறறு விளங்குகிறது.

தமிழ் நாட்டில் 49 வகையான துறைகளில், சுமார் 30,000க்கு மேற்பட்ட சங்கங்களைக் கொண்டு இயங்கி வருகிறது கூட்டுறவு இயக்கம்.

**[மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சென்னை வானொலி, தொலைக்காட்சியில் 14.11.87 அன்று ஆற்றிய உரையிலிருந்து]**



# குமரி மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணிகள்

**டி.கே.டி. துரைராசன்,**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
கன்னியாகுமரி மாவட்டம்

செழுமையும், வளமையும் நிறைந்த குமரி மாவட்டம் கடந்த 3 ஆண்டுகளாக வறட்சியின் கோரப் பிடியில் சிக்கித் தவிக்கிறது. வறட்சியின் அக்கொடுமையிலிருந்து மீட்க, அரசு பல்வேறு வறட்சி நிவாரணப் பணிகளைப் போர்க்கால நடவடிக்கைபோல் மேற்கொண்டு செயல்படுத்தி வருகிறது.

பொதுவாக, இம்மாவட்டம் தென்மேற்குமற்றும் வடகிழக்குப் பருவ மழையினால் பயன்பெறும் மாவட்டம் ஆகும். ஒரு ஆண்டில் ஆறுமாத காலம் மழைபொழிந்து செழுமை பெற்று வந்தது இம் மாவட்டம். ஜூன் திங்கள் முதல் ஆகஸ்ட் திங்கள் வரை, தென் மேற்குப் பருவ மழையும், அக்டோபர் திங்கள் முதல் டிசம்பர் கடைசி வரை வடகிழக்குப் பருவ மழையும் இம்மாவட்டத்தில் பொழிவதுண்டு. இம்மாவட்டத்தில் சராசரி மழை அளவு 1465 மி.மீ. ஆகும். மழையளவு நாளடைவில் 1984-ஆம் ஆண்டு 1097 மி. மீட்டரும், 1985-ஆம் ஆண்டு 1089 மி. மீட்டரும், 1986ஆம் ஆண்டு 607 மீ. மீட்டரும், 1987-ஆம் ஆண்டு 319 மி. மீட்டரும் ஆகக் குறைந்து கொண்டே போயிற்று. 1986ஆம் ஆண்டு தென்மேற்குப் பருவ மழை பொய்த்திதன்காரணமாகக் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு வந்துள்ளது.

இதனால் மாவட்டமெங்கும் பரவலாக வறட்சி நிலைமையும், குடிநீர்ப் பற்றாக்குறையும், ஏற்பட்டுள்ளன. தமிழக அரசின் ஆணையின்படி, மாவட்ட நிர்வாகமானது, வறட்சி நிவாரணப் பணிகளையும், குடிநீர் விநியோகத்தையும் மிக முனைப்போடு செயல்படுத்தி வருகிறது.

குடிநீர்ப் பிரச்சினையைச் சமாளிப்பதற்காகக் கிணறுகளை ஆழப்படுத்தவும்; புதிதாக ஆழ்குழாய்க் கிணறுகளை அமைக்கவும் போன்ற பணிகளுக்கு 1986ஆம் ஆண்டில் சுமார் ரூ.38 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இந்த நிதியைக்கொண்டு 130 கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டதுடன், புதிதாக 115 ஆழ்குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டன. மற்றும் 8 திறந்த வெளிக் கிணறுகளும் தோண்டப்பட்டன. இவற்றால் டிசம்பர் வரை குடிநீர்ப் பிரச்சினையைச் சமாளிக்க முடியும்.

இப்போது வறட்சி நிவாரணப் பணிகளுக்காக அரசு கூடுதலாக 2.12 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. இந்த நிதியைக்கொண்டு இதுவரை 367 ஆழ்குழாய்க் கிணறுகளும், 37 திறந்த வெளிக் கிணறுகளும் தோண்டப்பட்டுள்ளன. 155 கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டுள்ளன. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், லாரிகள் வாயிலாகக் குடிநீர் விநியோகிக்க ரூ. 23 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. நாகர்கோவில், குழித்துறை நகராட்சிகளுக்குத் தனியாகக் குடிநீர்க் குழாய்கள் அமைக்க ரூ. 13 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. நகரப் பஞ்சாயத்துக்களில் தற்போதுள்ள குடிநீர்த் திட்டங்களைப் பழுது பார்க்க ரூ. 6 இலட்சமும், குளச்சல் நகராட்சிக்கு ரூ. 3 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

கிராமப்பகுதிகளில் ரூ. 45 இலட்சம் செலவில் விவசாயக் கூலியாட்களுக்கு வேலைவாய்ப்பு தரும் திட்டமும் மேற்கொள்ளப்





முழு விவரங்களுக்கு, அருகிலுள்ள நியூ இந்தியா ஆபீஸ் அல்லது ஏஜெண்டோடு தொடர்பு கொள்ளுங்கள்.

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்

இன்சூரன்ஸ்—நஷ்ட காலத்தில் நம்பகமான ஆதரவு!



பட்டுள்ளது. இவை தவிர ஊராட்சி ஒன்றியங்களின் பொது நிதிக்காக ரூ. 25 இலட்சம் ஒதுக்கப்பட்டு வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

நாகர்கோவிலைப் பொறுத்த மட்டில் பெருஞ்சாணி நீர்த்தேக்கத்திலிருந்து நீர் வழங்கப்பட்டு வருகிறது. குடிநீர்ப் பற்றாக்குறை அதிகமாக இருப்பதாகக் கருதப்படும் பகுதிகளில் தினமும் 17 லாரிகளில் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இம்மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு ரூ. 26 இலட்சம் அளவுக்கு நிலவரிச் சலுகைகள் தருவதற்காக அரசுக்குச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. மற்றும் விவசாயிகளுக்குச் சலுகை விலையில் உரங்கள் வழங்க ரூ. 16 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கைப்பம்புகள் பழுதடைந்தால் அவற்றை உடனடியாகச் சரிப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதற்காக ஒரு புதிய திட்டம் இம்மாவட்டத்தில் கடந்த ஆண்டு தமிழ்நாட்டிலேயே முதல் முறையாகத் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வட்டாரத்திலும் இந்தச் சீரமைப்புப் பணிகளைமேற்பார்வையிட்டுத் தீவிரப்படுத்தும் பொறுப்பு ஒவ்வொரு அலுவலரிடமும் ஒப்படைக்கப்பட்டு, பணிகள் சிறப்புற நடைபெற்று வருகின்றன.

இவை தவிர, வறட்சி நிவாரணப் பணிகளுக்கு மேற்கொண்டு கூடுதலாக ரூ. 2.17 கோடி நிதி ஒதுக்கீடு அரசிடம் கேட்கப்பட்டுள்ளது. ஆற்று நீர் வீணாகக் கடலில் கலப்பதைத் தடுப்பதற்காகவும், பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேற்குத் தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 17 இலட்சம் செலவில் உலக்கை அருவி ஆற்றுத் திட்டமும், ரூ. 3 இலட்சம் செலவில் பள்ளப்பாலம் திட்டமும், விரைவாக நடைபெற்றுவருகின்றன. வள்ளி ஆற்றில் தடுப்பு அணை கட்ட ரூபாய் 2.25 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. முதல் முறையாக இம்மாவட்டத்தில் அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் 3 இடங்களில் ரூ. 3 லட்சம் செலவில் கசிவு நீர்க் குட்டைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. ரூ. 11 கோடி செலவில் பொய்கையாறு அணைத் திட்டமும், ரூ. 8 கோடி செலவில் கோதையாறு நவீனப்படுத்தும் திட்டமும் அரசு பரிசீலனையில் உள்ளது.

## சென்னைச் சாலைகளுக்கு இசை மேதைகளின் பெயர்கள்

முசிறி சுப்பிரமணியம் அவர்கள் இயல், இசை, நாடக மன்றத்தில் 25 ஆண்டுகள் தலைவராக இருந்தார். அவர் வசித்துவந்த வீடு மயிலாப்பூர் ஆலிவர் ரோட்டில் இன்னும் இருக்கிறது. அரசியல் தலைவர்கள் பெயரைத் தெருக்களுக்கு வைப்பதுபோல, சங்கீத வித்வான்கள் பெயரையும் தெருக்களுக்கு வைத்துக் கௌரவிக்க வேண்டுமென்று செம்மங்குடி சீனிவாச ஐயர் போன்றவர்கள் மாண்புமிகு முதல்வரிடம் சொல்லியிருந்தார்கள்.

அதையொட்டி முசிறி சுப்பிரமணியம் வசித்த வீடுள்ள ஆலிவர் ரோட்டை முசிறி சுப்பிரமணியம் ரோடு என்று பெயர் வைக்க வேண்டுமென்றும், அத்துடன் கபாலீஸ்வரர் கோயிலில் அடிக்கடி விடிய விடிய பஜனை, பாட்டுகள் பாடி பக்தர்களை மகிழ்வித்த பாபநாசம் சிவன் பெயரை மயிலாப்பூரில் உள்ள பேலஸ் ரோடுக்கு வைக்க வேண்டும் என்றும் முதல்வர் உத்தரவிட்டிருக்கிறார்கள். இந்தத் தகவலை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு வி. வி. சுவாமிநாதன் அவர்கள் தெரிவித்தார்.



புது டெல்லியில்

# பூக்குடைப் பேரணி விழா...

அ. ராஜமாணிக்கம், இணை இயக்குநர் (பொருட்காட்சி), செய்தி-மக்கள் தொடர்புத்துறை.

மொகலாய சக்கரவர்த்தி அக்பர்ஷா II காலத்திலிருந்து (1807-1837) ''பூல் வாலோன் -கி- சாயர் என்ற குடை பேரணிவிழா புதுடெல்லியில் நடைபெற்று வருகிறது. அக்பரின் மகன் மீர்ஷா ஜஹாங்கீர், பிரிட்டிஷ் கவர்னரான 'அஷிக்பால்ட் செட்டல்' என்பவரை அவமதித்ததற்காகக் கைது செய்யப்பட்டு அலகாபாத்திற்கு அனுப்பப்பட்டார். தன்னுடைய மகன் விடுதலை செய்யப்பட்டால், பூவேலைப்பாடுடைய விசிறிகள் செய்து மெஹருலியில் உள்ள தர்க்காவில் வைப்பதாக ஜஹாங்கிரின் அன்னை மும்தாஜ் மஹால் ஆண்டவனை வேண்டினார்.

பின்னர், ஜஹாங்கீர் கவர்னரால் மன்னித்து விடுதலை செய்யப்பட்டார். தன்னுடைய வேண்டுதலை நிறைவேற்றும் வகையில் மும்தாஜ் மஹால் பூவேலைப்பாடுடைய விசிறிகள் செய்து டெல்லிக்கு அருகிலுள்ள மெஹருலி கிராமத்தில் தர்க்காவில் மட்டுமல்லாது, அங்குள்ள காளி கோவிலிலும் வைத்து வணங்கினார். பின்னர், இந்துக்களும் முஸ்லிம்களும் ஒன்றாக இணைந்து இவ்விழாவினை ஆண்டுதோறும் கொண்டாடினர். விழாவினையொட்டி கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்று வருகின்றன. இவ்வாறு இந்துக்களும் முஸ்லீம்களும் இணைந்து 1942 வரை விழா எடுத்தனர். இதை விரும்பாத பிரிட்டிஷ் அரசு 1942ஆம் ஆண்டில், இவ்விழாவினைத் தடைசெய்தது.

இந்தியப் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் மத




ஒற்றுமையை வலியுறுத்தும் இவ்விழாவினை 1961ஆம் ஆண்டிலிருந்து மறுபடியும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்தார். இந்திய நாட்டின் பல்வேறு மாநிலங்கள் அந்தந்த மாநிலத்திலிருந்து கலைக்குழு ஒன்றையும், பூவேலைப்பாடுடைய விசிறிகள் இரண்டையும் அனுப்பி வைத்து இவ்விழாவில் ஆண்டுதோறும் பங்கு கொள்கின்றன.

தமிழ்நாடு அரசு ஒவ்வொரு ஆண்டும் தவறாது இவ்விழாவில் சிறப்பாகக் கலந்து கொள்கிறது. தமிழ்நாடு அரசின் செய்தித்துறை ஒவ்வொரு ஆண்டும் கலைக்குழு ஒன்றையும், பூ வேலைப்பாடுடைய குடைகள் இரண்டையும் அனுப்பி வைத்து விழாவில் பங்கு கொள்கிறது. கடந்த மூன்று ஆண்டுகளாகச் சிறந்த கலை நிகழ்ச்சி நடத்தியதற்காகவும்,

பூவேலைப்பாடுடைய குடைகளை அனுப்பி வைத்ததற்காகவும் உள்ள இரண்டு பரிசுகளையும் தமிழ்நாடு அரசு 1985,1986 1987 ஆகிய மூன்று ஆண்டுகளிலும் தொடர்ந்து பெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1986ஆம் ஆண்டு சிறந்த கலை நிகழ்ச்சி மற்றும் அழகிய பூவேலைப்பாடுடைய குடைகளுக்கான இரு பரிசுகள் தமிழ்நாடு அரசு பெறுவதாக அறிவிக்கப்பட்டது. அப்பரிசுகளைக் கடந்த 10.10.87ஆம் நாளன்று நடைபெற்ற விழாவில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் புது டெல்லியில் வழங்கினார்கள். தமிழ்நாடு அரசின் சார்பில் மாண்புமிகு தமிழக வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் பரிசுகளைப் பெற்றுக் கொண்டார்.



இந்த ஆண்டும் (1987) பாரதியாரின் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு அமைத்த கிராமிய நடனங்களைச் சென்னையைச் சேர்ந்த 'லவ் பேர்ட்ஸ்' நடனக்குழுவினர் அளித்தனர். இரண்டு பூவேலைப்பாடுடைய விசிறிகளும் விழாவில் பங்கு பெற்றன. இந்த ஆண்டு சிறந்தகலை நிகழ்ச்சி மற்றும் சிறந்த பூவேலை பாடுடைய குடைகளுக்கான இரு பரிசுகளை தமிழ்நாடு அரசு பெறுவதாக விழாவில் அறிவிக்கப்பட்டது. இப்பரிசுகள் அடுத்த ஆண்டு நடைபெறும் இவ்விழாவில் வழங்கப்படும்.

# சுயவேலை வாய்ப்புத் தரும் புதிய கல்வித் திட்டம்

வாழ்க்கைக் கல்விக்கான முதலமைச்சர் திட்டத்தின் தொடர்பாக 1 முதல் 12 வகுப்பு வரைக்கான பாடத்திட்டங்களை மாற்றி அமைக்க டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்நிலைக்குழு தமது அறிக்கையை அரசிடம் அளித்துள்ளது.

1988ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முதல் 1,3,6 ஆகிய வகுப்புகளில் பாடத் திட்டங்கள் மாற்றி அமைக்கப்படும். மீதம் உள்ள வகுப்புகளுக்கு 1989 முதல் பாடத்திட்டங்கள் மாற்றி அமைக்கப்படும். புதிய முறைத் தேர்வுகள் 1989ஆம் ஆண்டு முதல் நடைபெறும்.

1 முதல் 10 வகுப்பு வரை பயில்பவர்கள் ஏதேனும் ஒரு தொழிலைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற வகையில் பாடத்திட்டம் மாற்றி அமைக்கப்படுகிறது. +1 மற்றும் +2 வகுப்புகளை மாணவர்கள் முடித்தவுடன் தற்போதுள்ள முறைப்படி சுய வேலைக்குச் செல்ல இயலா நிலை உள்ளது.

எனவே, பள்ளியைவிட்டு மாணவர்கள் வெளியே வந்தவுடன் சுயவேலைக்குச் செல்லும் வகையில் 42 வகையான தொழிற் பாடப்பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. அதற்கேற்ப ஆங்காங்கு பள்ளிகளுக்கு அருகிலுள்ள தொழிற்சாலைகள் மூலம் மாணவர்களுக்குப் பாடங்கள் கற்றுத் தரவும் பள்ளிகளுக்கு அருகிலுள்ள நிலங்களில் வேளாண்மை தொழில்கள் ,வேளாண்மைப் பொறியியல் தொழில்கள் ஆகியவற்றைக் கற்றுத் தரும் வகையிலும், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அறிவியல் முறையிலான விஞ்ஞானக் கல்வியை 1 முதல் 12 வகுப்பு வரை இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழ் நாடு மாநிலம்தான் கொண்டு வந்துள்ளது.

மேல்நிலைக் கல்வியில் விவசாயம் பொருளாதாரம், தொழிலியல் பொருளாதாரம் போன்ற புதிய முறைகளைப் புகுத்துவதற்கும் அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இதற்காக அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தர் திரு வி.சி.குழந்தைசாமி அவர்கள் தலைமையில் 16 பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

(மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சர் திரு சி.பொன்னையன் அவர்கள் 11.11.87 அன்று சட்ட மன்றத்தில் ஆற்றிய உரையிலிருந்து)



# மகாகவி பாரதியார்

## வாழ்க்கைக் குறிப்பு

**1882**— சிதம்பரனார் மாவட்டம், எட்டையபுரத்தில் சின்னசாமி அய்யர், லட்சுமி அம்மாள் தம்பதியருக்கு 11.12.1882 (சித்திரபானு ஆண்டு கார்த்திகை 27 மூலம்) மகனாகப் பிறந்தார்.

**1887**— இவரது ஐந்தாம் வயதில் தாயார் மறைவு.

**1889**— தந்தையார் வள்ளியம்மாளை மறுமணம் புரிந்துகொண்டார். எட்டையபுரத்தில் தொடக்கப் பள்ளிக் கல்வி.

**1892**— தந்தையார் மாவட்டத்திலேயே முதன்முதலாகப் பருத்தி அரவை ஆலையை எட்டையபுரத்தில் நிறுவினார்.

**1893**— பதினோரு வயதுப் பாலகன் சுப்பிரமணியன் ஆசுகவிக்காகப் புலவர் பெருமக்களால் பாரதி (கலைமகள்) என்று பட்டம் சூட்டப்பட்டது.

**1894**— சிற்றன்னைக்கு லட்சுமி என்ற பெண் குழந்தை பிறப்பு. பாரதியார் திருநெல்வேலி இந்துக்கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் மூன்றாண்டுகள் மூன்று, நான்கு, ஐந்தாம் படிவங்களில் பயின்றார்.

**1897**— சிற்றன்னைக்கு விசுவநாதன் என்ற புதல்வர் பிறப்பு, கடையம் செல்லப்பா அய்யரின் மகள் 7 வயதுடைய செல்லம் மாளுக்கும் 14 வயதான பாரதிக்கும் கடையத்தில் திருமணம்.

**1898**— இவரது பதினைந்தாவது வயதில் தந்தை மறைவு, அத்தை குப்பம்மாளின் அழைப்பின் பேரில் காசிக்குச் சென்று, ஜெய் நாராயண பள்ளியில் படிப்பைத் தொடர்ந்து, இந்தியிலும், சமஸ்கிருதத்திலும் நல்ல தேர்ச்சி பெற்றார்.

**1899**— காசியில் .அலகாபாத் பல்கலைக் கழகத்தின் என்டிரான்ஸ் தேர்வில் முதல் வகுப்பில் தேறினார்.

**1902**— எட்டையபுரம் அரசவையில் மூன்றாண்டுகள் பாரதியார் வேலை பார்த்தார்.

**1904**—

ஆகஸ்ட் முதல் மூன்று மாதங்கள் மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியர் பணி. நவம்பரில் சுதேசமித்திரன் அதிபரும், ஆசிரியருமான ஜி. சுப்பிரமணிய அய்யர் அவர்களின் அழைப்பின்பேரில் சென்னை வந்து, 'சுதேசமித்திரன் உதவி ஆசிரியராகப் பணியில் சேர்ந்தார்.

**1905**— மூத்த பெண் தங்கம்மாள் பிறப்பு. வங்கப் பிரிவினையை எதிர்த்து வங்கத்தில் எழுந்த கிளர்ச்சியை ஒட்டி சென்னைக் கடற்கரைக் கூட்டத்தில் பாரதியார் பாடிய **'வங்கமே வாழிய'** என்ற பாடல் செப்டம்பர் 15 மித்திரனில் முதன்முதலாக வெளியிடப்பட்டது. காசியில் கோகலே தலைமையில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் பங்கேற்பு.

**1906**— டிசம்பரில் கல்கத்தாவில் தாதாபாய் நௌரோஜி தலைமையில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் பங்கேற்பு.

கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டில் கலந்துகொண்டு விட்டுத்திரும்பும்போது டம்டம் நகரில் சகோதரி நிவேதிதா தேவியைச் சந்தித்து ஆசி பெற்றார். மண்டயம் எஸ்.என். திருமலாச்சாரியார் என்ற தேசபக்தர் சென்னையில் அச்சிட்டு நடத்திய 'இந்தியா' வார ஏட்டிற்குப் பாரதியார் ஆசிரியர் ஆனார்.

வ.உ.சிதம்பரனார் 'இந்தியா' ஏடு அலுவலகத்தில் பாரதியாருடன் சந்திப்பு.

**1907**— வங்கத்தலைவர் விபின் சந்திரபாலைச் சென்னைக்கு வரவழைத்துதிருவல்லிக்கேணிக் கடற்கரையில் சொற்பொழிவு நிக்ழ்த்த வைத்தார். டிசம்பரில் சூரத்தில் நடந்த காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு, மராட்டிய மாவீரர் லோகமான்ய திலகரின் தீவிரவாதக் கொள்கையைப் போற்றினார்.

**1908**— லாலா லஜபதிராய் நாடு கடத்தப்பட்டதைக் கண்டித்துச் சென்னையில் நடந்த கூட்டத்தில் பாரதியார் உணர்ச்சிமிகு பாடல்களைப் பாடினார். வ.உ. சிதம்பரனாரின் தன்னலமற்ற நாட்டுப் பணியைப் போற்றியும், சுதேசிக் கப்பல் கம்பெனிமுயற்சியை ஆதரித்தும் பத்திரிகையில் எழுதினார். செப்டம்பரில் 'இந்தியா' ஏட்டிற்குத் தடை. பாரதியார் மீது காவல் துறை நடவடிக்கை எடுக்கக்கூடும் என்ற நிலையைக் கருதி, நண்பர்கள் ஆலோசனைப்படி புதுச்சேரி போய்ச் சேர்ந்தார். மண்டயம் சீனிவாசாச்சாரியார் புதுவை வந்து சேர்ந்ததும், சென்னையில் நிறுத்தப்பட்ட 'இந்தியா' வார ஏடு பாரதியாரைப் பொறுப்பாசிரியராகக் கொண்டு அக்டோபர் 10 முதல் புதுவையிலிருந்து வெளி வரத் தொடங்கியது.

**1909**— இரண்டாவது மகள் சகுந்தலா பிறப்பு

**1910**— அரவிந்தர் 'கர்மயோகின்' என்ற ஆங்கில ஏட்டை நடத்தி வருவதைக் கண்ட பாரதியார், அதன் கருத்துக்களைத் தமிழில் தெரிவிக்க விரும்பி, ஜனவரி முதல் 'கர்மயோகி' என்ற திங்கள் ஏட்டை ஆரம்பித்தார். பாரதியாரால் தம்பி என்று உறவாடப்பட்ட பரலி சு. நெல்லையப்பர் புதுச்சேரி வந்து சூரியோதயம் பத்திரிகையில் துணையாசிரியராகச் சேர்ந்தார். ஏப்ரலில் புதுவைக்கு வந்த அரவிந்தருடன் பாரதியார் நெருங்கிய தொடர்பு கொண்டு வேத ஆராய்ச்சி செய்தார். அக்டோபரில் பாரிசிலிருந்து புதுவைக்கு வந்த வ.வெ.சு. அய்யர் பாரதியாரைச்சந்தித்தார். அரவிந்தர், வ.வெ.சு. அய்யர், சீனிவாசாச்சாரியார் ஆகியோருடன் புதுச்சேரிக் கடற்கரையில் இலக்கியம், தத்துவம், துறவு நிலை குறித்து விவாதித்தார்.

**1913**— புதுவையில் தம் நண்பரும், அரிஜனச் சீடருமான ரா.கனகலிங்கத்திற்குப் பூணூல் அணிவித்துப் புரட்சி செய்தார்.

**1918**— நவம்பர் 20-ல் பாரதியார் புதுவையை விட்டு பிரிட்டிஷ் இந்தியாவுக்கு வந்தார். வில்லியனூருக்கு அருகில் பாரதியார் கைது செய்யப்பட்டு, கடலூரில் சிறை வைக்கப்பட்டார். டிசம்பர் 14-ல் பாரதியார் விடுதலையானார். மனைவியின் ஊரான கடையத்தில் தங்கினார்.

**1919**— மார்ச்சு சென்னை கதீட்ரல் சாலையில் இராஜாஜி அவர்களின் இல்லத்தில் காந்தியடிகளைச் சந்தித்தார்.

**1920**— ஆகஸ்டு மித்திரனில் மீண்டும் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார்.

**ஆருயிர் பாரதியே!**

கம்பனைப் பெற்ற நாட்டில்
கவிமணம் ஓயும் நாளில்
வம்பரின் மந்தை தன்னில்
வளர்ந்திடத் தேச பக்தி
உம்பர் மா உலகதாக
உயர்த் திடத் தமிழகத்தை
அம்புவி வந்த வீர
அருங் கவி பாரதியே!

[1934-ஆம் ஆண்டில் பாரதி நினைவு நாளில் 'சுதந்திரச் சங்கு' என்ற இதழில் அமரர் சங்கு சுப்பிரமணியம் அவர்கள் எழுதியது.]

அனுப்பியவர்:
கவிஞர் க.அ. ஆறுமுகன்.

> வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால்-அதில்
> மானுடர் வேற்றுமை இல்லை
> எண்ணங்கள் செய்கைகள் எல்லாம்-இங்கு
> யாவர்க்கும் ஒன்றெனக் காணீர்!
>
> —மகாகவி பாரதியார்

1921— ஜூன் மாதம் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில்யானை 'அர்ச்சுனன்' பாரதியார் போர்த்தியிருந்த மேலாடையைத் துதிக்கையால் பிடித்திழுத்து அவரைக் கீழே தள்ளியது. குவளை கிருஷ்ணமாச்சாரி ஓடிவந்து யானையின் காலடியிலிருந்து பாரதியாரைக் காப்பாற்றினார். காயங்களுக்காக இராயப்பேட்டை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்.

ஆகஸ்டு 23-தீராதவயிற்றுப் போக்குடன் மித்திரன் அலுவலகப் பணியிலிருந்து ஒரு வாரம் விடுப்பில் சென்றார்.

செப்டம்பர் 11 ஞாயிறு இரவு தாண்டி (12-9-1921) திங்கட்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் தம் 39 வயது முடிவதற்குள் சென்னை திருவல்லிக்கேணி துளசிங்கப் பெருமாள் கோயில் தெரு, 67-ஆம் எண் வீட்டில் இயற்கை எய்தினார்.

**நினைவில் பாரதியார்**

1947— ஆகஸ்டு 13-இல் எட்டையபுரத்தில் **பாரதியார் மணி மண்டபம்** மூதறிஞர் இராஜாஜி அவர்களால் திறக்கப்பட்டது.

1949— சென்னை மாநில முதலமைச்சர் ஓ. பி. இராமசாமி ரெட்டியார் பாரதி நூல்களின் பதிப்புரிமையைப் பாரதியாரின் இளவல் சி. விசுவநாதய்யரிடமிருந்து பெற்று, அரசுடைமையாக்கினார்.

1960— செப்டம்பர் 11-ல் பாரதியார் நினைவாக பதினைந்து காசு அஞ்சல் தலையை மைய அரசு வெளியிட்டுச் சிறப்பித்தது.

1973— பாரதியார் எட்டையபுரத்தில் பிறந்தவீடு அரசுடைமையாக்கப்பட்டு 12-5-1973 அன்று **பாரதியார் நினைவு இல்லமாகத்** திறந்து வைக்கப்பட்டது.

1976— சென்னை பைகிராப்ட்ஸ் சாலைக்குப் **பாரதியார் சாலை** எனப் பெயர் சூட்டப்பட்டது.

1981— தமிழக அரசின் சார்பில் டிசம்பர் 11, 12, 13 ஆகிய நாட்களில் எட்டையபுரத்தில்பாரதி நூற்றாண்டு தொடக்க விழா சிறப்பாக நடைபெற்றது.

1982— கல்கத்தாவில் தமிழகஅரசால் அளிக்கப்பட்ட பாரதியார் முழு உருவ வெண்கலச் சிலையை மாண்புமிகு மேற்கு வங்க முதல்வர் ஜோதிபாசு அவர்கள் தலைமையில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் திறந்து வைத்தார்.

எட்டையபுரத்தில் பாரதி மணிமண்டபத்தை நிர்வகித்து வந்த குழுவினரிடமிருந்து தமிழக அரசு அதைப் பெற்று ரூ. 2½ இலட்சம் செலவில்புதுப்பித்தது.

எட்டையபுரத்தில் 40 ஏக்கர் நிலப்பரப்பில் 1¼ கோடி ரூபாய் செலவில் பாரதியார் நூற்றாண்டு நினைவு மகளிர் பாலிடெக்னிக் நிறுவப்பட்டுள்ளது.

1984— மகளிர்க்கென்று தனிப் பல்கலைக் கழகம் அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம் என்ற பெயரில் கொடைக்கானலில் நிறுவப்பட்டு 2-3-1984 முதல் இயங்கி வருகிறது.

1985— கோயம்புத்தூரில் பாரதியார் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது.

1987— பிப்ரவரி 4-ல் புதுடெல்லி பாரதிநகர், லோதி சாலையில் 600 சதுர மீட்டர் பரப்புள்ள இடத்தில் 10 அடி உயரத்தில் தமிழக அரசால் நிறுவப்பட்ட மகாகவி பாரதியின் உருவச் சிலையை அன்றைய மேதகு குடியரசுத் துணைத் தலைவர் இன்றைய மேதகு குடியரசுத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் தலைமையில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் திறந்து வைத்தார்.

தொகுப்பு: வ. இரா



"மின்சார கோளாறு காரணமாக என் பம்ப் செட் பழுதடைந்த போது..."

# "நான் அதை சீக்கிரமாகச் சரி செய்தேன், யுனைடெட் இந்தியா இன்ஷூரன்ஸின் உதவியால்".

"நல்ல மகசூலைப் பெற என் வயலில் ஒரு பம்ப்செட்டை அமைத்தேன். நான் முதலில் செய்த முக்கிய வேலை, யுனைடெட் இந்தியாவின் விவசாய பம்ப்செட் இன்ஷூரன்ஸ் எடுத்ததுதான். அதனால், என் பம்ப்செட் கெட்டுப் போன போது யுனைடெட் இந்தியா இன்ஷூரன்ஸ் தந்த உதவியால் அதை சீக்கிரமே சரி செய்தேன்."

மின்னல், நெருப்பு, மின்சார மற்றும் இயந்திரக் கோளாறுகள் போன்ற காரணங்களால் உங்கள் பம்ப்செட் பழுதடையக்கூடும். அல்லது அது திருடு போகவும் கூடும். யுனைடெட் இந்தியாவின் விவசாய பம்ப்செட் இன்ஷூரன்ஸ் மூலம் நஷ்டத்திலிருந்து பாதுகாப்பு பெறுங்கள்.

**யுனைடெட் இந்தியா இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்**
(ஜெனரல் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியாவின் ஒரு துணை நிறுவனம்)
24, ஒயிட்ஸ் ரோடு, சென்னை 600 014.

**யுனைடெட் இந்தியா விவசாய பம்ப் செட் இன்ஷூரன்ஸ்**
அருகில் உள்ள யுனைடெட் இந்தியாவின் அலுவலகத்தையோ ஏஜன்டையோ அணுகுங்கள்.

HTA-7053

# கோலமிகு கொல்லிமலை



**கோ**ல்லிமலை மழை வளம் மிக்கது. இதன் இயற்கை எழிலையும் ஈடுஇணையற்ற வளத்தையும், சங்கப்பாடல்கள் பல எடுத்தியம்புகின்றன. கடையெழுவள்ளல்களில் ஒருவனான ''ஓரி'' இம்மலைக்கு உரியவனாக இருந்திருக்கின்றான். வில்லாண்மையில் ஈடும், எடுப்பும் இன்றித் திகழ்ந்த காரணத்தால் ''வல்வில் ஓரி'' என்று புலவர்களால் பாராட்டப் பெற்றான்.

கொல்லிமலை, கடல் மட்டத்திலிருந்து ஏறத்தாழ 3000 அடி முதல் 4350 அடி உயரம் வரை வானளாவ நின்றும், 224.83 சதுர கி.மீ. பரப்பளவும் கொண்டது. மலையின் மிகவுயர்ந்த இடமான குழிவளைவு என்ற இடம் கடல் மட்டத்திலிருந்து சுமார் 4368 அடி உயரம் உள்ளது. கொல்லிமலைப் பரப்பில் 14 நாடுகள் உள்ளன. இவற்றில் 246 சிறு கிராமங்கள் அடங்கியுள்ளன. இம்மலைவாழ் மக்கள் ''மலையாளிகள்'' என அழைக்கப்படுகின்றனர்.

தீராத பிணிகளையும் தீர்த்து வைக்கும் மூலிகைகள் பல கொல்லிமலையில் கிடைக்கின்றன. பலவகையான பழங்களின் உற்பத்திக்குக் கொல்லிமலை பெயர் பெற்றது. முக்கனிகளில் பலாவும், வாழையும் இங்கு ஏராளம். கொல்லிமலைக் காடுகள் தொடர்ச்சியாக இல்லாமல் ஆங்காங்கு அமைந்துள்ள சரிவுகளில் சிறுசிறு பகுதிகளாக அமைந்திருப்பதாலும், போதுமான அளவு உணவு, நீர், உறையுள் கிடைக்காததாலும், பெரும் வன விலங்குகளான யானை, புலி, காட்டெருமை இங்கு இல்லை. முள்ளம்பன்றி, முயல், காட்டு நாய்கள் அதிகம் காணப்படுகின்றன. இம்மலைப்பகுதி சேலத்திலிருந்து 90 கி.மீ. தொலைவிலும், நாமக்கல்லிலிருந்து 45 கி.மீ. தொலைவிலும் உள்ளது. இங்கு செல்ல நாமக்கல் மற்றும் சேலத்திலிருந்து பேருந்துகள் உள்ளன.

## அருள்மிகு அறப்பளீசுவரர் ஆலயம்

கொல்லிமலையில் உள்ள அறப்பளீசுவரர் ஆலயம் மிகத் தொன்மையான தோற்றம் உடையதாக உள்ளது. அப்பரும், அருணகிரியும் இவ்வாலயத்தைப் புகழ்ந்து பாடியுள்ளார்கள். ஆலயக் கருவறையின் வெளிப்பக்கத்தில் கல்வெட்டுகள் உள்ளன.

கொல்லிமலையின் சிறப்பினை அறிந்த தமிழக அரசு, அதனைச் சிறந்த சுற்றுலாப்பகுதியாக மாற்றுவதற்கு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இங்கு வரும் சுற்றுலாப்பயணிகள் வசதிக்காக ஒரு இளைஞர் விடுதியினைக் கட்டுவதற்கு முதற்கட்டமாக ரூ. 5.00 இலட்சம் நிதி வழங்கியுள்ளது. விரைவில் பணி துவக்கப்பட உள்ளது. அண்ணா போக்குவரத்துக் கழக நிதியுதவியுடன் ஒரு தொலைநோக்கிக்கூடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் இரண்டு குடில்கள் கட்டப்பட்டு வருகின்றன.

**பழத்தோட்டம் :** அருள்மிகு அறப்பளீசுவரர் ஆலயத்தின் அருகில் ஒரு பழத்தோட்டம் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சுற்றுலாப்பயணிகளுக்குப் பொழுதுபோக்கு வசதிகளை அதிகரிக்கும் நோக்கோடு ஒரு செயற்கை ஏரி ஏற்படுத்தி அதில் படகு சவாரி விடும் திட்டமும் உள்ளது.

**ஆகாயகங்கை:** கொல்லிமலையில் 150 அடி உயரத்திலிருந்து ஓடிவரும் நீர்வீழ்ச்சி 'ஆகாய கங்கை' என அழைக்கப்படுகிறது. இது மிகச் சிறந்த அருவியாகும். இந்த நீர்வீழ்ச்சியில் ஆண்டு முழுவதும் நீர் கொட்டிக்கொண்டே இருக்கிறது. கொல்லிமலைக்கு வரும் சுற்றுலாப்பயணிகள் எளிதில் இந்த அருவிக்குச் செல்ல வேண்டும், என்ற நோக்கோடு, படிக்கட்டுகள் அமைத்திட அரசு ரூ.12 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது.

# புகையில்லா அடுப்புகள் - தமிழ்நாட்டின் சாதனை


ம. கனகசபாபதி, இ.ஆ.ப.
அரசு துணைச் செயலாளர்,
ஊரக வளர்ச்சித் துறை,


நம் நாட்டிலுள்ள மரங்களிலே ஐம்பது முதல் எழுபது சதவீத மரங்களை நாம் வெட்டி விறகு களாக்கி, அடுப்பிற்குள் தள்ளி எரித்துவிடுகிறோம். கிராமங் களில் 90 சதவீத மக்களும், நக ரங்களில் 25 சதவீத மக்களும் விறகுகளையே சமையலுக்காகப் பெரிதும் பயன்படுத்துகின்றனர். இதன் விளைவாக நாட்டின் வன வளம் நாளுக்கு நாள் குறைந்த வண்ணம் உள்ளது. கிராமங்களி லுள்ள மரங்களும் தொடர்ந்து வெட்டிச் சாய்க்கப்படுவதால், மழைவளம் இன்றி, வறட்சி நிலை அதிகரிக்கிறது.

மூன்று குமிழ்களைக் கொண்ட சாதாரண விறகு அடுப்புகளே பெரும்பாலும் பயன்படுத்தப்படு கின்றன. இவற்றினால் 5 முதல் 10 சதவீதம் வெப்பம் மட்டுமே சமையலுக்கு எரிபொருளாக உதவுகிறது. எஞ்சியவை பயனா வதில்லை. இதன் விளைவாக விறகுகளின் பெரும்பகுதி வீணா கிறது. அதனால் விறகுகள் மேலும் தேவைப்பட்டுக்கொண்டே இருக் கின்றன. எனவே, குறைந்த அள வில் விறகுகளை எரித்து, அதிக அளவில் வெப்பம் தரக்கூடிய அடுப்புகளை நாம் பயன்படுத்தி யாக வேண்டும்.

சற்றே வசதி பெற்றுள்ள பெண்கள் விறகுகளை விலைக்கு வாங்கவும், வசதியற்றோர் விறகு களைத் தேடி அலையவும், ஆண் டொன்றில் 200 முதல் 300 நாட் களைச் செலவழிக்கிறார்க ளென்று கணக்கிடப்பட்டுள்ளது. காடுகளிலும், கழனிகளிலும், வயல்களிலும், வரப்புகளிலும், மேடுகளிலும், பள்ளங்களிலும் கூடைகளைக் கரங்களில் சுமந்து கொண்டு, அல்லது இடுப்புகளில் இடுக்கிக்கொண்டு, வெய்யிலிலே அலைந்து திரியும் காட்சி நம்மை நெக்குருகச் செய்கிறது. ஒரு சாதாரண சமையலுக்கு இத் பரவி துன்புறுத்துவதைக் காண் கிறோம்.

நிலைக்கும்போது, பெண்களின் கரங்களிலே சூடுகள் பட்டு புண் கள் ஏற்படுகின்றன. சட்டி பானை களின் அடி முதல் மேல் நிலை வரை கரி படர்ந்த அசுத்த நிலை; இதைத் தூய்மைப்படுத்து வதே பெண்களுக்குப் பெரும் பாடு.

ஊது குழலை எடுத்து அடுப் பில் ஊதும்போது ஏராளமான புகை வாய்வழியே உடம்பிற்குள் புகுந்துவிடுகிறது. இருமல் வராது, கண்களில் நீர் பெருக்கி, சேலை முந்தானையால் துடைக்காது, அடுப்பைச் சரிசெய்யும் பெண் களைக் கண்டதுண்டா? இப்புகை 'மூச்சிறைப்பு' (Asthma) நோய்க்கு மூல காரணமாகி விடுகிறது.

---

**தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், புகை யில்லா அடுப்புகளை அமைக்கும் திட்டம் 1983-84ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப் பட்டு, ஆண்டுக்கு ஆண்டு இத்திட்டத்தின் மூலம் அமைக்கப்படும் அடுப்புகளின் எண்ணிக் கையும் பெருமளவு ஏற்றம் கண்டு வருகிறது.**

**1986-87இல் தமிழகத்தில் 1,16,971 அடுப்புகள் அமைக்கப்பட்டன. முந்திய ஆண் டைக் காட்டிலும் ஏறக்குறைய 17,000 அடுப்புகள் அதிகமாக அமைக்கப்பட்டன.**

---

தவிர, பெண்களுக்கும், புகை சூழும் அடுப்புகளினால் பெரும் கேடுகள் விளைகின்றன. அவர் களின் உடல் நலம், சுற்றுச்சூழல் களைக் கருத்தில் கொண்டும் அடுப்புகள் அமைப்பில் ஒரு புதிய உத்தியை நாம் ஏற்படுத்த வேண் டியுள்ளது.

விறகுகளைக் கொண்டு சமை யல் செய்யும் தற்போதுள்ள திறந்த அடுப்புகளினால், சமை யலறை முழுவதும் புகை மண்டல மாகக் காட்சியளிக்கின்றது. பல நேரங்களில் சமையல் பாத்திரம் எங்கே, சமைக்கும் பெண்கள் எங்கே என்று கண்ணில் நீரை வடித்துக்கொண்டு தேட வேண் டிய நிலையும் உள்ளது. பற்பல சந்தர்ப்பங்களில், வீடு முழுவதும் புகை புகுந்து, வெகு துரிதமாகப் பரவி துன்புறுத்துவதைக் காண் கிறோம்.

னை பெரும் தொல்லையா? சிந்திக்க வேண்டிய நிலை இது வன்றோ?

விறகுகளைச் சேகரித்தாயிற்று. அது காய்ந்ததா அல்லது ஈரமா? கட்டை விறகா? குச்சி விறகா? இவற்றின் பின்னாலே ஒரு பெரும் தொல்லை காத்திருக் கிறதன்றோ? ஈர விறகினால் புகை, குச்சி போன்றவை சீக்கிர மாக எரிந்துபோய் விடுகின்றன.

சமையலறையைச் சுற்றி ஒரு நோட்டமிடுங்கள். புகை, ஒட் டடை போட்டியிட்டுக்கொண்டு பற்பல கோலங்களில் கருப்பு வண்ணத்தில் காட்சி அளிக்கின் றன. விறகுகளை அடுப்பில் தள் ளும்போது, வெப்பம் அதிகரிப்ப தற்காக விறகுகளை இடம் மாற்

குடும்பச் சமையலுக்குத் தேவைப்படும் அதிகமான விறகு, அதனால் வெப்பம், புகை, அவற் றால் விளையும் துன்பம் தேவையா என்ற எண்ணம், பல ஆண்டுகளாகவே நம் உள்ளத்தில் கிளர்ந்தெழுந்துள்ளது. மாற்று வழி பற்றிச் சிந்தித்ததன் காரணமாக உருவாக்கப்பட்டது தான் ''புகையில்லா அடுப்பு''. புகையில்லா அடுப்பு இல்லத்தரசி களுக்கு ஒரு வரப்பிரசாதம்.

நாட்டின் நலன், வன வளம், மழை வளம், மக்களின் நன்மை, உடல் நலம் போன்ற அனைத் தையும் பாதுகாக்கும் திட்டம் தான் ''புகையில்லா அடுப்புத் திட்டம்''

''புகையில்லா அடுப்பு''த் திட் டத்தினை மைய அரசு உருவாக்கி

யுள்ளது. மாநில அரசுகள் மூலமாகத் நாடு முழுவதும் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் முக்கியத்துவம் கருதி, மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களின் இருபது அம்சத்திட்டத்தில் ஓர் அம்சமாக இது இணைக்கப்பட்டு, முனைப்புடன் செயல்படுத்தப்படுகிறது. சராசரியாக ஒரு புகையில்லா அடுப்பிற்கு ரூ. 42 மானியமாக அளிக்கப்படுகிறது.

புகையில்லா அடுப்புகளினால் நமக்கு எண்ணிறந்த நன்மைகள் கிடைக்கின்றன. அவற்றில் முக்கியமானவை கிராமங்களில் வாழும் மக்கள் விறகுகளை நாடி தொலைதூரம் அலையவேண்டிய நேரம் பெருமளவில் குறைகிறது. மேலும், பணச்செலவும் குறைகிறது. காரணம், புகையில்லா அடுப்பு குறைந்தவிறகில் நிறைந்த வெப்பத்தைத் தருகிறது. புகைபோக்கி அமைக்கப்பட்டுள்ளதன் விளைவாக, சமையலறையில் புகை பரவி, பெண்களின் சுவாசம் கெடுவது இல்லை. குறைந்த அளவு விறகினால், நிறைந்த சாணம் மிகுதி ஆகி விடுகிறது. அதன் விளைவாக, வேளாண்மைக்கு நிறைய இயற்கை உரம் கிடைக்கிறது.

உள்ளூரிலேயே கிடைக்கும் பொருள்களைக் கொண்டே, இவ்வித அடுப்புகளைக் கட்டலாம். இதனால், அதிக விலைக்குச் சமையல் அடுப்புகள் வாங்கும் நிலை தவிர்க்கப்படுகிறது. பணம் மிச்சமடைகிறது. அடுப்பை மூடி விடுவதன் காரணமாக, நாம் பாதுகாப்பு பெறுவதுடன், விபத்துக்களும் பெருமளவில் தவிர்க்கப்படுகின்றன; புகையை வெளியே தள்ளி விடுவதனால், பாத்திரங்கள் புகையடைந்து கருமையடைவதில்லையென்பது ஒருபுறமிருக்க, தேய்த்து, சுத்தம் செய்யும் சிரமமும் பெருமளவு குறைகிறது.

புகையில்லா அடுப்புகளைக் கட்டுவது மிகவும் எளிதானது. உள்ளூரிலேயே உள்ள கைவினைஞர்களால் இதனைச் செய்ய முடியும். இதன் காரணமாக வேலை வாய்ப்பு அதிகரிக்கிறது. புகையில்லா அடுப்புகளின் நன்மைகளையும் வசதிகளையும் பற்றி கிராம மக்கள் பெரிதும் உணரத் தலைப்பட்டு விட்டனர். ஊரக வளர்ச்சித் துறை இத் திட்டத்தினை முனைப்புடன் செயலாற்றி கிராமப் பெண்டிரின் வாழ்விலே அல்லல்களை அகற்றி, பெரும் மகிழ்வை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், புகையில்லா அடுப்புகளை அமைக்கும் திட்டம் 1983-84ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு, ஆண்டுக்கு ஆண்டு இத்திட்டத்தின் மூலம் அமைக்கப்படும் அடுப்புகளின் எண்ணிக்கையும் பெருமளவு ஏற்றம் கண்டு வருகிறது.

1986-87இல் தமிழகத்தில் 1,16,971 அடுப்புகள் அமைக்கப் பட்டன. முந்தைய ஆண்டினைக் காட்டிலும் ஏறக்குறைய 17,000 அடுப்புகள் அதிகமாக அமைக்கப்பட்டன. குறியீடுகளையும் சாதனைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கையில், 1984-85ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு, இத்திட்டத்தினை மிக வெற்றிகரமாகச் செயல்படுத்திவருவது நன்கு விளங்கும்.

இந்திய அளவிலே, 1984-85ஆம் ஆண்டிற்கென தமிழ்நாடு இரண்டாம் இடத்தைப்பெற்று, கேடயமும், சான்றிதழும் பரிசுகளாகப் பெற்றது. 1985-86ஆம் ஆணடில் தமிழ்நாடு நமது நாட்டில் முதலிடம் வகித்தது.

இலட்சக்கணக்கான ''புகையில்லா இல்லங்களை'' ''புகையில்லா அடுப்புகள்'' உருவாக்கியுள்ளன.

அதேபோன்று ஒரு கிராமத்திலுள்ள மக்கள் அனைவருமே புகையில்லா அடுப்புத் திட்டத்தை ஏற்றுக்கொண்டு, அவரவர்கள் வீடுகளில் இவ்வித அடுப்புகளை அமைத்துக் கொண்டார்களென்றால், அக் கிராமம் 'புகையில்லாக் கிராமம்'' என்று அழைக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 65 கிராமங்கள் இந்தப் பெயரைப் பெற்றுள்ளன.

புகையில்லா அடுப்புத்திட்டத்தின் மூலம் கிராமங்களில் சுற்றுப்புறச் சூழல் தூய்மையாகிறது. இயற்கையாகவே மாசு கட்டுப்படுத்தப்படுகிறது. எரிபொருள் மிச்சமாகிறது. மக்களின் உடல் நலமும் பாதுகாக்கப்படுகிறது.

## சாண எரிவாயுத் திட்டம் தமிழ்நாட்டிற்கு முதல் பரிசு



சாண எரிவாயு மற்றும் புகையில்லா அடுப்புகள் அமைக்கும் தேசியத் திட்டத்தை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு தொடர்ந்து மூன்றாண்டுகளாக இரண்டாம் பரிசைப் பெற்றுவந்தது. இவ்வாண்டு முதல் இடத்தைத் தமிழ்நாடு பெற்றுள்ளது.

இதற்கான பரிசை 11.11.87 அன்று டெல்லியில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு மத்திய எரிசக்தித்துறை அமைச்சர் திரு வசந்த் சாத்தே அவர்களிடமிருந்து, தமிழ்நாடு அரசின் சார்பில் ஊரக வளர்ச்சித்துறை ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் திருமதி வி.சந்திரலேகா இ.ஆ.ப. பெற்றுக் கொண்டார்.

**சாண எரிவாயுத் திட்டத்தின் கீழ் 13,120 கலன்களை நிறுவ வேண்டும் என்று மத்திய அரசு இலக்கு நிர்ணயித்தது. தமிழ்நாடு அரசு 19,335 கலன்களை அமைத்துச் சாதனை புரிந்துள்ளது. அதே போன்று 50,000 புகையில்லா அடுப்புகள் அமைக்க வேண்டுமென்ற இலக்கை மிஞ்சி 1 இலட்சத்து 16 ஆயிரத்து 971 அடுப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.**



# எழுதுகோல் தெய்வம் எழுத்தும் தெய்வம்

**கோவை இளஞ்சேரன்**

**'தொ**ழில்' -என்றால் உடல் உழைப்பு நினைவிற்கு வருகின்றது. அறிவோட்டம் கருத்தில் படுவதில்லை.

'தொழிலாளி' என்றால் உடல் உழைப்பவன் தோன்றுகின்றான்; அறிவைச் செயற்படுத்துபவன் 'அறிவாளி' என்றே பெயர் பெறுகின்றான்.

'தொழிற்சாலை' என்றால் பொறிகளும், துணைக்கருவிகளும், செய் பொருளும் காட்சியளிக்கின்றன;

தொழில், தொழிலாளி, தொழிற்சாலை பற்றிய உண்மைகள் இவைதாமா? இல்லை என்பது உணர்வில் படுகின்றது. இதனைப் பாரதியின் கருத்தோட்டத் தொடர்பில் அணுகலாம்.

1917இல் சுதேசமித்திரன் இதழில் ஒரு கட்டுரை வெளியாயிற்று. அக்கட்டுரையாளர் எழுதிய கருத்தைப் பாரதியார் பின்வருமாறு எடுத்து மொழிந்து எழுதினார்;

''தொழிலாளிகள் என்போர் கரத்தால் உழைத்து, வேலை செய்கிறார்களே என்று சிலருக்கு எண்ணமிருக்கலாம். இது தப்பு. சரீரத்தாலாகட்டும், புத்தியாலாகட்டும் முதலாளிக்குட்பட்டு வேலை செய்கிறவர்கள் எல்லாருமே **தொழிலாளிகள் என்று** அந்த வியாசம் எழுதியவர் சொல்கிறார்.

''குமாஸ்தாக்கள், உபாத்தியயர் முதலியவர்களும் தொழிலாளர்களே''-என எடுத்துமொழிந்த பாரதியார் ஒரு முடிவுரை முத்தாய்ப்பு வைத்தார்;

''எனவே,

என்போன்ற நூலாசிரியர்களும் தொழிலாளிகளே'' என்று தனக்கும் தொழிலாளி முத்திரை குத்திக்கொண்டார்.

இக்கருத்து பொருந்தாதது மன்று; புதியதும் அன்று; பழங்கால மரபாகும்.

அறிவின் செயற்பாட்டை நம் முன்னோர் ''புலத் தொழில்'' என்றனர். ''உவப்பத்தலைக்கூடி உள்ளப் பிரிதலைப் புலவர் தொழில்'' என்றார் திருவள்ளுவர். இதனைப் பாரதியார் ''கல்வியே தொழிலாக் கொண்டாய்'' என்றார். இவற்றால் புலவன் தொழிலாளியாகின்றான்.

குடிமக்களைக் காக்கக் கடுமை காட்டிக் குற்றங் கடிதல் ''வடு அன்று வேந்தன் தொழில்'' என்றார் வள்ளுவர். பாரதியார்,

''புவியாளுமோர் கடுந்தொழில் இனிதுணர்ந்தோர்'' என்றார். இங்கு வேந்தன் தொழிலாளி.

''காமம் எனவொன்றோ
கண்ணின்றென் நெஞ்சத்தை
யாமத்தும் ஆளும் தொழில்''

எனக் காமமும் ஏவுதல் தொழில் செய்கின்றது. காமம் என்பது அன்பின் அழுத்தந்தானே! பாரதியார்,

''உங்களுக்குத் தொழிலிங்கே அன்பு செய்தல்'' —என்றார். இங்கு அன்பும் ஒரு தொழில், அன்புடையோன் ஒரு தொழிலாளியாகிறான்.

உடல் உழைப்பை

''.................. தோள்
சக்திபெற்று நல்ல தொழில்
செய்யும் சக்திக்கு''-எனப்பாடிய பாரதியே,

''தொழில்'' என்னும் பொருள் தலைப்பில் கவிதை எழுதினார்.

''இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே'' என்று தொடங்கி,

''பாட்டும் செய்யுளும் கோத்திடுவீரே'' -எனப் பாட்டெழுதுவதையும் தொழிற்பட்டியலில் கோத்தார்.

மேலும்,

''**காவியம்** செய்வோம்நல்ல
காடுவளர்ப்போம்;
**கலை** வளர்ப்போம்; கொல்லர்
உலைவளர்ப்போம்;
**ஓவியம்** செய்வோம்நல்ல
ஊசிகள் செய்வோம்;
**உலகத்** தொழில் அனைத்தும்
உவந்து செய்வோம்''

என உலகத் தொழில்களில் காவியம் முதலிய கலைகளையும் தொடுத்தார்.

**கவிதைத் தொழிலாளி**

தொழிலகத்தில் தம்மை ஈடுபடுத்திக்கொண்ட பாரதியார் தாம் ஒரு நூலாசிரியர் என்ற வகையில் ஒரு தொழிலாளியானார். இதனை 'அவர் மேற்போக்காக எழுதினார்' என்பது பொருந்தாது. 'ஆழ்ந்த எண்ணங் கொண்டே இக்கருத்தை வடித்தார்' என்பதே பொருந்தும். மேலும், அழுத்தமாகச் சொன்னால், இதனைத் 'தம் வாழ்வின் நோக்காகவே கொண்டார்' என்று குறிக்கவேண்டும்.

தமது வாழ்வின் குறிக்கோள்களாகக் கொண்டவற்றை மூன்றாகத் தொகுத்துத் தமது உள்ளத்திற்கு ''இம்மூன்றும் செய்'' என்று ஆணையிட்டார். அம்மூன்றில் முதன்மைபெற்றது எது?

''நமக்குத் **தொழில்** கவிதை'' என்பது தம் தொழிலே, கவிதை எழுதுவதுதான் என்று கொண்டவர் பாரதியார். இவ்வாறு கவிதையைத் தொழிலாக எங்கோ ஓரிடத்தில் குறித்துள்ளார் என்பதன்று. இதில் இழையோட்டமானஎண்ணங்கொண்டிருந்ததால் வாய்ப்பு நேரும்போதெல்லாம் இக் 'கவிதைத் தொழில்' அவரால் பாடப்பட்டது.

கண்ணனைத் தாயாகப் பாடுபவர்

''யாண்டுமெக் காலத்திலும்-அவள்
இன்னருள் பாடுநற் றொழில் புரிவேன்''

என்று பாடினார்.

கண்ணனை மாணவனாக ஆக்கிக்கொள்கிறார்; அவனை,

''எனக்குத் தொழில் யாது''

என்று வினவச் செய்கிறார். அதற்கு விடை கூறுபவர்,

''. . . . . என்செய்யுளை எல்லாம்
நல்லதோர் பிரதியில் நாடொறும் எழுதிக் கொடுத்திடும்
தொழிலினைக் கொள்ளுதி''

—என்று கவிதையைப் படியெடுப்பதும் தொழிலாக்கினார்.

இக்கவிதைத் தொழிலில் மிகவும் உயர்ந்த தொழில் ஒன்றை அறிமுகம் செய்தார்.

''சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்'' -என்பது
கவிதைத் தொழிலில் மிகவும் உயர்ந்த தொழில்;
அதில் ஔவை ஒப்பற்றவள்''

என்று உயர்ந்த தொழிலாகக் கவிதைத் தொழிலைக் காட்டி அதற்கு ஔவையையும் சான்றாக்கினார். ஔவை வழியில் 'சுருங்கச் சொல்லும்' உயர்ந்ததொழிலைச் செய்ய முனைந்து 'புதிய ஆத்தி சூடி'' எழுதித் தாமும் மிக உயர்ந்த கவிதைத் தொழிலாளி ஆனார்.

இவ்வகையால் பாரதியார் ஒரு **கவிதைத் தொழிலாளி**: மிக உயர்ந்த கவிதைத் தொழிலாளி.

## தெய்வத் தொழிலாளி

இத்தாலிநாட்டில் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் பெனடிக்டு என்றொரு துறவி வாழ்ந்தார். அவர் நம் நாட்டுப் புத்தர் போன்றவர். புத்தருக்கு 20 ஆண்டுகள் முன் வரை வாழ்ந்தவர். அவர் புதிய துறவு மடங்களை நிறுவினார். அத்துறவிகளின் பழக்கங்களில் ஒன்று,

''தொழுவதற்குத் தொழில் செய்'' என்பது.

பாரதியார், இதனை மாற்று முறையில் நோக்கமிட்டார்;

''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்''

என்று போற்றி,

''உண்டுகளித் திருப்போரைநிந்தனை செய்வோம்''

என்று சாடவும் செய்தார். சக்தி பீடத்துப் பிடிப்பாக ஈடுபாட்டை எந்நாளும் கொண்டிருந்தார். ஆயினும், ஒன்றே தெய்வமென்றும் அஃது அறிவுதான் என்றும் ஆங்காங்கு பாடினார். இக்கருத்து ''சுத்த அறிவான தெய்வமே'' என்னும் தாயுமானவர் அடியொற்றியது. அவ்வடிப்படியே ''அறிவே தெய்வம்' என்றொரு தலைப்பில் எழுதியவை நோக்கத்திற்குரியவை.

ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையும் அறிவிலிகாள் பல்லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுண்
டாமெனல் கேளீரோ'' என்று

தொடங்கி,

''. . . . . எதன்
ஊடும் நின்றோங்கும் அறிவொன்றே தெய்வமென்

றோதி யறியீரோ? என்றும் வினவினார். இவ்வாறு அறிவுத் தெய்வத்திற்கு வந்தவர் அறிவுள்ள—ஓரறி உயிர் முதல் ஆறறிவு வரை யாவும் தெய்வந்தான் என்னும் முடிவிற்கு வந்தார்.

இக்கருத்து இவரது ஆழ்ந்த உணர்வின் வெளிப்பாடு என்பதை இதனைத் தமது 'சுயசரிதை'யில் பாடியிருப்பது கொண்டு உணரவேண்டும்.

''முன்னோர்கள் எவ்வுயிரும் கடவுள் என்றார்: முடிவாக அவ்வுரையை நான் மேற்கொண்டேன்'' என்றார். இதில் ''முடிவாக அவ்வுரையை நான் மேற்கொண்டேன்'' என்பது பட்டறிவின் முத்திரை மொழியாகும். இதன் தொடர்பில், "எல்லாம் கடவுள்; எங்கும் கடவுள்" என நான்கு பாடல்களை வடித்துள்ளார்.

''கேளப்பா சீடனே கழுதை யொன்றைக்
கீழான பன்றியைத் தேளைக் கண்டு
தாளைப்பார்த் திருகரமும் சிரமேற் கொண்டு
சங்கரசங் கரவென்று பணிதல் வேண்டும்''

என்று தொடங்கி, கூளத்தை,





# புராதன பெரிய கோயில்களுக்கு

# குடமுழுக்கு நடந்தேற

# மாண்புமிகு தமிழக முதல்வர் ஆணை

**''100 ஆண்டுகளுக்கு மேல் கும்பாபிஷேகம் நடக்காமல் இருந்த மிகப் புராதனமான திருவாரூர் தியாகராசர் கோயிலுக்கு 4.4.1988 அன்றும், ஆறுபடை வீடுகளான, பழனி முருகன் கோயிலுக்கு 27.6.88 அன்றும், திருப்பரங்குன்றம் முருகன் கோயிலுக்கு 7.2.1988 அன்றும் சிறப்பாக குடமுழுக்குகள் நடத்த வேண்டும் என்று தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். ஒவ்வொரு கோயில் தக்காரும் குடமுழுக்குக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வருகை தரவேண்டும் எனக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்,'' என்று மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமிநாதன் அவர்கள் தெரிவித்தார்.**

மலத்தை, அனைத்துப் பொருளை, விண்ணை, மண்ணை, வித்தையில்லாப் புலையனை, பெண்டிரை, குழந்தையைத் தெய்வப் பட்டியலிட்டார்.

''உயிர்களெல்லாம் தெய்வமன்றிற் பிறவொன்றில்லை'' என்ற பாட்டு எழுந்தது. தொழுவதற்குத் தொழில் செய்வது ஒரு வகை. தொழிலையே தொழச் செய்வது மாற்றுவகை. இது தொழிலையே தெய்வமாக்குவது. இதனால் தொழிலுக்கு மேம்பட்ட நிலை அமையும். இதனால் உள்ளம் ஒருமையுடன் பதியும். இப்பதிவு நற்பயனை நல்கும். இது நம்நாட்டு மரபு.

தமிழரது தனி விழாவான பொங்கல் விழா உழவுத் தொழிலுக்குச் செய்யும் தொழுகை தானே! உழவுத் தொழிலைத் துவங்கும்போது 'பொன்னேர் பூட்டுதல்' என்றோரு சிறு வழிபாடு உண்டு. இஃதும் உழவிற்கு வணக்கம் செலுத்துவது. பின்னர் வளர்ந்த கலைமகள் விழாவும் தொழிற் கருவிகளுக்குச் செய்யும் தொழுகையன்றோ? இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்த பாரதியார் ''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்'' வதை நினைவுபடுத்தினார்.

இதனால் தொழில் தெய்வமாகிறது. தொழிலைச் செய்யும் தொழிலாளி தெய்வத் தொழிலாளியாகின்றான். இப்போக்கில் கவிதைத் தொழில் தெய்வத் தொழில்.

பாரதியார் சொற்கள், கவிதையைத் தெய்வமாகக் காட்டுகின்றன. 'கவிதைத் தலைவி' என்றொரு தலைப்பில் கவிதை பிறந்தது. அத்தலைவியோடு தமக்குள்ள தொடர்பைப் பாடினார்.

அவளுடன் தனித்திருந்தாராம்;
அவளையே உயிரெனக் கொண்டாராம். உயிராக மட்டும் அன்று;

''........ நின்னொடு தமிழனாய்
நீயே உயிரெனத் தெய்வமும் நீயென
நின்னையே பேணி நெடுநாள் போக்கினேன்''

எனத் தெய்வமாகக் கொண்டு நெடுநாள் கழித்தாராம். தலைப்போ 'கவிதைத் தலைவி'. கவிதையின் உள்ளோட்டத்திலோ 'கவிதைத் தெய்வம்'. இக்கவிதைத் தெய்வத்தை இதன் தெளிவை உணரவேண்டுமாயின் பாரதியாரது கடவுட்கொள்கையை இங்கு குறிக்கவேண்டும்.

பாரதி கடவுட்கொள்கையில் காலூன்றி நின்றவர். பல கடவுளரையும் பாடினார். தமது பட்டறிவின் வளர்ச்சியில் பல கடவுட் கோட்பாட்டைத் தொடர்ந்து, ஊர்வன, பறப்பன, பார்க்கின்ற பொருள்கள், இரவி, திங்கள், விண்மீன், முகில், பற்பல தோற்றந்தரும் பொருள்கள், பருப்பொருள்கள் எல்லாம் என்று அடுக்கிக்கொண்டே வந்தார். முடிக்க வேண்டுமே, எதைச் சொல்லி முடிப்பது? அவர் பார்வை இக்கவிதையை எழுதும் எழுதுகோல்மேல் படிந்தது; எழுதுகோல் ஓடஓட உருவாக்கும் எழுத்துமேல் படிந்தது. அவ்வெழுதுகோலையே எழுத வைத்தார்.

''எழுதுகோல் தெய்வம் இந்த
எழுத்தும் தெய்வம்''

என எழுதிற்று.

எழுத்தைப் படைக்கின்ற எழுதுகோல் தெய்வம். உலகை ஆட்டிப்படைக்கின்ற எழுத்தும் தெய்வந்தான். இதன் மூலம் இவ்வெழுத்து படைத்த கவிதையும் தெய்வமாகின்றது. கவிதைத் தெய்வத்தைப் படைத்த பாரதி கவிதைத் தொழிலாளியோடு தெய்வத் தொழிலாளியும் ஆகின்றான்.

இத்தகைய தொழிலால் விளையும் விளைச்சலைப் பாரதியார் 'தொழிலாளி' என்னும் கட்டுரையில் காட்டுகின்றார்.

''கைத்தொழிலாலே செல்வம்
விளைகிறது:
அறிவுத் தொழிலால் அது
சேகரிக்கப்படுகிறது.
கைத்தொழில் செல்வத்தை
ஏற்படுத்துகிறது.
அறிவுத் தொழில் கைத்
தொழிலை நடத்துகிறது''.

ஒன்றையொன்று தழுவிநிற்கும் இருவகைத் தொழில்களும் செல்வத்தைப் படைக்கும் தெய்வத் தொழில்களாகின்றன.

அம்புரோசு பியேர்சு என்ற மேலைநாட்டறிஞன் 'தொழில்' என்னும் சொல்லிற்கு ஒரு விளக்கம் எழுதினான். அது இது:

''மற்றொருவனுக்குச் செல்வமாவதற்கு
ஒருவனால் செய்யப்படுவது''

—இந்த உண்மையின்படி, பாரதி என்னும் தொழிலாளியால் படைக்கப்பட்ட கவிதைகள் நமக்கெல்லாம் செல்வமாகியுள்ளன.

ரூ. 300 வரையிலான ஓய்வூதியத்தை அரசுச்செலவில் பண அஞ்சல் மூலமாக அனுப்பப்படும்முறை செயல்படுத்தப்பட்டு கிறது.

ஓய்வூதியம் பெறுவோருக்கு மருத்துவப் படியாக ரூ. 15 வழங்கப்படுகிறது.

ஓய்வூதியம் பெறுவோர் பண்டிகை முன் பணம் ரூ. 100 பெற அனுமதிக்கப்படுகின் றனர்.

1.4.79க்கு முன்னர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வராத குடும்பங்கள் அனைத் திற்கும் குடும்ப ஓய்வூதியம் நீட்டிக்கப்பட்டுள் ளது.

குடும்ப ஓய்வூதியமாக குறைந்தபட்சம் ரூ. 235, அதிகபட்சம் ரூ. 800 இறந்த அரசு ஊழியரின் குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது.

ஓய்வூதியம் பெறுவோரின் குறைகளைத் தீர்க்க தனியாக ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட் டுள்ளது. ஆசிரியர்களுக்கும் நகராட்சிப் பணி யாளர்களுக்கும் ஓய்வூதியம் உயர்த்தப்பட் டுள்ளது.

தலைமைச் செயலகத்தில் ரகசிய உதவி யாளர் தரம் 1ல் பணிபுரிபவர்களின் தேர்வு நிலை ஊதியம் ரூ. 1575-2685 என்று நிர் ணயிக்கப்பட்டது.

மோட்டார் வாகனப் பராமரிப்புத்துறை யில் ஸ்டோர் அட்டண்டராகப் பணிபுரிந்த வரின் ஊதியம் ரூ. 555-970 என்றும், தேர்வு நிலை ஊதியமாக ரூ. 610-1075 ஆகவும் உயர்த்தப்பட்டது.

சின்கோனா துறையில் பிராசஸ் கெமிஸ் டின் ஊதியம் ரூ. 1160-1950 என்றும், தேர்வு நிலை ஊதியம் ரூ. 1340-2435 என் றும் உயர்த்தப்பட்டது.

சின்கோனாத் துறையில் மின்மேற் பார்வையாளர்கள் பட்டயம் பெற்றவர்கள் என்றும், சான்றிதழ் பெற்றவர்கள் என்றும் இரண்டாகப் பிரித்து, பட்டயம் பெற்றவர் களுக்கு ரூ. 905-1545 என்றும், தேர்வுநிலை ரூ. 1045-1775 என்றும், சான்றிதழ் பெற்ற வர்களின் ஊதியம் ரூ. 780-1385 என்றும், தேர்வு நிலை ரூ. 905-1545 என்றும் உயர்த் தப்பட்டது.

சின்கோனாத் துறையில் எலக்டிரீசியன் தரம் 2ன் ஊதியம் ரூ. 555-970, தேர்வுநிலை ரூ. 610-1075 என்றும் உயர்த்தப்பட்டது.

தொழிலாளர் நலத்துறையில் மருந்தாளு நரின் ஊதியம் ரூ. 705-1230 என்றும், தேர்வு நிலை ஊதியம் ரூ. 780-1385 என்றும் மாற்றி யமைக்கப்பட்டது.

தொழிலாளர் நல அலுவலரின் தேர்வு

# அரசு ஊழியர் பெறும் சலுகைகள்

நிலை ஊதியம் ரூ. 1575-2685 என்றும் உயர்த்தப்பட்டது.

வேளாண்மை வருமானவரி அலுவலரின் ஊதியம் ரூ. 1160-1950 என்றும் தேர்வுநிலை ரூ. 1349-2435 ஆகவும் உயர்த்தப்பட்டது.

மாவட்ட சேமிப்பு அலுவலரின் ஊதியம் ரூ. 1160-1950 என்றும், தேர்வுநிலை ரூ. 1340-2435 ஆகவும் உயர்த்தப்பட்டது.

கைத்தறி அலுவலரின் தேர்வுநிலை ஊதி யம் ரூ. 1160-1950 என்றும், துணிநூல் கட்டுப் பாடு அலுவலரின் ஊதியம் ரூ. 1160-1950 என்றும், தேர்வுநிலை ரூ. 1340-2435 என்றும் உயர்த்தப்பட்டது.

மோட்டார் வாகன பராமரிப்புத் துறைத் தொழில் நுட்ப உதவியாளரின் ஊதியம் ரூ.1160 -1950 என்றும், தேர்வுநிலை ஊதியம் ரூ. 1340-2435என்றும் உயர்த்தப்பட்டது.

மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை தொழில் நுட்ப உதவியாளரின் ஊதி யம் ரூ. 1160-1950 என்றும், தேர்வுநிலை ஊதியம் ரூ. 1340-2435 என்றும் உயர்த்தப் பட்டது.

மோட்டார் வாகனப் பராமரிப்புத்துறை பொது போர்மேன் ஊதியம் ரூ. 1160-1950 என்றும், தேர்வுநிலை ஊதியம் ரூ. 1340-2435 என்றும் உயர்த்தப்பட்டது.

மோட்டார் வாகனப் பராமரிப்புத்துறை யில் இருப்பு பரிசோதகரின் ஊதியம் ரூ.1045-1775என்றும் தேர்வு நிலை ஊதியம் ரூ. 1160-1950 ஆகவும் உயர்த்தப்பட்டது.

கால்நடைப்பராமரிப்புத் துறையில் ஊசி குத்துவோர், எலக்டிரீசியன், ஓயர்மேன், தச்சுக்காரர் மற்றும் ப்ளாக் உதவியாளரின் ஊதியம் ரூ. 555-970 என்றும், தேர்வுநிலை ஊதியம் ரூ. 610-1075 என்றும் உயர்த்தப் பட்டது.

கால்நடைப்பராமரிப்புத்துறையில் மேலா ளரின் தேர்வுநிலை ஊதியம் ரூ. 1340-2435 என்றும் உயர்த்தப்பட்டது.

சமூகநலத்துறையில் துணை இயக்கு நரின் ஊதியம் ரூ. 1800-2900 ஆக உயர்த்தப் பட்டது.

ஆவணக்காப்பகத்தில் பைண்டர்களின் ஊதியம் ரூ. 555-970 என்றும், தேர்வுநிலை ஊதியம் ரூ. 610-1075 என்றும் உயர்த்தப் பட்டது. நூலக உதவியாளர்களில், நூலகப் பட்டப் படிப்பு பெற்றவர்களின் ஊதியம் ரூ.1045-1775என்றும், தேர்வுநிலை ஊதியம் ரூ. 1160-1950 என்றும் உயர்த்தப்பட்டது. இதர பட்டம் பெறாத நூலக உதவியாளர் களுக்கு ரூ. 905-1545 என்றும், தேர்வுநிலை ஊதியம் ரூ. 1045-1775 என்றும் உயர்த்தப் பட்டது.

முன்னாள் இராணுவவீரர்களின் நலன்கள் காக்கும் துறையில் துணை இயக்குநரின் ஊதி யம் ரூ. 1800-2900 என்றும், இணை இயக்கு நரின் ஊதியம் ரூ. 2150-3090 என்றும் உயர்த்தப்பட்டது.

# தஞ்சையில் கூட்டுறவு

தஞ்சாவூர் மாவட்டத்தில் உரம் மற்றும் பூச்சி மருந்துகள் கூட்டுறவுச்சங்கங்களின் 500 கிளைகளின் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் 13,000 மெட்ரிக் டன் அளவிற்கு, தேவையான ரகங்களில் உரங்கள் கையிருப்பு உள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் இயங்கி வருகின்ற தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி ஆகியவை மூலம் சுமார் 12கோடி ரூபாய்க்குப் பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில் 4.61 கோடி ரூபாய் நேரடி நெல் விதைப்பிற்காக விவசாயிகளுக்குக் குறுகிய காலக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் அரசுடமையாக்கப்பட்டுள்ள வங்கிகள் மூலமும் பயிர்க்கடன் வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இளம் சிறார்களின் சீர்திருத்தப் பள்ளித் துறையில் கண்காணிப்பாளராகப் பணிபுரிவோருக்குத்தேர்வுநிலை ஊதியம் ரூ. 1575-2685 என்றும் உயர்த்தப்பட்டது.

இளம் சிறார்களின் சீர்திருத்தப் பள்ளியில் பணிபுரியும் மேற்பார்வையாளர்கள், மதுரை, திருச்சியில் பணிபுரியும் கண்காணிப்பாளர்கள், துணைக் கண்காணிப்பாளர்கள், வரவேற்பாளர்களின் இல்லங்களில் பணிபுரியும் கண்காணிப்பாளர்களின் தேர்வுநிலை ஊதியம் ரூ. 1160-1950 என்று உயர்த்தப்பட்டது.

இளம் சிறார்களின் சீர்திருத்தப்பள்ளி திருநெல்வேலி, சென்னை வரவேற்பாளர் இல்லங்களில் பணிபுரியும் கண்காணிப்பாளர்கள், உதவி கண்காணிப்பாளர்கள், இளநிலை மேற்பார்வையாளர்கள், கோவை மற்றும் சேலத்தில் தற்காப்பு இல்லங்களில் கண்காணிப்பாளராகப் பணிபுரிபவர்களின் தேர்வுநிலை ஊதியம் ரூ. 780-1385 என்று உயர்த்தப்பட்டது.

இளம் சிறார்களின் சீர்திருத்தப்பள்ளியில் தையல் ஆசிரியைகள் ,மெட்டல் ஒர்க் இன்ஸ்பெக்டர், பொற்கொல்லர்கள், தச்சர்கள் ஊதியம் ரூ. 610-1075 என்றும், தேர்வு நிலை ஊதியம் ரூ. 705-1230 என்றும் உயர்த்தப்பட்டது. இளம் சிறார்களின் சீர்திருத்தப் பள்ளியில் பணிபுரியும் பைண்டர்கள், ஒயர்மேன், தச்சர்கள், ஒர்க்ஷாப் உதவியாளர், பாயிலர் அட்டண்டர் ஆகியோரின் ஊதியம் ரூ. 555-970 என்றும், தேர்வு நிலை ஊதியம் ரூ610-1075 என்றும் உயர்த்தப்பட்டது.

இளம் சிறார்களின் சீர்திருத்தப்பள்ளியில் பணியாற்றும் நெசவு ஆசிரியர்களின் ஊதியம் ரூ. 555-970 என்றும், தேர்வுநிலை ரூ. 610-1075 என்றும் உயர்த்தப்பட்டது.

என்.சி.சி. துறையில் பணிபுரியும் ஏரோ-மாடலிங் இன்ஸ்ட்ரக்டர் கம்-ஸ்டோர் கீப்பர் மற்றும், கப்பல்-மாடலிங் இன்ஸ்ட்ரக்டர்-கம்-ஸ்டோர் கீப்பர் ஆகியோரின் சிறப்பு நிலை ஊதியம் ரூ. 1340-2435 என்றும் உயர்த்தப்பட்டது.

என்.சி.சி. துறையில் பணிபுரியும் படகு லஸ்கரின் சிறப்பு நிலை ஊதியம் ரூ. 610-1075 என்று உயர்த்தப்பட்டது. (Evaluation & applied Research Department ) துணை இயக்குநரின் ஊதியம் ரூ. 1800-2900 ஆக உயர்த்தப்பட்டது.

மாநில நல்வாழ்வுத்துறை டிரான்ஸ்போர்ட் ஆர்கனைசேசன் துறையில் ஒர்க்ஸ் இளார்க், எலக்டிரீசியன் (தரம்-1), வெல்டர் (தரம்-1), டைம் கீப்பர் ஆகியோரின் ஊதியம் ரூ. 610-1075 என்று உயர்த்தப்பட்டது.

மாநில நல்வாழ்வுத் துறை டிரான்ஸ்போர்ட் ஆர்கனைசேசன் துறையில் டிங்கர் (தரம்-1), கார்பென்டர் (தரம்-1), லைனர் (தரம்-1) ஆகியோரின் ஊதியம் ரூ. 610-1075 என்றும், தேர்வு நிலை ஊதியம் ரூ. 705-1230 என்றும் உயர்த்தப்பட்டது. மாநில நல்வாழ்வுத்துறை டிரான்ஸ்போர்ட் ஆர்கனைசேசன் துறையில் வெல்டர்(தரம்-2), பிட்டர் (தரம்2), பெயிண்டர், பொற்கொல்லர், மெஷினிஸ்ட் டூல் கீப்பர் ஆகியோரின் ஊதியம் ரூ. 555-970 என்றும், தேர்வு நிலை ஊதியம் ரூ. 610-1075 என்றும் உயர்த்தப்பட்டது.

இந்திய மருத்துவத்துறையில் பணிபுரியும் தொழில்நுட்ப உதவியாளரின் ஊதியம் ரூ. 780-1385 என்றும், தேர்வு நிலை ஊதியம் ரூ. 905-1545 என்றும் உயர்த்தப்பட்டது.

இந்திய மருத்துவத்துறையில் (Animal Attendant ) ஆகப் பணி புரிபவரின் ஊதியம் ரூ. 505-845 என்றும், தேர்வு நிலை ஊதியம் ரூ. 555-970 என்றும் உயர்த்தப்பட்டது.

இந்திய மருத்துவத் துறையில் எலக்ட்ரிஷியன் (தரம் 2), பிளம்பர் ஆகியோரின் ஊதியம் ரூ. 555-970 என்றும், தேர்வு நிலை ஊதியம் ரூ. 610-1075 என்றும் உயர்த்தப்பட்டது.

நகரமைப்புத் துறையில் மேற்பார்வையாளராகப் பணிபுரிபவரின் ஊதியம் ரூ. 1045 1775 என்றும், தேர்வு நிலை ஊதியம் ரூ. 160-1950 என்றும் உயர்த்தப்பட்டது.

நகரமைப்புத் துறையில் வரைவாளர் (தரம் 2) ஆகப் பணிபுரிவோரின் பணிகள் பட்டயம் பெற்றவர்கள், பட்டயம் பெறாதவர்கள் என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டது. பட்டயம் பெற்றவர்களின் ஊதியம் ரூ. 780-1385 என்றும், தேர்வு நிலை ஊதியம் ரூ. 905-1545 என்றும் உயர்த்தப்பட்டது. பட்டயம் பெறாதவர்களின் ஊதியம் ரூ. 705-1230 என்றும், தேர்வு நிலை ரூ. 780-1385 என்றும் உயர்த்தப்பட்டது.

கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியப் பணியாளர்களில் பதிவு உதவியாளரின் தேர்வு நிலை ஊதியம் ரூ. 610-1075 என்று உயர்த்தப்பட்டது.

நீதித் துறையில் பணிபுரியும் மாவட்ட முன்சீப்கள், துணை கோட்ட மாஜிஸ்டிரேட்டுகள், 7 முதல் 14வது ஜட்ஜுகள், சுமால்

காசஸ் நீதிமன்றத்தின் பதிவாளர், சிட்டிசிவில் கோர்ட்டின் பதிவாளர்) மெட்ரோபாலிடன் மாஜிஸ்ட்ரேட்டுகள், 5 முதல் 9 வரை, 12 முதல் 22 வரை, முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் துணை நிர்வாக பொது மற்றும் அபீசியல் டிரஸ்டி ஆகியோரின் ஊதியம் ரூ. 1575-2685 என்றும், தேர்வு நிலை ஊதியம் ரூ. 1800-2900 என்றும் உயர்த்தப்பட்டது.

நீதித்துறையில் இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட், உதவி மாநில பிராசிகியூட்டர் தரம் 2, உதவி பொது பிராசிகியூட்டர் (புறநகர்) ஆகியோரின் ஊதியம் ரூ. 1575-2685 என்றும் உயர்த்தப்பட்டது.

நீதித்துறையில் உதவி மாநில பிராசிகியூட்டர் தரம் 1, உதவி பொது பிராசிகியூட்டர் தரம் 1, கூடுதல் பொது பிராசிகியூட்டர் (புறநகர்) ஆகியோரின் ஊதியம் ரூ.1575-2685 என்றும், தேர்வு நிலை ஊதியம் ரூ. 1800-2900 என்றும் உயர்த்தப்பட்டது.

நீதித்துறையில், பிராசஸ் சர்வரின் ஊதியம் ரூ. 505- 845 என்றும், தேர்வு நிலை ஊதியம் ரூ. 555-970 என்றும் உயர்த்தப்பட்டது.

நீதித்துறையில் நிர்வாக, பொது மற்றும் நிர்வாக டிரஸ்டி அலுவலக ஊதியம் ரூ. 475-775 என்றும், தேர்வு நிலை ஊதியம் 555-970 என்றும் உயர்த்தப்பட்டது.

ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் அத்தாரிட்டித் துறையின், மோட்டார் வாகன ஆய்வாளர் தரம் 1ன் ஊதியம் ரூ. 1160-1950 என்றும், தேர்வு நிலை ஊதியம் 1340 -2435 என்றும் உயர்த்தப்பட்டது.

ஸ்டேட் டிரான்போர்ட் அத்தாரிட்டி துறையின் மோட்டார் வாகன ஆய்வாளர் தரம் 2ன் ஊதியம் ரூ. 1045 -1775 என்றும், தேர்வு நிலை ஊதியம் ரூ. 1160 -1950என்றும் உயர்த்தப்பட்டது.

## தமிழ் வளர்த்த பெரியார்:

## சிறுவை மோகனசுந்தரம்



குட்டையான உருவம். மூக்குக் கண்ணாடி சகிதம், தோளில் மாட்டிய பையுடன் தேனீ போல சுறுசுறுப்பாகச் செயல்பட்ட பெரியவர்தான், சிறுவை மோகன சுந்தரம். 'தமிழ்த்தொண்டர்' என்று நண்பர்களால் அன்புடன் அழைக்கப்பெற்ற இவர், 18.11.1916இல் சென்னை மாநகரில் பிறந்தாரர். தந்தை அரங்கநாதர், தாய் கோதை நாயகி.

1921இல் சர். தியாகராயர் நடுத்தரப்பள்ளியில் தொடக்கக் கல்வி பயின்ற இவர், டி.டி.வி. உயர்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பு படித்தார். 1931 டிசம்பர் திங்களில் சென்னை பெத்து நாயக்கன் பேட்டையில், தமிழ் நெறிக்காவலர் பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்களுடன் சேர்ந்து 'மாணவர் மன்றம்' துவக்கினார். 1941இல் நக்ரேர் கழகத்தை நிறுவிய இவர், சிறிது காலம் 'தினமணி' நாளிதழில் பணியாற்றினார். 1944 ஜூலை, 12ஆம் நாள் தமிழ்த் தென்றல்திரு.வி.க. தலைமையில், அனுசுயா அம்மையாரை மணந்தார்.

திரு சிறுவை மோகனசுந்தரம் அவர்கள், திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி ஒன்றை நிறுவி, அதன் மூலம் நூற்றுக் கணக்கான புலவர்களையும், முதுகலைப் பட்டதாரிகளையும், முனைவர்களையும் உருவாக்கினார். சென்னைப் பல்கலைக் கழகத்திலுள்ள தமிழ்க் கலைக் களஞ்சியத்தில் பணிபுரிந்த இவர், 1957இல் மணவழகர் மன்றத்தை நிறுவித் தமிழ்த் தொண்டாற்றினார்.

தமிழ் வளர்ச்சிக்காகத் தளராமல் தொண்டாற்றி வந்த திரு சிறுவை மோகனசுந்தரம் அவர்கள், மறைமலை ஆராய்ச்சிக்குழு ஒன்றை நிறுவி, புறநானூற்று ஆராய்ச்சித் தொடர் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்தும், தமிழ்த்தென்றல் திரு.வி.க, பேராசிரியர். க.நமச்சிவாயர்ஆகியோருக்கு நூற்றாண்டு விழாக் கொண்டாடியும் அயராது பணியாற்றியிருக்கிறார்.

நோய்வாய்ப்பட்டும் கூட, இறுதிக்காலம் வரை தமிழ்ப்பணியே மூச்சாகக்கொண்டு வாழ்ந்திருக்கிறார். திரு சிறுவை மோகனசுந்தரம் அவர்கள் சிறந்த நூலாசிரியராகவும், மொழிபெயர்ப்பாளராகவும் விளங்கியவர். தமிழ் அன்பர்களையும், நண்பர்களையும் சந்திக்கும்போது புதுத் தெம்பு கொள்வார். எப்போதும் தமது பையில் விழாக்கள் பற்றிய அழைப்பிதழ்கள், அறிக்கைகள், துண்டு வெளியீடுகள் வைத்திருப்பார். அவற்றினைத் தமிழ் ஆர்வலர்களுக்கு விநியோகிப்பார். சில சமயங்களில் தமிழறிஞர்களின் படங்களையும், திருக்குறள் முதலான நூல்களையும் வழங்குவார்.

பொறுமையும், புன்னகை பூத்த முகமும், அயராத உழைப்பும் அவரதுசெல்வங்கள். இளைய தலைமுறையினர்க்கு எடுத்துக் காட்டாக விளங்கிய அவர், 18.7.87இல் இயற்கை எய்தினார்.

திரு சிறுவைமோகனசுந்தரம் அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் கூட்டத்தில், முத்தமிழ்க்காவலர் திரு கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''திருவள்ளுவர் ஆண்டு 2000 அறிக்கைத் துண்டுப் பிரசுரங்களைத் தமிழகம் முழுவதும் பரப்பினார். பேராசிரியர் க.நமச்சிவாயர் அவர்களின் வாரிசு என்றே இவரைக் கூறலாம். முதன் முதலாக க. நமச்சிவாயரின் பொங்கல் வாழ்த்தைத் தமிழகமெங்கும் பரப்பினார். கையில் நகம் முளைத்த நாள் முதல் தமிழ்த்தொண்டு செய்தார் சிறுவை மோகனசுந்தரம் அவர்கள்''.

# ஏற்றுமதிக்கு ஏற்ற மரவள்ளிக்கிழங்கு மாத்திரைகள்

ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா மற்றும் ஆசிய கண்டங்களில் மரவள்ளிக்கிழங்கு அன்றாட உணவாக உண்ணப்படுகிறது. கால் நடைகளுக்கும் இது ஒரு சிறந்த உணவுப் பொருளாகும். மேலும் மரவள்ளிக்கிழங்கைப் பயன்படுத்தி ஜவ்வரிசி, க்ளூகோஸ், ரவை, சேமியா மற்றும் எரிசாராயம், ஸ்டார்ச் பவுடர் போன்ற இரசாயனப் பொருட்களையும் தயாரிக்கலாம்

நம் இந்திய தேசத்தில், மரவள்ளிக்கிழங்கு சுமார் 3.08 லட்சம் எக்டர் பரப்பளவில் 55.7 லட்சம் டன் அளவிற்கு உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியாவில் மரவள்ளிக்கிழங்கு உற்பத்தியில், தமிழ்நாடு இரண்டாம் இடம் வகிக்கிறது. இங்கு 0.48 லட்சம் எக்டர் பரப்பளவில் 14.8 லட்சம் டன் கிழங்கு உற்பத்தி செய்யப்படுகிறது. தேசிய வேளாண்மைக் குழு ( National Commission on Agricultuie ) கி.பி. 2000 இல் இந்தியா 40கோடி டன் மரவள்ளிக் கிழங்கு ஒரு கோடி எக்டர் பரப்பளவில் உற்பத்தி செய்யும் என்று கணித்துள்ளது.

தமிழ்நாட்டில், மரவள்ளிக் கிழங்கு பெரும்பாலும் சேலம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் பயிரிடப்படுகிறது. சேலத்தில் 26,000 எக்டரிலும், கன்னியாகுமரியில் 11,290 எக்டரிலும் பயிரிடப்படுகிறது. சேலம் மாவட்டத்தில் மரவள்ளியைக் கொண்டு ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் பவுடர் உற்பத்தி செய்யப்படுகிறது. இம்மாவட்டத்தில் இவ்வாறு உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 600 முதல் 700 ஆகும். ''லிக்விட் க்ளூகோஸ்' தயாரிக்கும் நிறுவனங்களும் இம்மாவட்டத்தில் உண்டு.

தாய்லாந்து நாட்டில் மரவள்ளிக்கிழங்கு கொண்டு மாத்திரைகள் ( Pellets ) தயாரிக்கும் தொழிற்சாலைகள் 1960-ஆம் ஆண்டு முதல் செயல்படுகின்றன. இத் தொழிற்சாலைகளுக்கு ஐரோப்பிய நாடுகளும், தாய்லாந்து அரசாங்கமும் உதவுகின்றன. இங்கு உற்பத்தி செய்யப்படும் மாத்திரைகள் ஹாலந்து நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆண்டுதோறும் சுமார் ரூபாய் 600 கோடி மதிப்புள்ள மாத்திரைகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உணவியல் துறையில் சிவி.கோ.2 ரக மரவள்ளிக்கிழங்கு கொண்டு மாத்திரைகள் செய்யும் முறை (Pelleti-Zation ) யில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. மாத்திரைகள் தயாரிக்கும் முறை வருமாறு:

மரவள்ளிக்கிழங்கைத் தண்ணீரில் நன்றாகக் கழுவிக் கொள்ள வேண்டும். மேல் தோலைச் சீவிவிட்டுச் சிறு துண்டுகளாக நறுக்கி வெய்யிலில் உலர வைக்கவேண்டும். உலர்ந்த துண்டுகளை அரவை மில்லில் நன்கு அரைத்து மாவைச் சலித்து எடுத்துக் கொள்ளவேண்டும். மாவுடன் 20 சதவீதம் தண்ணீர் சேர்த்து நன்கு பிசைந்து மாத்திரை தயாரிக்கும் இயந்திரம் மூலம் மாத்திரைகள் தயாரித்துநிழலில் காய வைக்கவேண்டும்.

மரவள்ளி மாத்திரை செய்முறை

மரவள்ளிக்கிழங்கு → கழுவுதல்
↓
நறுக்குதல்
↓
காயவிடல்
↓
மாவாக அரைத்தல்
↓
20% தண்ணீர் சேர்த்து அவித்தல்
↓
மாத்திரைகளாக்குதல்

15, 20, 25, 30, 35 சதவீதம் தண்ணீர் சேர்த்து மாத்திரைகள் செய்து ஆராய்ந்ததில், 20% தண்ணீர் சேர்த்து செய்யப்படும் மாத்திரைகள் எளிதில் உடையாமல், சிறந்த நிறம், தோற்றம், அளவு மற்றும் தகுந்த வடிவம் கொண்டதாக இருந்தன. மாத்திரைகளில் 87 சதவீதம் மாவுச் சத்து, 1.8 சதவீதம் நார்ச் சத்து மற்றும் 12 சதவீதம் ஈரப்பசையும் இருக்கின்றன. இம் மாத்திரைகள் எளிதில் தண்ணீரில் கரையும் தன்மை கொண்டவை.

மரவள்ளிக்கிழங்கு கால்நடைகளுக்கு உகந்த ஓர் உணவாகும். வழக்கமாகக் கொடுக்கப்படும் சோளத்திற்குப் பதில் மரவள்ளிக்கிழங்கு கொடுக்கும்போது, கால்நடைத் தீவனத்திற்கு ஆகும் செலவு 20 சதவீதம் குறைகின்றது என கால்நடை வல்லுநர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். எனவே மரவள்ளிக்கிழங்கு மற்றும் தீவனத்திற்குத் தேவையான மற்ற பொருட்களைச் சேர்த்து பின்குறிப்பிட்ட அளவுகளில் மாத்திரைகள் தயாரிக்கலாம் என்று கண்டறியப்பட்டுள்ளது.

மரவள்ளிக்கிழங்கு மாவு—55%
கடலைப் பிண்ணாக்கு—20%
கோதுமைத் தவிடு —13%
தாது உப்புக்கள் —2%
மீன்பிண்ணாக்கு (Fish Meal)—10%

மேற்கண்ட கலவையுடன் 20-25சதவீதம தண்ணீர் சேர்த்து 5 நிமிடம் ஆவியிலிட்டு மாத்திரைகள் தயாரிக்கப்பட்டன. உலர்ந்த பின்பு மாத்திரைகளில் 4 சதவீதம் ஈரப்பசை இருக்க வேண்டும். இம்மாத்திரைகள் 5 நிமிடங்கள் தண்ணீரில் கரையக்கூடிய தன்மை கொண்டதாக இருக்கின்றன.

இவ்வாறு மரவள்ளிக்கிழங்கு கொண்டு மாத்திரை வடிவத்தில் கால்நடைத் தீவனம் தயாரித்து ஹாலந்து நாட்டிற்கு ஏற்றுமதி செய்யலாம். இந்தியாவில் அதிக அளவில் மரவள்ளிக்கிழங்கு விளைவதால் மரவள்ளிக்கிழங்கு மாத்திரைகள் தயாரித்து ஏற்றுமதி செய்யவதன் மூலம், நம் நாட்டிற்கு ஏற்றுமதியைப் பெருக்கி, அதிக அன்னியச் செலாவணியை ஈட்டலாம்.

**இந்தியாவில் அதிக அளவில் மரவள்ளிக் கிழங்கு விளைவதால், மரவள்ளிக் கிழங்கு மாத்திரைகள் தயாரித்து ஏற்றுமதி செய்வதன் மூலம், நம் நாட்டில் ஏற்றுமதியைப் பெருக்கி, அதிக அளவில் அந்நியச் செலாவணியை ஈட்டலாம்.**

—கே. ஜி. சண்முகவேலு
ஏ. சுசீலா திருமாறன்
எம். அருணா சேரலாதன்
தோட்டக்கலைத் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை.

# நூல் நயம்



**காது மூக்கு தொண்டை சுவாசப் பாதை வியாதிகளும் வைத்தியமும்**

ஆசிரியர்: டாக்டர் டி.எம்.பரமேஸ்வரன்,

விலை: ரூ.16 பக்கம்:164

காது, மூக்கு, தொண்டைக் கோளாறுகள் எல்லா வயதினரிடமும் சாதாரணமாகக் காணக்கூடியவை. இந்த வியாதிகள் எப்படி உண்டாகின்றன, அவசரத் தொல்லைக்கு என்ன செய்யலாம், என்ன செய்யக் கூடாது என்பதையெல்லாம் அனைவரும் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் வெளியாகியுள்ள அருமையான நூல் இது.

நோய்களைப் பற்றி, சாதாரண மானவர்கள் புரிந்து கொள்வதுடன் செவிலியர்களும், மருத்துவத்துறை மாணவர்களும் படித்துப் பயன்பெறத் தக்கவகையில் தமிழில் வெளியாகியுள்ள இந்த நூல் பாராட்டுக்குரிய முயற்சியாகும்.

கடந்த நூற்றாண்டில் தான் E.N.T. என்று அழைக்கப்படும் காது, மூக்கு, தொண்டை பற்றிய மருத்துவக் கண்டுபிடிப்புகளும் ஆராய்ச்சிகளும் மிகுந்தன. இந்த நூற்றாண்டில் அது மிகுதியாக வளர்ந்துள்ளது. அதனை நமக்கு முழுமையாக எடுத்துரைக்கிறது இந்நூல். விளக்கப் படங்களும் ஏராளமாக அமைந்துள்ளன. ஒவ்வொரு பாகத்தின் இறுதியில் உள்ள இணைப்புப் பகுதியும் பயனுள்ளது. ஆரோக்கிய வாழ்வை விரும்பும் அனைவரும் படித்துப் பயன் பெறத்தக்க நூலாகும்.

—மாமூலன்

**சிந்திக்க வைப்பவை**

ஆசிரியர்: மு. முத்துக்காளத்தி

விற்பனை உரிமை: பாரதி நிலையம்

184, பிராட்வே, சென்னை-108

விலை ரூ. 10 பக்கம்:100

சிந்தனையைத் தூண்டும் பல்வேறு செய்திகளை நூலாசிரியர் விருந்தாக்கியிருக்கிறார். இந்நூலில் குட்டிக்கதைகளும் உண்டு. சொல்லோவியங்களும் உண்டு.

சில செய்திகள் நீதி போதனைகளை வழங்குகின்றன; சில, புள்ளி விவரங்களை அள்ளிக் குவிக்கின்றன.

நறுக்குத் தெறித்தாற்போல், சிறுசிறு செய்திகளாகச் சொல்லப் பட்டிருப்பது பாராட்டுக்குரியது. படிப்போர்க்கு அலுப்புத்தட்டவில்லை; இனிய எளிய நடை; பொழுதைப் பயனுள்ளதாக ஆக்கிக் கொள்வதற்கு இந்நூல் பயன்படுகிறது.

எஸ்.எஸ்.சுந்தரம்

**புனித சகாய அன்னை**

ஆசிரியர் : கவியழகன்

வெளியீடு: சோமு புத்தக நிலையம்.
84, காரணீஸ்வரர் கோயில் தெரு.
மயிலாப்பூர்,
சென்னை-600 004.

விலை : ரூ.7.50. பக்:79.

வேளாங்கண்ணி அன்னை, லூர்து அன்னை, பாத்திமா அன்னை போன்ற பல்வேறு திருப்பெயர்களில் அன்னைமேரி மாதா இவ்வுலகிற்குக் காட்சி தந்தார். மக்களை நல்வழிப்படுத்தும் வகையில் அவர் புனித சகாய அன்னையாகவும் தோன்றினார். புனித சகாய அன்னையின் கருணை உள்ளம் சிறுசிறு கதைகள் மூலம் இந்நூலில் வெளிக்காட்டப்பட்டுள்ளது.

இடைவிடா சகாயத் தாயினுடைய அற்புத ஓவியத்தின் வரலாறும் இதில் விவரிக்கப்பட்டுள்ளது.

**ஒரு சுகமான அனுபவம்**

ஆசிரியர் : வெ. நல்லதம்பி,

வெளியீடு: வள்ளுவன் வெளியீட்டகம்.
மனை எண். 81,
111 கிழக்குத் தெரு,
திருவான்மியூர்.
சென்னை-600 041.

விலை: ரூ.10. பக்:61

மகப்பேற்றை எதிர்நோக்கியிருக்கும் கர்ப்பிணிகளுக்கு நல்ல பல ஆலோசனைகளை வழங்குகிறது இந்நூல்.

மகப்பேற்றுக்கு முன், மகப்பேற்றின்போது, மகப்பேற்றின் பின் ஒவ்வொரு தாயும் மேற்கொள்ள வேண்டிய உடல்நலக் கவனிப்பு முறைகள் தெளிவாகவும், எளிமையாகவும் கூறப்பட்டுள்ளன. மாதர் சங்கத் தலைவி, குடும்பப்பெண், மருத்துவப் பெண் இவர்களுக்கு இடையேயான உரையாடலாய் இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசின் தேசியப்பரிசுப் போட்டியில் பரிசு பெற்ற நூலிது.

—வி. இராவணன்.

**உ.வே.சா. ஒரு தமிழ்வாழ்வு**

ஆசிரியர் : எஸ்.டி. காசிராஜன்

வெளியீடு: உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,
டி. டி. ஐ. சாலை,
தரமணி,
சென்னை-600 113

விலை ரூ. 15. பக்:138.

தமிழ்த் தாத்தாவை, தமிழ்க் கோயிலாகக் காண்கிறார் திரு. எஸ். டி. காசிராஜன்.

பதிப்புப் பணியின் தந்தை, டாக்டர் உ.வே.சா.வின் பதிப்புப் பணியில், அவர் பெற்ற இன்னல்கள், சிந்தனைகள், அனுபவங்கள் என்பன செம்மையாக உணர்த்தப்பட்டுள்ளன. அவருடைய பதிப்புப் பணியின் சிறப்பு மிக நல்ல முறையில் குறிக்கப் பெற்றுள்ளது.

அயராத உழைப்பும், மிகு திறனும், ஆழ்ந்த புலமையும் நிறைந்த டாக்டர் உ.வே.சா பாட்டியற்றி, உரை கண்டு, உரை நடை எழுதி, கேட்டாரைப் பிணிக்கும் சொல்வன்மை கொண்டு விளங்கியமை நாலெங்கும் தெள்ளிதின் புலப்படுத்தப் பட்டுள்ளது.

தமிழ்த் தொண்டின் உருவாய் அமைந்து தமிழுக்காகவே

வாழ்ந்து சிறந்த டாக்டரவர்களின் அனைத்துச் சிறப்புகளையும், உயர் பண்புகளையும் நன்முறையில் வெளிப்படுத்தியுள்ள ஆசிரியரின் ஆய்வுத் திறமும் மொழிப் புலமையும் பாராட்டுதற்குரியன.

தண்டமிழ்ச் சான்றோரான டாக்டர் உ.வே.சா.வின் தமிழ் வாழ்வு பற்றி ஒவ்வொரு தமிழனும் கற்றறிதற்கு இப்பெரு நூல் சிறந்த வழிகாட்டியாக அமைகின்றது.

### முருகு ஆயிரம்

ஆசிரியர் : கவியோகி பேகன்
வெளியீடு: சித்தர் கோவிந்தசாமி நினைவு அறப் பொறுப்பு நிறுவனம்
4-ஏ. டர்ன்புல்சாலை
நந்தனம்,
சென்னை-600 035.

விலை : ரூ. 32. பக்:198.

தமிழ்ப் புலமையும் இறைப் பற்றும் கொண்ட கவியோகியின் இந்நூல், குன்றுதோறாடும் குமரன் மீது பாடப் பெற்றது.

ஒவ்வொரு பகுதியிலும் நூறு நூறு பாடல்களைக் கொண்டது. வானமுதம், மெய்ப்பொருள், நோற்ற பயன், ஞானகுரு, வாசித்தேன். பக்திப்பூ-காய்கனி வெற்றிவேல் நூறு போன்ற பத்துப் பகுதிகள் இதனுள் உண்டு. தத்துவக் கருத்துகளும், புராண வரலாறுகளும், வீரம் அன்பு, ஞானம் முதலான உணர்வுகள் பின்னிப் பிணைந்த நிலையில் அமையப் பெற்ற நூல்.

'ஒரு நிமிட நேரமேனும்உன்னை மறவா திருவைத் தா செந்திலரசே!'' என்று முருகப் பெருமானை வேண்டும் கவியோகியின் இந்நூல், கற்போர் உள்ளத்தில் கழிபேருவகையூட்டி, பக்தியை உருவாக்கவல்லது.

### ஓங்காரத் திருநூற்றந்தாதி

ஆசிரியர் : டாக்டர் பேகன்.
வெளியீடு: தமிழ்நாடு ஓங்கார சபை
கந்தகோட்டம்,
சென்னை-1.

விலை : ரூ. 2.50. பக்:28

கட்டற்றுத் திரியும் மனத்தையும் புலன்களையும் அடக்கி ஒடுக்குவது ஓங்காரப் பிரணவம்.

ஞானயோகம் பெறவும், முக்தி அடையவும் மிகச் செவ்வியதொரு வழிகாட்டியாக விளங்குகிறது, இந்நூல். உள்ளத்தை ஒளிமயமாக்க வல்லது, ஓங்காரத்திற்கு முதல் முதலாக எழுந்த இந்த அந்தாதி நூல்.

''செழிதமி ழாலே தினந்தினம்
ஓமெனச் செப்புமினே
பழிகழி யும்பவம் தீரும்
பவானி அருள்புரிவாள்''

என்பது மனித மனம் வெளுக்கச் செய்யும் அறக் கருத்தாகும்.

ஆன்மநேய ஒருமைப்பாட்டை வலியுறுத்தி, வளர்க்க வழிகாட்டும் இந்தச் சிறந்த அந்தாதி நூல் அனைவரும் படித்துப் பயன் பெறத்தக்கது.

—டாக்டர் சிவஅரசி
முத்துக்காளத்தி.

# பார்த்தோம் படித்தோம்

### கொற்கையின் சிறப்பு

16-10-'87 இதழில் 'தொல் புகழ் சான்ற கொற்கை மாநகர்' என்ற தலைப்பில் வெளியான கட்டுரையின் மூலம் கொற்கையின் பல்வேறு சிறப்புக்களைத் தெரிந்து கொண்டேன்.

—சொ. முத்தமிழ்வாணன்,
தஞ்சாவூர்.

### தியாக தீபங்கள்

'தியாக தீபங்கள்' அருமையான கருவூலம். மாவட்ட வாரியாக வரிசைப்படுத்தி, தியாகச் செம்மல்களைப்பற்றி வெளியிட்டு என்றென்றும் பெருமை சேர்த்துவிட்டது தமிழரசு. பாராட்டுக்கள்

—எஸ். எஸ். வாசன்
தென் எலப்பாக்கம்

சுதந்திரப் போராட்டத் தியாகிகள் சிலரின் பிறந்த தேதிகளும், சுதந்திரப்போராட்டத்தில் ஈடுபட்ட குறிப்புகளும் படித்து மகிழ்ச்சியுற்றேன்.

—சி. காசிநாதன்
சுதந்திரப் போராட்ட வீரர்,
சிங்கமங்கலம்.

### வன விலங்கைக் காப்போம்!

மாண்புமிகு அமைச்சர் திரு வி. வி. சுவாமிநாதன் அவர்கள் வானொலியில் வழங்கிய 'வன விலங்கைப் பாதுகாப்போம்' என்ற கட்டுரையைக் கேட்க முடியாமல் போன எங்களுக்கு, அத்துணையையும் எழுத்து வடிவில் அளித்த 'தமிழரசு' இதழுக்கு எங்கள் இதயம் கனிந்த பாராட்டுகள். 'தேங்காய் நார் கழிவு எருவாகிறது' என்ற கட்டுரையும் எங்களுக்குப் பயனளித்தது.

—இராம. செந்தில் குமார்
—இராம சுரேஷ்குமார்
—இரா. காந்தி.
திருக்கடையூர்

### நாமக்கல் கவிஞர்

நாமக்கல் கவிஞர் பற்றிய சிறப்புக் கட்டுரை - செய்திகள் படித்தேன். கவிஞரது மனைவியார் தன் கணவரின் இனிய நினைவுகளைக் கூறிய கட்டுரையில் இருந்து, கவிஞரின் வாழ்க்கையை அறிந்து கொள்ள முடிந்தது. கவிஞர் ஒரு சிறந்த ஓவியக் கலைஞர் என்பதையும் தெரிந்து கொள்ள முடிந்தது.

இளமைக் காலத்தில் காதல் வயப்படாத இதயம் ஏது? தன் இளமைக் காலத்தில் நடந்த நிகழ்ச்சியை 'விபரீதம்' என்ற தலைப்பில் வெளியிட்டு இருப்பது பாராட்டுக்குரியது.

—எஸ். நாகராசன்
நிலையூர், அறந்தாங்கி,

### சிதம்பரனார் மாவட்டச் சிறப்பிதழ்

சிதம்பரனார் மாவட்டச் சிறப்பிதழ் அரிய வரலாற்றுச் சிறப்புமிக்க கருத்துக்களைத் தந்தது. குறைந்த விலையில் இவ்வளவு வண்ணப்படங்களும், வரலாற்றுக் குறிப்புகளும் கண்டு மலைத்தேன்!

—ஆர். ஜி. துரைராஜூ
கீழப்பழுவூர்.

# செங்கல்பட்டு மாவட்டத்தில் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள்

**வீ. மணிவண்ணன், இ.ஆ.ப.**

**இயக்குநர், மீன்துறை,**

தமிழகத்தின் 1000 கி. மீ. நீளமுள்ள கிழக்குக் கடற்கரையில், 422 மீனவக் குப்பங்கள் உள்ளன. இதிலுள்ள 4 இலட்சம் மீனவ மக்களில் 50 சதவீதம் பெண்கள் ஆவர். அநேகமாக எல்லாப் பெண்களுமே, மீனவர்கள் கடலிலிருந்து கரைசேரும் நேரம் துவக்கி, வலையிலிருந்து மீன்களை எடுத்தல், ஏலமிடுதல், விற்பனை செய்தல், மீன்களைப் பதப்படுத்துதல், வலைகள் பின்னுதல் போன்ற பணிகளில் ஈடுபட்டு வருவாயைப் பெருக்கிக் கொள்ளப் பாடுபடுகின்றனர்.

பல இன்னல்களுக்கிடையில் அயராது உழைக்கும் மீனவப் பெண்களின் சமூகப் பொருளாதார வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் ஒரு ஏணிப்படியாகவும், வழிகாட்டியாகவும், 1981ஆம் ஆண்டு அரசு மீன் துறையில் ஒரு தனிப்பெரும் திட்டத்தைச் செயலாக்கியது. மீனவப் பெண்கள் முன்னேற வேண்டும் என்ற குறிக்கோளுடன் மீனவ மகளிர் விரிவாக்கப்பணி தமிழ்நாட்டில் செயல்படத் தொடங்கியது.

மீன் தொழிலில் மட்டுமன்றி வேறுபல திறமைகளை வளர்க்கவும், கிராமங்களில் எழும் பிரச்னைகளுக்கு, மகளிரும் முன்வந்து தாமே முடிவு காணவும், கூட்டுறவில் இணைந்து சங்கம் அமைத்து நடத்திடவும், கிராம முன்னேற்றத்திலும், நிர்வாகத்திலும் அவர்கள் சமபங்கு ஏற்று நலிந்து போயிருக்கும் சமூதாயத்தை எழுச்சி பெறச் செய்யவும், கூட்டுறவு அமைப்பே சிறந்த ஊன்றுகோலாகும் என்ற உணர்வுடன் செயல்பட, மீனவ மகளிர் விரிவாக்கப் பணி அடிகோலியது. 1981இல் 3 மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களுடன் துவக்கிய இப்பணி தற்போது 8 மாவட்டங்களில் 6000-க்கும் மேற்பட்ட மீனவ மகளிர் உறுப்பினர்களைக் கொண்ட 42 சங்கங்கள் திறம்படச் செயல்பட்டு வருகின்றன.

இத்திட்டம் செயலான முதல் தளம் செங்கல்பட்டு மாவட்டமாகும். திருச்சினாங்குப்பத்தில் துவக்கப்பட்ட முதல் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கத்தைத் தொடர்ந்து, பனையூர், செம்மஞ்சேரி, குளேரிக்காட்டுக்குப்பம், தேவனேரிக் குப்பம் ஆகிய இடங்களில் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாயின. பட்டிப்புலம், நீலங்கரை, ரெட்டிக் குப்பம், பழவேற்காடு ஆகிய 4 குப்பங்களிலும் மீனவ மகளிர் மன்றங்கள் செயல்படுகின்றன. எண்ணூர், மகாபலிபுரம், காட்டுப்பள்ளிக்குப்பம், கரிக்காட்டுக் குப்பம், ஈஞ்சம்பாக்கம் ஆகிய பலவிடங்களிலிருந்தும் கூட்டுறவுச் சங்கம் வேண்டி வந்த மனுக்கள் பரிசீலனையில் உள்ளன. மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மீனவ மகளிர் மேம்பாட்டிற்காகச் செயலாகும் திட்டங்கள் வருமாறு:



**கடனுதவியும் சேமிப்பும்**

மீன் தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவப் பெண்கள் பல முதலைகளான பெரும் வியாபாரிகளிடமும், இடைத்தரகர்களிடமும் கடும் வட்டிக்குக் கடன் பெற்று, அன்றாடம் கிடைக்கும் சிறு வருமானத்தில் ஒரு பகுதியைக் கூட தமக்கெனப் பெற வழியின்றி, அவதிப்படுகிறார்கள். இதிலிருந்து விடுபட வழி தெரியாது தவித்துக் கொண்டிருந்த இவர்கள் வாழ்க்கையிலே இளந்தென்றலாக மீனவ மகளிர் விரிவாக்கப் பணியின் செயல்பாடுகள் அமைந்தன.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளை அணுகி மீனவ மகளிருக்கு மிகக் குறைந்த வட்டியில் (ஆண்டுக்கு4சதவீதம்) கடன் உதவி அளிக்கப்பட்டுள்ளது. நிச்சயமற்ற கடல் மீன்தொழில் இயற்கையின் மாறுபட்ட நியதிகளால் 2|3 மாதங்கள் புயல், கடும் காற்று, மழை எனப் பாதிப்புறும்போது மீனவ மக்கள் வறுமைப்படும் நிலையைத் தவிர்க்க இவ்விரிவாக்கப் பணித்திட்டம் மீனவ மகளிரிடையே சேமிப்புப் பழக்கத்தை வளர்த்துள்ளது. கடன் உதவி வழங்கும் போதே பெறும் தொகையில் 10 சதவீதம் சேமிப்பாக வசூலிக்கப்பட்டு, வங்கிகளில் முதலீடு செய்யப்படுகிறது. இதன் மூலம் சேமிப்பின் தத்துவத்தையும் அதன் நன்மையையும் மகளிர் நன்கு உணர்ந்து சிறுசேமிப்புத் திட்டங்களைச் செயல்படுத்திப் பயன் கண்டு இன்று தன்னம்பிக்கையுடன் கடன் வட்டித் தொல்லையிலிருந்து மீட்புப் பெற்றுள்ளனர்.

**சுயவேலை வாய்ப்பு**

மீன் விற்பனைக்குச் செல்லாத இளம் மகளிருக்கு, அவர்கள் நேரத்தைப் பயனுள்ளதாக்கி வருமானம் ஈட்ட வாய்ப்பு அமைத்துத் தரும் பொருட்டு, தையல் இயந்திரங்கள் சங்கங்களின் மூலம் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன: இவர்கள் அதில் ஈடுபட்டு வருவாய் ஈட்ட வழி வகுக்கப்பட்டுள்ளது.

சாதாரணமாகவே மீனவப் பெண்கள் பரம்பரைத் திறமை

யுடன் வலை முடித்து, தங்கள் ஓய்வு நேரத்தைப் பயனுள்ள தாக்கும் வழக்கமுள்ளவர்கள் என்றாலும், அவர்களுக்கு அதில் சிறு வருவாய் ஈட்ட வழிகாணலும் மீனவ மகளிர் விரிவாக்கப் பணியின் ஒரு செயல்பாடாகும். வலை பின்னுவதற்கு இலவசமாக நைலான் நூல் வழங்கி, பின்னிய வலைகளுக்குக் கூலி தரவும், முடித்த வலைகளை விற்கவும் சங்கமே ஏற்பாடு செய்தது. ஆனால் இத்திட்டம் செங்கை மாவட்டத்தில் நிரந்தரமாகப் பயன்தரவில்லை. வலை பின்னுவதில், படித்த இளம் மகளிர் அதிக ஆர்வம் காட்டாமையாலும், வலைபின்னி முடிக்க ஆகும் காலத்துக்கேற்ற கூலி கிடைக்க வாய்ப்பில்லாததாலும், கையால் முடிக்கும் வலைகள் இயந்திர வலையுடன் போட்டி போட இயலாமலும் இத்திட்டம் தொடர்ந்து நடைபெறவில்லை.

### பயிற்சித் திட்டங்கள்

கூட்டுறவுச் சங்க நிர்வாகிகளுக்கும் உறுப்பினர்களுக்கும், கூட்டுறவின் தத்துவத்தைப் புரிந்து கொண்டு சங்கத்தைத் திறம்பட நடத்தவும், சங்கக் கணக்குகளைப் பராமரிக்கவும், சங்கத்தில் தங்களின் பொறுப்பை உணர்ந்து சிறப்பாகச் செயல்படவும், சங்கத்தின் மூலம் பெறத் தக்க பல திட்டங்களை அறிந்து அவற்றின் பயன் காணவும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் உதவியுடன் உள்ளுறைப் பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டது. முதலில் 21 நாட்களாக நடத்தப் பெற்ற பயிற்சி, மீனவ மகளிர் கடலுக்குச் செல்லும் தங்கள் கணவரின் தொழிலுக்கு உதவுவதையும், மீன் விற்பனை மட்டுமன்றி,குடும்பத்தை நிர்வகிக்கும் கடமையையும் விடுத்து,தொடர்ந்து மூன்று வாரங்கள் வெளியூரில் தங்க இயலாத சிரமத்தைத் தெரிவித்ததால், 10, 11 நாட்கள் என இரு தனிப் பிரிவுகளாக நடத்தப் பெறுகிறது. நடேசன் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் நடைபெறும் குறுகிய காலப் பயிற்சியானஇதில், மீனவ மகளிர் உற்சாகத்துடன் பங்கேற்றுப் பயனடைகிறார்கள். இதுவரை 19 கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் இப்பயிற்சியில் பங்கேற்றுள்ளனர்.

சங்கங்களிலிருந்து பெறப்படும் தொகையை எவ்வாறு பயன்படுத்துவது,முறையாகத் தவணை தவறாது வசூலிப்பது, வங்கியில் திருப்பிச் செலுத்துவது, இவற்றால் பெறத்தக்க பயன்கள் ஆகியவற்றை விளக்கும் வகையில் ஒரு நாளைய பயிற்சியும், மீனவ மகளிர் விரிவாக்கப் பணி யுகோ வங்கி சென்னை மத்தியக் கிளையுடன் இணைந்து நடத்தியுள்ளது.

### சுய தொழில் பயிற்சி

சங்க உறுப்பினர்கள் தங்கள் ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் கூடுதல் வருவாய் பெறும் விதத்தில் உழைப்போர் மகளிர் பலநோக்கு நிறுவனத்தின் மூலம் சோப்பு, மெழுகுவர்த்தி, பழரசம் தயாரித்தல் போன்ற பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், பாய் பின்னும் பயிற்சி, பிளாஸ்டிக் நூல்கொண்டு கைவினைப் பொருட்கள் செய்தல் ஆகிய பயிற்சிகளும் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

### கல்வி வாய்ப்பு

சங்க உறுப்பினர்களின் கல்வித் திறனை அதிகரிக்க முதியோர் கல்வி மையங்கள் தனியார் மற்றும் அரசு நிறுவனங்களின் ஒத்துழைப்போடு செம்மஞ்சேரி, ஈஞ்சம்பாக்கம்,பனையூர்க்குப்பம் ஆகிய இடங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளன. மீனவக் குழந்தைகளின் கல்வி வசதிக்காகச் செம்மஞ்சேரிக் குப்பத்தில் வட்டார வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஆரம்பப்பள்ளி இரண்டு ஆசிரியர்களுடன் நடத்தப் பெறுகிறது. பள்ளிக்குத் தேவையான கட்டடம் வங்காள விரிக்குடாத் திட்டத்தின் உதவியுடனும், சாதனங்கள் ரோட்டரிக்குழு உதவியிலும் இலவசமாகப் பெறப்பட்டன. இன்று ரோட்டரி குழுவால் ஒருநல்லகல்கட்டடமும், வட்டார வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பிறிதொரு பள்ளிக் கட்டடமும் கட்டப் பெற்றுள்ளன.

### தாய்சேய் நலம்

மிகச் சிறிய குழந்தைகளின் ஆரம்பப் பராமரிப்புக்காக, பால்வாடிகளும், குப்பங்களில் இயங்கி வருகின்றன. பட்டிப்புலம் மற்றும் சூளேரிக் காட்டுக்குப்பத்தில் குழந்தைகளுக்காக ஆரம்ப நல நிலையும் இயங்கிவருகிறது. இங்கு கல்வியளிப்பதுடன் சத்துணவும் குழந்தைகளுக்கு அளிக்கப்படுகிறது. இவற்றில் படித்த மீனவ மகளிருக்குத் தக்க பயிற்சியளிக்கப்பட்டு ஆசிரியைகளாகவும், உதவியாளர்களாகவும், விதவைத் தாய்மார்கள் ஆயாக்களாகவும் பணி வாய்ப்புப் பெற்றுள்ளனர். தேவனேரிக் குப்பத்தில் மீனவக் குழந்தைகளுக்கான காப்பகம், மகளிர் தொண்டுநிறுவனம்நடத்துகிறது. குழந்தைகளுக்கு அடிப்படை எழுத்தறிவு, விளையாட்டுகள், இவற்றுடன் சத்துணவும் அளிக்கப்படுகிறது. மீன் வியாபாரத்திற்குச் செல்லும் மீனவ மகளிருக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

### வேலை வாய்ப்பு

மீனவ மகளிர் தங்கள் சமூகத்தினரின் முன்னேற்றத்துக்காகக் கூட்டுறவுச் சங்கத் தலைவி— நிர்வாகி பொறுப்பேற்றுச் செயல்படுகின்றனர். அவர்களுக்குள்ள சேவை உணர்வு மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்

> **'மீனவ மகளிர் விரிவாக்கப் பணி' செயலான முதல் தளம், செங்கல்பட்டு மாவட்டமாகும்.**
>
> **தமிழ்நாட்டின் எல்லைக் கடலோர மாவட்டங்களில் உள்ள 442 மீனவர் குப்பங்களில், மகளிர் விரிவாக்கப்பணி செயல்படுகிறது.**
>
> **1981இல் 3 மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களுடன் துவக்கிய இப்பணி, தற்போது 8 மாவட்டங்களில் 6000க்கும் மேற்பட்ட மீனவ மகளிர் உறுப்பினர்களைக் கொண்ட442 சங்கங்கள் மூலம் திறம்படச் செயல்பட்டு வருகின்றது.**

கங்கள் வழியாக நலத்திட்டங்கள் செயலாக உதவுகிறது. சங்க உறுப்பினர்களில் படித்த பெண்களுக்குச் சங்க எழுத்தர் வேலை, பால்வாடியில் ஆசிரியை வேலை, சுகாதார மையத்தில் முதலுதவிப் பணியாளர், மீன் விற்பனை நிலையங்களில் விற்பனையாளர் மற்றும் முதியோர் கல்வி ஊக்குநர் ஆகிய வேலை வாய்ப்புகள் பல கிடைக்க வழி வகை செய்யப்பட்டுள்ளன.

## மருத்துவ வசதி

சங்கத்தின் மூலம் மீனவ மக்களின் உடல் நலம் பேண சிறு சுகாதார மையம், வி.எச்.எஸ். நிறுவனத்தின் மூலம் அமைத்து மருத்துவ வசதி அளிக்கப்பட்டுள்ளது. இத்தகைய சிறு மையம் ஒன்று பட்டிப்புலத்தில் இயங்குகிறது. இம்மையத்தில் மருந்துகள், ஆவணங்கள் பாதுகாப்புக்கு அலமாரிகள், மைய அலுவலர்கள் அமர, பணிபுரிய மேசை நாற்காலிகள் ஆகிய சாதனங்கள் வழங்கப்பட்டு மையம் இல்லாத இடங்களில் படித்த மீனவ மகளிர் மருத்துவப் பணியாளர்களாகப் பயிற்சி பெற்று குப்பங்களில் அடிப்படை மருத்துவ வசதி கிடைக்கச் செயலாற்றுகிறார்கள்.

## மறுவாழ்வுத் திட்டங்கள்

ஊனமுற்றோருக்குப் பிறர் உதவியின்றித் தாமே தம்மை நடத்திக் கொள்ள ஏதுவாக, மகளிர் தொண்டு நிறுவனத்தின் மூலம் இயங்கு உபகரணங்கள் அளித்து மறுவாழ்வு கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது. ஆதரவற்ற விதவைகளுக்கும், முதியோர்க்கும் ஒய்வூதியம் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. ஆதரவற்ற விதவைகளுக்குப் பால்வாடிகளிலும், குழந்தைகள் காப்பகங்களிலும் மட்டுமின்றி, ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இயங்கும் பள்ளிகளிலும், பயிற்சி நிலையங்களிலும், சத்துணவுக் கூடங்களிலும் ஆயாக்களாகப் பணி அளிக்கப்படுகிறது.

## போக்குவரத்து வசதி

தலைச்சுமையாக மீன்களை அருகிலும், தூரத்திலுமுள்ள இடங்களில் விற்பனை செய்வது மீனவப் பெண்களின் அன்றாடப் போராட்டமாகும். மீனவ மகளிரின் இந்தத் துன்பத்தைத் துடைப்பதற்குச் செம்மஞ்சேரிக் குப்பத்தில் சங்க உறுப்பினர்களுக்கு வட்டார வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1/3 மானியத்தில் விசைபொருத்திய மூன்று சக்கர வண்டிகள் மூன்று விநியோகிக்கப்பட்டன. இவை மீன்களை விரைவிலும், தூரத்திலுள்ள சந்தைகளுக்கும் நல்ல தரத்தில் எடுத்துச் செல்லப் போக்குவரத்து வசதியாயின.

## ஏனைய உதவிகள்

பனையூர், பட்டிப்புலம், தேவனேரி ஆகிய குப்பங்களில் உணவு மற்றும் விவசாய நிறுவனம் சமுதாயக்கூடம் கட்டித் தந்து, சங்கக் கூட்டங்கள் மட்டுமன்றி முதியோர் கல்வி மையம், சிறு சுகாதார மையம், பால்வாடி, காப்பகம் ஆகியவையும், சமுதாய விழாக்கள், திருமணங்கள் மற்றும் முகாம்கள், சிறப்பு வகுப்புகளும் நடத்த வழிவகை செய்துள்ளது. தேவனேரிக் குப்பத்தில் குழந்தைக் காப்பகம், பனையூர்க் குப்பத்தில் முதியோர் கல்வி மையம் தவிர பொழுது போக்குச் சாதனமான தொலைக்காட்சிப் பெட்டி இயக்கம் இவற்றுக்குச் சமூகக் கூடம் பயன்படுத்தப்படுகிறது. செம்மஞ்சேரியில் - ரோட்டரி நிறுவனம் கட்டித் தந்த சமூகக் கூடம் முதியோர் கல்வி மையம், தொலைக்காட்சிப் பெட்டி, தையல் இயந்திரங்கள் இயக்குதற்கும், பாதுகாப்புக்கும் உதவுகிறது. ஊரக வளர்ச்சித்திட்டத்தின் கீழ்க் குப்பத்தில் சுகாதாரக் கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. மீன்துறையில் நலத் திட்டங்கள் வழியும், பஞ்சாயத்துத்திட்டத்தின்கீழும் மற்றும் தொண்டு நிறுவனங்கள் உதவியிலும் குடிநீர் வசதி செய்யும் பொருட்டு கை உந்துக் குழாய்கள் மற்றும் மேல்நிலைத்தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன.

**வீடற்றவர்களுக்கு வீட்டுவசதி வழங்கும் சர்வதேச ஆண்டாக இவ்வாண்டு(1987) கொண்டாடப்படுகிறது. ஹட்கோவின் ஒத்துழைப்புடன் தமிழக அரசு புதிய திட்டம் ஒன்றைச் செயல்படுத்த உள்ளது. இதன் மூலம் சென்னையை அடுத்த கத்திவாக்கம் எண்ணூர் பகுதியில் உள்ள 330 குடும்பங்களுக்கு ரூ 27 இலட்சத்து 93 ஆயிரம் செலவிலும், மதுரை பெரியார் நகரிலுள்ள 2010 குடும்பங்களுக்கு ரூ 231 இலட்சத்து 93 ஆயிரம் செலவிலும் வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன.**

## எதிர்காலத் திட்டங்கள்

1. கடலோர மீனவப்பெண்கள் அனைவரையும் கூட்டுறவின் அடிப்படையில் சங்க உறுப்பினர்களாக்கவும், மகளிர் அனைவரும் எழுத்தறிவும், விழிப்புணர்ச்சியும் பெற, கல்வி மையங்கள் ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

2. பனையூர், செம்மஞ்சேரி, தேவனேரி மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள், கிடைத்த அரசுப் பங்குத்தொகையின் அடிப்படையில் சமூகநல வாரியத்தின் ஒத்த மானியம் பெற நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

3. பனையூர் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கம் மீன் வியாபாரம் செய்து லாபமீட்ட மூன்று ஐஸ் பெட்டிகள் வாங்கி, மீன்களைத் தரம் கெடாமல் குளிர் பதனப்படுத்தி நல்லவிலை பெற உதவவும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

4. தேவனேரிக்குப்பம் மீனவ மகளிர் கூட்டுறவுச்சங்கம் தையல் மையம் ஒன்று அமைத்து நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் மூலம் வேலை வாய்ப்பு பெறவும், பாய் பின்னும் தறிகளுடன் மையம் அமைத்து அதன் வாயிலாக இளம் மகளிருக்குப் பயிற்சியும் அளித்து, பாய் பின்னி விற்று அவர்களின் பொருளாதார உயர்வுக்காகச் செயல்படவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

5. செம்மஞ்சேரியில் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கம் வழியாக நியாயவிலைக்கடை துவக்கி நடத்த ஏற்பாடு செய்யப்படுகிறது.

6. விழிப்புணர்ச்சி முகாம் மற்றும் பல பயிற்சி முகாம்கள், கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்று நடத்தவும், சமூகநல வாரியத்தின் மூலம் நிதி உதவி பெற நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

7. பட்டிப்புலத்தில் வலை பின்னும் மையம் ஒன்று துவக்கி சமூகநல வாரியத்தின் மூலம் முழு மானியத்தில் வலைபின்னும் இயந்திரங்கள் பெற்று, படித்த இளம் மீனவ மகளிருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தரவும் முயற்சி எடுக்கப்படுகிறது.

இவ்வாறாக, மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களால் ஏற்படும் பல நன்மைகளோடு தங்கள் கடமைகளையும், உரிமைகளையும் உணர்ந்து அவைகளில் பெருமளவில் உறுப்பினராகச் சேர்ந்து பயன் அடைகிறார்கள்.




# குழந்தைகள் தினவிழா

நவம்பர் 14—பண்டித ஜவகர்லால் நேரு அவர்களின் பிறந்த நாள். குழந்தைகளால் நேரு மாமா என்று அன்புடன் அழைக்கப்படும் பண்டித நேரு அவர்களின் பிறந்தநாள் குழந்தைகள் தினமாக நாடெங்கும் உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது.

தமிழ்நாடு அரசின் சார்பில் செய்தி - மக்கள் தொடர்புத் துறையால் 14.11.87 சனிக்கிழமை அன்று பண்டித நேரு அவர்களின் பிறந்தநாள் விழா சென்னை கலைவாணர் அரங்கில் சிறப்புடன் கொண்டாடப்பட்டது.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ. ஆ. ப அவர்கள் தமது வரவேற்புரையில், ''நாட்டின் நல்வாழ்வுக்காகவும், ஒளிமயமான எதிர்காலத்திற்காகவும் பல சீரிய சிந்தனைகளைச் செயல்படுத்தியவர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள். தாம் பெரிதும் மதித்துப் போற்றக் கூடிய குழந்தைகளின் நாளாகத் தமது பிறந்தநாள் கொண்டாடப்பட வேண்டும் என்று பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் விரும்பியதற்கேற்ப நாடே இந்த நாளைக் கொண்டாடுகிறது'' என்று கூறி, அனைவரையும் வரவேற்றார்.

மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் திரு வி. வி. சுவாமிநாதன் அவர்கள் தமது தலைமையுரையில்,

''பண்டித நேரு அவர்களின் பிறந்தநாள் குதூகலத்துடன் கொண்டாடப்பட வேண்டும் என்பது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கட்டளையாகும். குழந்தைகளை அன்புடன் நேசிப்பவர் நேரு. குழந்தையை ரோஜாவோடு ஒப்பிடும்போது, ''ரோஜாவுக்கு முள் உள்ளதைப் போல நம்நாட்டுக் குழந்தைகளுக்கும் வறுமைச் சூழ்நிலை உண்டு. 'இளமையில் கொடிது வறுமை' என்பர். முள்ளில்லா ரோஜாக்கள் மலரவேண்டும் என்பதற்காகத்தான் குழந்தை தாய்ப்பாலை மறந்தவுடன் ஒருவேளை சத்துணவு வழங்கப்படுகிறது. குழந்தை கருவிலே இருக்கும் போதுகூட, தாய்க்குச் சத்துணவும், தடுப்புஊசியும் போடப்படுகின்றன'' என்று குழந்தைகள் நலம் பற்றி எடுத்துரைத்தார்.

குழந்தைகள் தினத்தையொட்டி விழாவின் இறுதியில் ''எங்களையும் வாழ விடுங்கள்' என்ற திரைப்படம் திரையிடப்பட்டது. இத்திரைப்படத்தினைத் துவக்கி வைத்து, மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.

தமது உரையில், ''குழந்தைகள் தினத்தை யொட்டி இன்று பல்வேறு நிகழ்ச்சிகளைப் பல்வேறு பகுதிகளிலும் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவர் அவர்களின் அரசு நடத்தி வருகிறது. ரஷ்ய நாட்டில் தயாரிக்கப்பட்ட 17 படங்கள் குறிப்பாக அறிவியல், தொழில்நுட்ப அறிவியல் படங்களும், ஒழுக்க உணர்வினை வளர்க்கும் படங்களும் இன்று திரையிட்டுக் காட்டப்படுகின்றன.

''எதிர்கால இந்தியாவின் செம்மைக்கும் சிறப்புக்கும் இளங்குழந்தைகளின் வாழ்வு முக்கியம் என்பதாலும், எதிர்காலச் சமுதாயத்தின் மேம்பாடு கருதியும் ஆண்டுக்கு ரூ. 180 கோடி செலவில் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கப்படுகிறது. இந்திய நாட்டில் மட்டுமல்ல, ஐக்கிய நாடுகள் அமைப்பே வியக்கக் கூடிய அளவுக்கு பொன்மனச் செம்மல், குழந்தைகளுக்கு இலவசமாய் பாடப்புத்தகங்களும், காலணிகளும் வழங்கி வருகிறார்.

''ஒழுக்கம், பண்பாடு வளர்க்கும் பாடத்திட்டமும், படித்து விட்டு வந்ததும் சொந்தமாகத் தொழில் செய்து பிழைத்துக் கொள்ள தைரியம் கொடுக்கும் தொழிற்கல்விப் பாடத்திட்டமும் தமிழகக் குழந்தைகளுக்குத் தேவை என்று முதல்வர் அவர்கள் விரும்புகிறார். அப்படியொரு கல்வித் திட்டம் தமிழகத்தில் வரும் கல்வி ஆண்டிலிருந்து கொண்டுவரப்படுகிறது'' என்று குறிப்பிட்டார்.''

பள்ளிக் கல்வி இயக்குநர் திரு கி. கோபாலன் அவர்கள் நன்றி கூறினார்.

# கோவையில் குழந்தை இலக்கிய மாநாடு



குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் சார்பில், எட்டாவது குழந்தை இலக்கிய மாநாடு நவம்பர் 14, 15 இரு நாட்கள் கோயம்புத்தூரில் நடந்தது.

முதல் நாள் காலை, திரு ஈ. வெங்கடேசலு தலைமையில், டாக்டர் சந்திரகாந்தி கோவிந்தராஜுலு, குழந்தை புத்தகக் காட்சியையும், குழந்தை எழுத்தாளர் புகைப்படக் காட்சியையும் திறந்து வைத்தார். கோவை வானொலி நிலையம் ஏற்பாடு செய்த 'ரோஜாத் தோட்டம்' என்ற பள்ளி மாணவ, மாணவியரின் கலை நிகழ்ச்சி நடந்தது.

அன்று மாலை, கவிஞர் செல்ல கணபதி அனைவரையும் வரவேற்றார்.

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் மாநாட்டைத் தொடங்கி வைத்துப் பேசுகையில், ''நல்ல பண்புகளைக் குழந்தைகளிடத்திலே வளர்க்க வேண்டும். குழந்தைகளை எந்தத் திசை நோக்கி வளர்க்கிறோமோ அதன் படிதான் சமுதாயத்தின் எதிர்காலமும் இருக்கும். பொதுமக்களுக்குச் சேவை செய்த தலைவர்களைக் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்த வேண்டும். கல்வியாளர்களை, அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். குழந்தைக் கவிஞர்கள், நல்லபடைப்புகளைப் படைக்க முன்வரவேண்டும்'' என்றார்.

குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா, தம் தலைமை உரையில், தமிழக அரசு குழந்தைப் புத்தக டிரஸ்ட் ஒன்றை அமைக்கவேண்டும் என்றும், சத்துணவுத் திட்டத்தை மிகுந்த கருணை உள்ளத்துடன் கொண்டு வந்து குழந்தைக் குலத்திற்குப் பெருந்தொண்டாற்றிவரும் நம் தமிழகமுதல்வர் மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்கள், குழந்தை இலக்கிய வளர்ச்சிக்கும் பேராதரவு தருவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது'' என்றும் குறிப்பிட்டார்.

குழந்தைஎழுத்தாளர்கள் புலவர் தணிகை உலகநாதன், திரு வாண்டுமாமா, பதிப்பாளர் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் ஆகியோருக்கு மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் கேடயம் வழங்கினார்.

'குழந்தை எழுத்தாளர் யார்? எவர்?' என்ற நூலை, பேராசிரியர் சை. வே. சிட்டிபாபு வெளியிட்டார்.

இரண்டாம் நாள் காலை. சென்னைத் தொலைக் காட்சி நிலைய இயக்குநர் திருமதி அகிலாசிவராமன், கருத்தரங்கிற்குத் தலைமை வகித்தார்.

குழந்தை இலக்கிய வளர்ச்சி பற்றி பல எழுத்தாளர்கள் பேசினார்கள். மாலை நடந்த பாடலரங்கத்தில் பல கவிஞர்கள் இயற்றிய பாடல்களைக் குழந்தைகள் பாடினார்கள்.

புதிய குழந்தை நூல்களை டாக்டர் நா.மகாலிங்கம் வெளியிட்டார்.

குழந்தை இலக்கியப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு ஏவி.எம். பதக்கங்கள், எல்லப்பாரங்கம்மாள் நினைவுப் பரிசுகள், செல்லப்பன் நினைவுப் பரிசுகள் ஆகியவற்றை வழங்கி, மாண்புமிகு மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் உரையாற்றினார்.

குழந்தை எழுத்தாளர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. எச். கிருஷ்ணமூர்த்தி நன்றி நவின்றார்.

## தமிழக அரசுக்கு மத்திய அமைச்சர் பாராட்டு

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், நல்ல நூல்களை அச்சிட்டு வெளியிடுவதற்காகத் தமிழக அரசையும், முதல்வர் எம்.ஜி.ஆர் அவர்களையும் பாராட்டுகிறேன. குறைந்த விலையில் நல்ல தரமான நூல்கள் வெளிவர அரசு ஆவன செய்யவேண்டும்.

''தமிழகத்தில், குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கப்படுகிறது. சத்துணவுத் திட்டம் தமிழகத்தில் மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது.''

[கோவையில் 15.11.87 அன்று நடந்த குழந்தை இலக்கிய மாநாட்டில் மாண்புமிகு மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு ப. சிதம்பரம் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து]

## இருள் நீக்கும் பிள்ளைகள்

ஒவ்வொரு பள்ளியிலும் நுழையும் பிள்ளைகள் கல்வி கற்று மருத்துவர்களாகவும் வழக்கறிஞர்களாகவும் நிர்வாக நிபுணர்களாகவும் மாறி வாழ்வில் ஏற்றம் பெற வேண்டும். அந்தப் பிள்ளைகளின் மூலம் தான் நமது நாட்டிலுள்ள இருள் நீக்கப்படும். கஷ்ட கஷ்டங்கள் துடைக்கப்படும்.

— பேரறிஞர் அண்ணா



# செயற்கைக் கோள் தகவல் தொடர்பு என்றால் என்ன?

பூமியின் தரைமட்டத்திலிருந்து 35,800 கிலோமீட்டர் உயரத்தில் பூமியைச் சுற்றி வளைவான பாதையில் தகவல் தொடர்பு செயற்கைக்கோள் சுற்றி வருகிறது. அதிவேகத்துடன் அது சுழல்வதால் பூமியிலிருந்து பார்ப்பவர்களுக்கு அது ஒரே இடத்தில் இருப்பதைப் போல் தோன்றும். இதே மாதிரி பாதையில்தான் பெரும்பாலான தகவல் தொடர்பு செயற்கைக் கோள்கள் செயல்பட்டு வருகின்றன.

செயற்கைக்கோள் நுண்ணலையைத் திரும்பி அளிக்கும் ஒரு கருவியாகும். தரை நிலையங்களிலிருந்து சைகைகளை அது பெறும். இச்சைகைகளை மறுபடி ஒலிபரப்புவதற்காக அலை வரிசையை அது மாற்றும். சைகைகளின் சக்தி அதிகரித்து பூமிக்கு அது மறுபடியும் அனுப்பும். தரை நிலையங்கள் பொதுவாகப் பெரு நகர்களிலிருந்து சற்றுத்தொலைவிலேயே அமைக்கப்படும். செயற்கைக் கோள்களிலிருந்து வரும் செய்திகள் மிக அருகாமையிலுள்ள பெருநகர் நுண்ணலை இணைப்புகளுக்கு அனுப்பப்படும். தேசிய தொலைபேசி வசதியுடன் இந்த அமைப்புக்கள் ஒருங்கிணைக்கப்பட்டிருக்கும்.

செயற்கைக்கோளின் நேரடிப் பார்வையிலுள்ள இரண்டுதரை நிலையங்கள் ஒன்றுக்கொன்று தொடர்பு கொள்ளலாம். செயற்கைக்சோள் தகவல் தொடர்பு அமைப்பின் இது ஒரு முக்கிய அம்சமாகும். அதிக இடைவெளி கொண்டுள்ள இடங்களுக்குச் சிக்கனமாக இதன் மூலம் தொடர்பு கொள்ள முடியும். கடல் அல்லது மலைகளினால் பிரிக்கப்பட்டுள்ள பிரதேசங்களைச் செயற்கைக் கோள் மூலம் மிக எளிதாகத் தொடர்பு கொள்ளலாம். வேறு எந்த முறைப்படியும் இப்பிரதேசங்களைத் தொடர்பு கொள்ள முடியாது.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், நேரடித் தொலைக்காட்சி ஒளி பரப்புகள் மற்றும் வானிலை ஆராய்ச்சிக் குறிப்புகளைச் சேகரிப்பது ஆகியவைகளுக்கும் தகவல் தொடர்புச் செயற்கைக் கோளைப் பயன்படுத்தலாம்.



# எங்கள் ஆசிரியர்

அன்பிற்கினியவன்

அவரே எங்கள் ஆசிரியர்
அறிவை வளர்க்கும் அவர் பெரியர்
கவரும் பேச்சால் மற்றவரைக்
களிப்புற வைக்கும் அண்ணலவர்!

அன்பால் எங்களை அரவணைத்தே
அனைவரும் புகழ்ந்திட நடந்திடுவார்
வம்பாய்த் தகராறு செய்பவரும்
வணங்கிப் போற்றுவார் இவர்தனையே!

இனிமையாய்ப் பாடல் பாடிடுவார்
இன்சொல் தன்னையே இயம்பிடுவார்
பணிவாய் அவரின் சொற்கேட்டே
பாலர்கள் நாமும் உயர்ந்திடுவோம்!

பாடங்கள் அழகாய் நடத்திடுவார்
படமும் நன்கு போட்டிடுவார்
பாருங்கள் இவரே சிறந்தவராம்
பாருக்குள் இவர்போல் கிடையாதாம்!



# சிறுவர்களே! ஒரு விண்ணப்பம்!

பூங்கோவன்

அன்பாய்ப் பழகிட வேண்டும்
அறிவை வளர்த்திட வேண்டும்
இன்னல் விலக்கிட வேண்டும்
இனிமை சேர்த்திட வேண்டும்!
புன்னகை தேக்கிட வேண்டும்
புதுமை கற்றிட வேண்டும்
தன்னலம் நீக்கிட வேண்டும்
தகுதியாய் வாழ்ந்திட வேண்டும்!

நல்லவை செய்திட வேண்டும்
நன்னலம் பெருக்கிட வேண்டும்
அல்லவை அழித்திட வேண்டும்
அறநெறி போற்றிட வேண்டும்
தொல்லையைப் போக்கிட வேண்டும்
தூய்மையாய் இருந்திட வேண்டும்
சொல்லிலே இனிமை வேண்டும்
சொற்படி நடந்திட வேண்டும்!

# தெரிந்து கொள்ளுங்கள்!

கொழுப்புச்சத்து நிறைந்துள்ள பொருள்கள் என்ன?
வெண்ணெய், தாவர எண்ணெய், முட்டை, இறைச்சி, பால் ஆகியவற்றில் அதிகம் உள்ளது.

சர்க்கரைச் சத்து வியாதி உடலில் எந்த உறுப்பு சரிவர வேலை செய்யாததால் ஏற்படுகிறது?
பான்கிரியாஸ் என்ற சுரப்பி.

இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்ட முதல் இந்தியச் செயற்கைச் சந்திரன் எது?
ரோகிணி

மகாத்மா காந்தியடிகள் புற்றி உலகப்புகழ்பெற்ற சினிமா தயாரித்தவர் யார்?
ரிச்சர்டு அட்டன்பரோ.

தமிழகத்தில் அகன்ற வழி இருப்புப்பாதை உள்ள பாதைகள் எவை?
அ. சென்னை-உதமண்டலம் வழி.
ஆ. சென்னை-மங்களூர் வழி
இ. சென்னை-பெங்களூர் வழி.

பெனிசிலின் மருந்தை முதன் முதலில் கண்டுபிடித்தவர் யார்?
அலெக்ஸாண்டர் பிளமிங்.

தென்னை மிகுதியாகப் பயிராகும் மாநிலம் எது?
கேரளா.
செல்லின் உட்கருவில் உள்ள சில முக்கிய அமிலங்கள் எவை?
டி.என்.ஏ.ஆர். என்.ஏ

இந்தியாவில் உள்ள மிகப் பெரிய நீர் மின் திட்டம் எது?
பக்ராநங்கல்.

இந்தியாவிற்கு வருகை தந்த முதல் போப் ஆண்டவர் யார்?
போப்பாண்டவர் 6-வதுபால். 1964.

உலகில் பட்டு உற்பத்தியில் முதலிடம் பெறும் நாடு எது?
ஜப்பான்.

பயன்மிகு எண்ணெய்களுக்கு எடுத்துக்காட்டு தருக?
டர்பைன்டைன், யூகலிப்டஸ்.

ஜெனரேட்டரைக் கண்டுபிடித்த விஞ்ஞானி யார்?
1860ஆம் ஆண்டு பிகிஒண்டி என்ற அறிவியலார்

இந்தியாவிற்கு வந்த முதல் இயேசு சபை குரு யார்?
சேவியர் அடிகள்.

கொடி தினம் அனுஷ்டிக்கப்படும் நாள் எது?
டிசம்பர்-7.

சுதந்திர இந்தியாவின் முதல் பெண் கவர்னர் யார்?
—திருமதி சரோஜினி நாயுடு.

போர்வைகளுக்குத் தமிழ்நாட்டில் பெயர் பெற்ற ஊர் எது?
—சென்னிமலை

பூமியில் 48 கிலோ உள்ள ஒருவரது எடை, சந்திரனில் எவ்வளவு இருக்கும் ?
—8 கிலோ

குப்தர் கால துருப்பிடிக்காத இரும்புத்தூண் உள்ள இடம் எது?
—டில்லி

அச்சு இயந்திரத்தை முதலில் கண்டறிந்தவர் யார்?
—ஜான் கூடன்பர்க்.

தீயை அணைக்கப் பயன்படும் வாயு எது?
—கார்பன் டை ஆக்ஸைடு

பாரிஸ் நகரில் உள்ள ஈபில் கோபுரத்தின் உயரம் என்ன?
—320 மீட்டர்

சோதனைக்குழாய் குழந்தை முதன்முதலில் பிறந்த ஆண்டு எது?
—1978

பூமி தன்னைத்தானே 1 மணி நேரத்தில் சுற்றிக்கொள்ளும் தூரம் எவ்வளவு?
—1600 கி.மீ.

பர்மா நாட்டிற்கான இந்தியத் தூதுவர் யார்?
—ஐ.பி. சிங்.

சைப்ரஸ்தீவு எக்கடலில் உள்ளது?
—மத்திய தரைக்கடலில்.

உலக உணவு விவசாய ஸ்தாபனத்தின் தலைமையிடம் எது?
—ரோம்

பாலின் சுத்தத்தன்மையை அறிய பயன்படும் கருவி எது?
—லேக்டோ மீட்டர்

சீனிவாச ராமானுஜம் எந்தத் துறையில் வல்லவராக விளங்கினார் ?
— கணிதத் துறையில்.

பூமிக்கும் சந்திரனுக்கும் இடையிலுள்ள தூரம் எவ்வளவு?
—3.86 லட்சம் கி.மீ.

**முதன் முதலில் மோட்டார் சைக்கிளைக்கண்டுபிடித்தவர்யார்?**

காட்டிலீப் டெய்ம்லர் (Cottlieb Daimler) என்றஜெர்மனி நாட்டுப் பொறியியல் அறிஞர், தான் கண்டுபிடித்த எஞ்சினை இரண்டு சக்கர வண்டியில் பொருத்தி, எஞ்சின் வண்டியை இழுக்குமா என்பதைக் காண விழைந்தார்.

1888ஆம் ஆண்டு ஆங்கில நாட்டைச் சார்ந்த எட்வர்ட் பட்லர் என்பவர் மோட்டார் சைக்கிளை அமைத்து, திருமதி பட்லரை ஓட்டச் செய்தார். 1894ஆம் ஆண்டு மியூனிக்கில் மோட்டார் சைக்கிளை உண்டாக்கும் தொழிற்கூடத்தை ஏற்படுத்திய பட்லர், இரண்டு ஆண்டுகளில் 1000மோட்டார்சைக்கிளை விற்றார்.1900-ஆம் ஆண்டு வரை மூன்று சக்கர மோட்டார் சைக்கிள்களே உற்பத்தி செய்யப்பட்டன. பிரான்சில், வெர்னர் சகோதரர்கள் இரண்டு சக்கர மோட்டார் சைக்கிளைத் தயாரித்தனர்.

**முதன்முதலில் ஹெலிகாப்டர் எப்பொழுது பயன்படுத்தப்பட்டது?**

1907ஆம் ஆண்டு, பிரான்சு நாட்டில் லூயிஸ் பிரிகெட் (Louis Breguet) என்பவர் தமது பரிசோதனை ஹெலிகாப்டரில் பறந்தார். அடுத்தபடியாக பால் கார்னு (Paul Cornu) என்பவரும் ஹெலிகாப்டரில் பறந்துகாட்டினார். ஹென்ரிச் ஃபாக்கி (Heinrich Focke) 1936ஆம் ஆண்டு அதிக உயரம் செல்லும் ஹெலிகாப்டரைக் கட்டினார். நன்றி: கலைக்கதிர்

# மாசுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

—கங்காதர்தாஸ், இ.ஆ.ப.,
தலைவர்,
தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம்.

சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கப் பலமுனை நடவடிக்கை தேவைப்படுகிறது. பள்ளிப் பருவத்தில் இயற்கைச் சூழல் பற்றிய கல்வியிலிருந்து, அணுயுகத்தால் விளையும் தீமைகளைத் தடுப்பது போன்ற பல்வேறு நடவடிக்கைகள் இதில் அடங்கியுள்ளன. சமுதாயத்தில் எல்லாப் பிரிவினரிடையேயும் சுற்றுப்புறச் சூழல் பற்றிய விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவது, சுற்றுப்புறச் சூழல் மேலாண்மையின் முக்கிய அம்சமாகும்.

சுற்றுப்புறச் சூழலைப் பேணிக் காப்பது பற்றிய கருத்து இந்தியாவுக்குப் புதிதல்ல. வாழ்வின் ஆதார அமைப்பில், இயற்கையும் மனித இனமும் பிரிக்க முடியாத ஒரு பகுதி என்பதை இதிகாசக் காலங்களிலிருந்து அறிவோம். நமது மூதாதையரின் கருத்துப்படி இந்த அமைப்பு, நிலம், நீர், காற்று, தாவரம் மற்றும் விலங்கினம் என்ற ஐந்து பகுதிகளைக் கொண்டதாகும். இவைகள் ஒன்றோடொன்று தொடர்புகொண்டும், ஒன்றையொன்று சார்ந்தும் உள்ளன. இந்தியாவின் பண்டைக்கால வாழ்க்கைத் தத்துவம் மற்றும் வாழ்க்கை ஆதார அமைப்பில் சுற்றுப்புறச் சூழல் ஒரு முக்கியப் பங்கு வகித்தது. இந்தியாவில் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புக்காகத் தற்போது கொடுக்கும் முக்கியத்துவம் பண்டைய இந்தியாவில் உணர்ந்திருந்த உண்மையை மீண்டும் வெளிக்கொண்டு வந்ததைத் தவிர புதியதல்ல.

தொழில்துறையில், செய்முறையின் போது, திட, திரவ, வாயுக்கழிவுகள் வெளியேற்றப்படுகின்றன. தொழிற்சாலை எல்லையிலிருந்து வெளிவரும் கழிவு நீர், தொழிற்சாலை சம்பந்தப்பட்டது அல்ல என்ற ஒரு கருத்து மாசுக் கட்டுப்பாட்டுச்சட்டங்கள் இயற்றப்படும் வரை, நிலவி வந்தது. அதாவது, சுற்றுப்புறச் சூழலில் அதனால் ஏற்படும் விளைவுகளைப் பற்றித் தொழிற்சாலைகள் எண்ணிப் பார்க்கவில்லை. ஆனால் அதற்கு மாறாக நீர், நிலம் மற்றும் காற்று போன்ற பொது ஆதாரங்களைப் பாதிப்பது என்ற சமுதாயப் பிரச்சினை ஏற்படலாயிற்று.

சமுதாயத்திற்குத் தீங்கு விளைவிக்கா வண்ணம், சுற்றுப்புறச் சூழலின் ஆதாரங்களில் கழிவுகளை வெளியேற்றும் வகையில், இந்தப் பிரச்சினை தொழிற்சாலையின் எல்லைக்குள் தீர்க்கப்பட வேண்டும் என்பதே இந்த மாசுக்கட்டுப்பாட்டுச் சட்டங்களின் மூலக்கருத்து ஆகும். அதாவது, தொழிற்சாலை தனது கழிவுகளைச் சுற்றுப்புறச் சூழல் ஆதாரங்களில் வெளியேற்றுவதற்கு முன்பு அதனைச்சமுதாயத்திற்குப் பாதுகாப்பாக இருக்கும் வகையில் வெளியேற்றவேண்டும்.

இன்றைய தொழிலக அரங்கின் தனிச்சிறப்புகளில் ஒன்று இரசாயனத் தொழிற்சாலைகளின் விரைவான முன்னேற்றமாகும். மேற்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட தொழில்துறை முன்னேற்றத்தை எடுத்துக்கொண்டால், ஆரம்பக்காலங்களில் உலோகங்கள் சார்புடைய தொழில்கள் முன்னேற்றம், பின்பு இரசாயனத் தொழில் முன்னேற்றம், அதன் பின்னர் மின்னணுத் தொழிற்சாலை முன்னேற்றமும் ஏற்பட்டது. ஆனால் அதற்குமாறாக, வளர்ந்துவரும் நாடுகளில், வெவ்வேறு காலகட்டங்களில் ஏற்பட்ட வெவ்வேறு தரப்பட்ட தொழில் முன்னேற்றங்கள் ஒன்றன் பின் ஒன்றாக ஏற்படாமல், எல்லாவகைப்பட்ட தொழில்களும் ஒரே சமயத்தில் முன்னேறத் தொடங்கியுள்ளன.

சமுதாயத்தின், உணவு, உடை, வீடு மற்றும் நல்வாழ்வின் தேவைகளை இரசாயனத் தொழில் துறை பூர்த்தி செய்கின்றது. தீங்கு விளைவிக்கக் கூடிய எண்ணற்ற இரசாயனப் பொருட்கள் இறுதி நிலைப் பொருளாகவோ அல்லது இடைநிலைப் பொருளாகவோ அல்லது மூலப் பொருளாகவோ அமையும் வகையில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த அளவுகள் மேலும் அதிகரிக்கும். சில இரசாயனப் பொருட்கள், சுற்றுப்புறச் சூழலில் நச்சுத்தன்மை கொண்ட பொருட்களை வெளியேற்றக்கூடிய, தீப்பற்றக்கூடிய வெடிக்கக்கூடிய மற்றும் பெருங்கேட்டினை விளைவிக்கின்ற கிரியைகளை ஊக்குவிக்கும் தன்மை உடையன. அதனால், இப்படிப்பட்ட விளைவுகளைத் தவிர்த்துப் பாதுகாப்பளிக்கும் முறைகளை இரசாயனத் தொழிற்சாலைகள் கையாளுவது அவசியமாகும்.

தொழிற்சாலைகளின் திட்ட காலத்திலேயே உள்ளடக்கிய பாதுகாப்பு அமைப்புகள், பழுதுறாச் சாதனங்கள், நல்ல கிரியா ஊக்கிகள், பிரச்சினை ஏற்படுத்தும் பகுதிகளில் தகுந்த உறுப்புகளைத் தேர்ந்தெடுத்தல் ஆகியவைகள் பற்றித் திட்டமிடப்பட வேண்டும். மேலும்காலந் தவறாப் பாதுகாப்பு ஆய்வு மற்றும் தகுந்த பயிற்சியாளர்களை அமர்த்துவதும் வலியுறுத்தப்பட வேண்டும். தொழிற்சாலைகளில் இரசாயனப் பாதுகாப்புக்காகத் தகுந்த பயிற்சி பெற்ற ஆட்களை நியமிப்பதில் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை கடைப்பிடிக்கக் கூடாது. இரசாயனப் பொருட்கள் பாதுகாப்பு, தொழிற்சாலையின் மேலாண்மையில் ஓர் அம்சம் ஆகும்.

சுற்றுப்புறச் சூழல் பற்றிய விழிப்புணர்ச்சி என்பது ஒரு நாகரிக மோகமல்ல. மனித இனம் நீண்ட காலம் தழைத்து வாழ இது ஓர் அவசியமாகும்.



# மாண்புமிகு முதல்வர்-
# பல்வேறு சமூக சங்கங்களின்
# பிரதிநிதிகள் சந்திப்பு

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், வன்னியர் சங்கங்களின் பிரதிநிதிகளையும், பல்வேறு சமூக சங்கங்களின் பிரதிநிதிகளையும் தலைமைச் செயலகத்தில் சந்தித்து அவர்களது கோரிக்கைகளைக் கேட்டறிந்தார்.

25-11-'87 முதல் 30-11-'87 வரை மாண்புமிகு முதல்வரைக் கீழ்க்கண்ட சமூக சங்கங்களின் பிரதிநிதிகள் சந்தித்தனர். விவரம் வருமாறு:

## 25-11-'87

1. வன்னியர் சங்கம் மற்றும் வன்னியர் கூட்டமைப்பு, சென்னை-13.
2. வன்னியர் சங்கம், சென்னை-2.
3. வடஆர்க்காடு மாவட்ட வன்னிய குல க்ஷத்திரிய சங்கம், வேலூர்.
4. தமிழ்நாடு வன்னியர் பேரவை, சென்னை-2
5. தமிழ்நாடு வன்னிய குல க்ஷத்திரிய மகாஜனசங்கம், சென்னை-16.

## 26-11-'87

1. தமிழ்நாடு தேவர் பேரவை, சென்னை-8.
2. தமிழ்நாடு முக்குலத்தோர் சங்கம், தட்டாங்குளம், தஞ்சாவூர் மாவட்டம்.
3. தமிழ்நாடு முத்தரையர் சங்கம், சென்னை-21.
4. தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம், சென்னை-1.
5. அகில இந்திய அம்பேத்கார் மக்கள் இயக்கம், சென்னை-15.
6. ஷெட்யூல்டு இன மக்கள் விடுதலை கூட்டமைப்பு, சென்னை-31.
7. இந்தியக் குடியரசுக் கட்சி, சென்னை-2.
8. அனைத்திந்திய தேவாங்கர் ஸ்ரீசௌடேஸ்வரி நற்பணி மன்றம், சென்னை-79
9. தேவாங்கர் நற்பணி மன்றம், கோயம்புத்தூர்-12.
10. தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழகம் சென்னை-92.
11. இஸ்லாமிய நற்பணி மன்றம், கும்பகோணம்.
12. தமிழ்நாடு உவச்சர் குல நலச்சங்கம், காஞ்சிபுரம்.

## 27-11-'87

1. மாநில கொங்கு நற்பணி மன்றம், கோயம்புத்தூர்-2.
2. மாநில கொங்கு நண்பர்கள் சங்கம், சென்னை-15.
3. திருச்செங்கோடு வட்ட கொங்கு வேளாளர் சங்கம், சேலம் மாவட்டம்.
4. தமிழ்நாடு கிறித்துவ நலச் சங்கம், தென்னார்க்காடு மாவட்டம்-
5. ஆனைக்காடு உறவின் முறைச்சங்கம் சென்னை-23
6. தமிழ்நாடு யாதவ மகாசபை, சென்னை-10.
7. சௌராஷ்டிரா சபா, சென்னை-5.
8. தமிழ்நாடு கிறித்துவ நலச்சங்கம், சென்னை-17.
9. தமிழ்நாடு பருவதராஜகுல மீனவர் சங்கம், சென்னை-2.
10. தமிழ்நாடு தேவர் பேரவை, சென்னை-2
11. கொங்கு வேளாள சமூகநல மன்றம், சென்னை-6.

## 30-11-'87

1. தமிழ்நாடு முத்துராஜா முத்தரையர் சங்கம், சென்னை-99.
2. இந்தியக் குடியரசுக் கட்சி, சென்னை-31
3. கவுண்டர் மகாஜனசங்கம், மதுரை மாவட்டம்.
4. தேசிய தாழ்த்தப்பட்டோர் நல உரிமை இயக்கம், திருப்பூர்
5. தமிழ்நாடு முக்குலத்தோர் சங்கம், புதுக்கோட்டை.
6. தமிழ்நாடு வேட்டுவக் கவுண்டர் சங்கம், திருச்செங்கோடு.
7. தமிழ்நாடு சோழிய வேளாளர் சங்கம்.
8. தமிழ்நாடு போயர் சங்கம்.
9. தமிழ்நாடு பிராமணர் சங்கம், மதுரை.
10. தமிழ்நாடு பிராமணர் சங்கம், சென்னை மாவட்டம், சென்னை-28



தலைமைச் செயலகத்தில் 25-11-87 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் பல்வேறு வன்னிய சங்கங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கோரிக்கைகளைக் கேட்டறிந்தார்.



மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் 26-11-87 அன்று தலைமைச் செயலகத்தில் பல்வேறு சமூக சங்கங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து, அவர்களுடைய கோரிக்கைகளைக் கேட்டறிந்தார்.



27-11-87 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் பல்வேறு சமூக சங்கங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து அவர்களது கோரிக்கைகளைக் கேட்டறிந்தார்.



30-11-87 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் பல்வேறு சமூக சங்கங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து அவர்களது கோரிக்கைகளைக் கேட்டறிந்தார்.



# தேசிய ஒருமைப்பாடு வார விழா

உலகிலேயே மாபெரும் ஜனநாயக நாடுகளில் ஒன்றாகத் திகழும் நாடு நம் இந்தியத்திருநாடு. 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வு' என்ற உண்மையை உணர்ந்து வாழும் நாடாகும் நம்நாடு. இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஊறு நேரும் வகையில் எண்ணங்கள் எழக்கூடாது என்ற நன்னோக்குடன், நமது ஒற்றுமையை வலியுறுத்தும் வகையில், மறைந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களின் பிறந்தநாள் தேசிய ஒருமைப்பாடு நாளாகக் கொண்டாடப்பட்டது.

தமிழ்நாடு அரசின் சார்பில் தேசிய ஒருமைப்பாடு வார விழா சென்னை கலைவாணர் அரங்கில் நவம்பர் 19ஆம் நாள் தொடங்கி ஒரு வாரம் நடைபெற்றது.

விழாவின் தொடக்க நிகழ்ச்சியாக பள்ளி, மாணவ-மாணவியர் கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

செய்தி , மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன் இ.ஆ.ப. விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றார். விழாவினைத் தொடங்கி வைத்த மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தேசிய ஒருமைப்பாடு உறுதிமொழியைப் படிக்க, அனைவரும் தேசிய ஒருமைப்பாடு உறுதி மொழியை ஏற்றனர். ஒருமைப்பாட்டை வலியுறுத்தி மாண்புமிகு நிதி அமைச்சர் உரை ஆற்றுகையில்,

''மார்கரெட் தாட்சரைவிட அன்னை இந்திரா சிறந்த பெண்மணியாகத் திகழ்ந்தார். அவரது பிறந்தநாளில் தேசிய ஒருமைப்பாடு விழா நடைபெறுகிறது.

''இந்தியா எந்த ஒரு நாட்டின் மண்ணுக்கும் ஆசைப்படாது; அதே நேரத்தில் நமது மண்ணில் ஒரு பிடி இடத்தைக்கூட எந்த நாடும் பிடிக்கவிடாது. அதற்கான வலுவான படை நம்மிடம் உள்ளது'' என்று குறிப்பிட்டார்.

விழாவுக்குத் தலைமையேற்ற மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் திரு வி.வி.சுவாமிநாதன் அவர்கள் பேசுகையில், ''ஒருமைப்பாட்டுக்கு ஊறுவிளைவிக்கும் வண்ணம் ஏற்படும் இடர்ப்பாடுகள் என்னென்ன, எதனால் இவை உருவாகின்றன என்பதை ஆராய்ந்து அவைகளை அகற்ற வேண்டும். 'ஏர்இந்தியா' நிறுவனம் சில நாளிதழ்களின் துணையுடன் நடத்தியது போன்று ஒருமைப்பாடு குறித்துப் பேச்சுப் போட்டியைத் தமிழ்நாடு முழுவதுமுள்ள மாணவர்களிடையே நடத்தி, முதன்மையாக வருபவர்களைச் சென்னைக்கு அழைத்து, பின்னர் அவர்களை நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று வரச் செய்யலாம் என்ற திட்டம் ஆராய்ந்து வரப்படுகிறது'' என்று குறிப்பிட்டார்.

விழாவில் சட்டப்பேரவை உறுப்பினர்கள் திருமதி டி. யசோதா, திரு ஏ.எஸ்.ஏ ஆறுமுகம், திரு பி.உத்திராபதி, திரு கே.முத்துவேல், திரு செ.கு.தமிழரசன் ஆகியோர் உரையாற்றினர்.

**சிறுபான்மையோர் நல நாள்**

நவம்பர் 20ஆம் நாள் சிறுபான்மையோர் நல நாளாகக் கொண்டாடப்பட்டது.

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை இயக்குநர் திரு எம். பாலகிருஷ்ணன் இ.ஆ.ப. வரவேற்புரை ஆற்றினார்.

சமூகநலத் துறை இயக்குநர் திரு சி.தங்கராசு இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தலைவர் திரு எஸ்.டி. உக்கம்சந்த், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத் தலைவர் திரு செங்கம் ஜப்பார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு ஜே.சி.டி.பிரபாகரன், பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தின் பொது மேலாளர் திரு எம்.எச்.ஜலால் இ.ஆ.ப., ஆகியோர் உரையாற்றினர்.

விழாவுக்குத் தலைமை ஏற்ற மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் தமது உரையில்,

''ஒவ்வொரு மதமும் மக்களைக் கடவுளின் குழந்தைகள் என்றுதான் அழைக்கிறது. ஆனால் வேற்றுமை ஏற்படும்போது இன்ன ஜாதி, இன்ன மதம் என்று இழிவுபடுத்திப் பேசுகிறோம். அந்தத் துன்பநிலை மாறவேண்டும். சிறு

**அட்டை சொல்லும் செய்தி**

பான்மையினரின் நலனைக் காப்பதில் நமது முதல்வர் புரட்சித்தலைவர் சிறந்து விளங்குகிறார். சிறுபான்மைச் சமுதாயத்தினரும் நமது சகோதரர்கள் என்று எண்ணும் இயல்பு கொண்டவர் நமது முதல்வர். ஹஜ் பயணிகள் சென்னையிலிருந்து விமானத்தில் புறப்படுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தவர் நமது முதல்வர்'' என்று குறிப்பிட்டார்.

சொற்பொழிவுக்குப் பின்னர், பள்ளி மாணவமாணவியரின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

**மொழி ஒற்றுமை நாள்**

நவம்பர் 21ஆம் நாள் மொழி ஒற்றுமை நாளாகக் கொண்டாடப்பட்டது.

சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஜி.புஜங்கராவ் இ.ஆ.ப., அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சர் திரு சி.பொன்னையன் அவர்கள், விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில்,

''ஒருமைப்பாட்டைப் பேணிக் காக்க ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்

''தேசிய ஒற்றுமை மிகமிக அவசியம். இதில் தமிழ்நாட்டின் பங்கு மகத்தானதாக இருக்கும், இருக்க வேண்டும்'' என்றார்.

திருக்குறளார் திரு வீ. முனிசாமி பள்ளிக்கல்வி இயக்குநர் திரு கி.கோபாலன், பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம் ஆகியோர் உரையாற்றினர்.

பின்னர் மாணவ, மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

**நலிவடைந்தோர் நல நாள்**

நவம்பர் 22ஆம்நாள் நலிவடைந்தோர் நல நாளாகக் கொண்டாடப்பட்டது. விழாத் தொடக்கத்தில் வில்லிசை நிகழ்ச்சி சிறப்புற நடைபெற்றது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைச் செயலாளர் திரு பி. பாஸ்கரதாஸ் இ.ஆ.ப வரவேற்புரையாற்றினார்.

சமூகநலத்துறை ஆணையர் மற்றும் செயலர் திரு சி.தங்கராச் இ.ஆ.ப.,

மயிலைத் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திருமதி பா. வளர்மதி,

ஆகியோர் உரையாற்றினர்.

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு அ. அருணாசலம் அவர்கள் தமது தலைமையுரையில்,

''அன்னை இந்திரா காந்தி அவர்களின் பிறந்த நாளான நவம்பர் 19 முதல் ஒருவார காலம் தேசிய ஒருமைப்பாடு வார விழாவாக நமது அரசு கொண்டாடி வருகிறது. 'இந்தியாவின் ஒற்றுமைக்காக இரத்தம் சிந்தவும் நான் தயார்' என்று சொல்லி, அதேபோல் இந்திய மண்ணில் இரத்தம் சிந்தி மறைந்தவர் இந்திராகாந்தி. அவரது நோக்கத்தை ஈடேற்றுவதில் தமிழக அரசு அரும்பாடுபட்டு வருகிறது. நலிவடைந்தோர் எல்லாச் சமூகத்திலும் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் வளமான வாழ்வு காணவேண்டும் என்பதற்காகவே பட்ஜெட்டில் ஒட்டுமொத்தமாக 132 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்'' என்று குறிப்பிட்டார்.

—இவ்வாறு உரையாற்றிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கலப்புமணம் புரிந்து கொண்ட 5 தம்பதியருக்கு, ஒரு ஜோடிக்கு ரூ. 4000 வீதம் சேமிப்புப்பத்திரமும், ரூ. 300 வீதம் ரொக்கப் பணமும், பாராட்டு மடலும் வழங்கினார். நலிவுற்றோர் ஆறு பேருக்குத் தோல் தைக்கும் தையல் இயந்திரங்கள் அளித்தார்.

பின்னர், பள்ளி மாணவ, மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

**பண்பாட்டு ஒற்றுமை நாள்**

தேசிய ஒருமைப்பாட்டு வார விழாவின் ஐந்தாம் நாள் (23.11.'87) பண்பாட்டு ஒற்றுமை நாளாகக் கொண்டாடப்பட்டது.

தமிழ் வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் திரு த. பெரியாண்டவன் வரவேற்புரை ஆற்றினார்.

தமிழ்ப்பண்பாட்டுத் துறைச் செயலாளர் டாக்டர் ஔவை நடராசன்,

பேராசிரியர் திரு தெ.ஞானசுந்தரம்,

ஆகியோர் உரையாற்றினர்.

தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சு.முத்துசாமி அவர்கள், ''நாம் அனைவரும் இந்தியர் என்ற உணர்வை நினைவுறுத்த ஆண்டிற்கொரு முறை இந்த விழாவை அவசியம் நடத்த வேண்டியிருக்கிறதே என்று வேதனையாயிருக்கிறது. நம் பிறப்பிலேயே இந்த உணர்வு பிறந்திருக்க வேண்டும். கற்றுக் கொடுப்பதால் இந்த உணர்வு வராது. இன்றையத் தேவை, கட்டுப்பாடான சமுதாயம், நாட்டுப்பற்றுக் கொண்ட சமுதாயம்'' என்று குறிப்பிட்டார்.

விழாவின் முடிவில் அரசு இசைக் கல்லூரி மாணவியரின் நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது.

**மகளிர் நல நாள்**

நவம்பர் 24-ஆம் நாள் மகளிர்





''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம்வந் தாற்பின் நமக்கெது வேண்டும்''

—மகாகவி பாரதியார்

நல நாளாகக் கொண்டாடப் பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு வந்திருந்த அனைவரையும் சமூக நலத் துறை இயக்குநர் திருமதி ஷீலா ராணி சுங்கத், இ.ஆ.ப. வரவேற்றார். மாண்புமிகு சத்துணவு மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் திரு ஆர். சௌந்தரராஜன் அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில், தமிழக அரசு, பெண்கள் நலத்திற்காக வகுத்துள்ள திட்டங்களை விவரித்தார்

பேராசிரியை திருமதி இராஜலட்சுமி இராமச்சந்திரன், திருமதி சாவித்திரி ராகவேந்திரா, பேராசிரியை திருமதி ஜெயா முனியசாமி, திருமதி புனிதவதி இளங்கோவன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர். கல்லூரி மாணவியர்கள் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

**தேசிய ஒருமைப்பாடு நினைவுநாள்**

நவம்பர் 25ஆம் நாள் தேசிய ஒருமைப்பாடு வார நினைவு நாளாகவும், பண்டித கோவிந்த வல்லப பந்தின் நூற்றாண்டு விழாவாகவும், சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு நாளாகவும் கொண்டாடப்பட்டது

தொடக்கத்தில் நுங்கம்பாக்கம் நகராட்சி மேல் நிலைப் பள்ளி மாணவியரின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

விழாவுக்கு வந்திருந்தோரை வரவேற்ற செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,

''சாதி, மதம், இனம், இடம் ஆகியவற்றில் எந்த வேறுபாடும் கூடாது, எந்தப் பிரிவினையும் கூடாது என்ற நல்ல கருத்தை வலியுறுத்தும் வகையில் தேசிய ஒருமைப்பாடு வார விழா ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டுவருகிறது'' என்று குறிப்பிட்டார்.

சென்னை மாநகர ஷெரீப் திரு எம். சரவணன் திரு சி.ஆர். பட்டாபிராமன், டாக்டர் எச்.வி.ஹண்டே,

சைதைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு சா. துரைசாமி, திருமதி சரோஜினி வரதப்பன், திரு வ.உ.சி. சுப்பிரமணியம் ஆகியோர் உரையாற்றினர்

கோவிந்த வல்லப பந்த் அவர்களின் புகைப்படக் கண்காட்சியைத் திறந்து வைத்தும்-விழாவுக்குத் தலைமை வகித்தும், உரையாற்றிய மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் தம் உரையில்,

''பந்த், உயர்ந்த சமூகத்தில் பிறந்திருந்தாலும் ஆதிதிராவிட இன மக்களின் நலனுக்காகப் பல்வேறு விதமான சட்டங்களைக் கொண்டுவந்துநிறைவேற்றினார். மாபெரும்புரட்சியாளரான நமது தந்தை பெரியார் அவர்களைப் போலவே பந்த் அவர்களும்புரட்சியாளராக விளங்கியிருக்கிறார்.

''தேசிய ஒருமைப்பாட்டின் ஒரு சிறப்பு, வேற்றுமையிலும் ஒற்றுமை காண்பதாகும். உடை, மொழி, கலாச்சாரம், உணவு ஆகியவற்றில் வேற்றுமைகள் இருந்தாலும், காஷ்மீரம் முதல் கன்னியாகுமரி வரை ஒரே உணர்வுடன் திகழ வேண்டும்; இதற்குப் பெயர்தான் ஒருமைப்பாடு.

''ஆங்கிலம் தொடர்ந்து இந்தியாவின் தொடர்பு மொழியாக இருக்க வேண்டும் என்பது வாக்குறுதி அளவில் அன்றிச் சட்டத்திலும் இடம் பெற வேண்டும். ஆங்கிலம் வேற்று நாட்டு மொழியல்ல. அதுவும் இந்திய மொழி என்றே கொள்ளப்பட வேண்டும்'' என்று ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்திப் பேசினார்.

விழாவில், தமிழக அரசின் செய்தித்துறை தயாரித்து அளித்த கோவிந்த வல்லப பந்த் வாழ்க்கை வரலாற்றுச் சிறு ஏட்டை மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் வெளியிட மாண்புமிகு தமிழ் வளர்ச்சி உயர் நிலைக் குழுத் தலைவர் டாக்டர் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் பெற்றுக் கொண்டார்.

கோவிந்த வல்லப பந்த் அவர்களின் உருவப் படத்தைத் திறந்து வைத்து மாண்புமிகு தமிழ் வளர்ச்சி உயர்நிலைக் குழுத் தலைவர் திரு ம.பொ.சி. அவர்கள் தமது சொற்பொழிவில் தெரிவித்ததாவது:

''தேச விடுதலைக்குப் பாடுபட்ட நமது முன்னோர்கள் தமது மாநில விடுதலைக்காக மட்டும் பாடுபடவில்லை. இந்த நிலத்தின் ஒவ்வொரு அங்குலத்தின் விடுதலைக்கும் போராடினர். அவர்களை மாநிலத்துக்காகப் பாடுபட்டவர்கள் என்று சொன்னால் அது அவர்களை அசிங்கப்படுத்துவது ஆகும்.

''இன்று நாம் அனுபவித்து வரும் நன்மைகள் எல்லாம் சுதந்திரத்தின் விளைவு என்பதை நாம் உணர வேண்டும்''.

அடுத்து, கோவிந்த வல்லப பந்த் நூற்றாண்டு விழாக் குழுவின் தலைவர் திரு எம். சரவணன், சில பரிந்துரைகளை அரசுக்குத் தெரிவித்தார்: அவை வருமாறு:

1. பள்ளியில் 10வது அல்லது 12வது வகுப்பில் படிக்கும் மாணவர்கள் இந்திய சுதந்திரத்தின் வரலாற்றைத் துணைப்பாடமாகப் படிப்பதற்கு வகை செய்ய வேண்டும். அந்தப் பாடத்தில் அவர்கள் கண்டிப்பாகத் தேர்ச்சி பெறவும் வேண்டும்.

2. தொலைக்காட்சியில் சுதந்திர வரலாறு, விடுதலைக்குப் பாடுபட்ட பெருமக்களின் வரலாறு காண்பிக்கப்பட வேண்டும்.

3. சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு குறித்துப் பள்ளி மாணவ மாணவியர் பங்கு பெறும் நிகழ்ச்சிகள் தொலைக்காட்சியில் ஒளி பரப்பிட வேண்டும்''

கோவிந்த வல்லப பந்த் அவர்களின் நூற்றாண்டு தொடர்பாக நடைபெற்ற அனைத்துக் கல்லூரி மாணவ, மாணவியர் பேச்சுப் போட்டியில் பரிசு பெற்ற மாணவ, மாணவியருக்குப் பரிசுகளை திரு எம். சரவணன் வழங்கினார்.

விழா இறுதியில், சென்னை மாநகராட்சி ஆணையர் திருமதி சாந்தா ஷீலா நாயர், இ.ஆ.ப., நன்றி நவின்றார்.

தேசிய ஒருமைப்பாடு வார விழா தேச உணர்வை ஊட்டுவதற்கு - குறிப்பாக இளைய சமுதாயத்தினருக்கு ஒருமைப்பாட்டின் பெருமையை உணர்த்துவதற்குப் பயன்பட்டது என்று சொன்னால் அது மிகையாகாது.

—நமது செய்தியாளர்கள்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
DIPR/Efficient

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23



# தமிழகத்தில் புதுமையான தொழிற் புரட்சி!

## டிட்கோவின் எதிர்காலத் தொழிற் திட்டங்கள்

- ரூ. 125 கோடி செலவில் கண்ணாடி (ஃப்ளோட் கிளாஸ்) தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 18 கோடி மூலதனத்தில் டெலிபோன் கேபிள் தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 250 கோடி செலவில் உருவாகும் 210 மெகாவாட் திறனுடைய மின் நிலையம்.
- ரூ.5.5 கோடி செலவில் மரவள்ளிக் கிழங்கிலிருந்து ப்ரக்டோஸ் திரவம் உற்பத்தி செய்யும் தொழிற்திட்டம்.
- ரூ. 6 கோடி செலவில் இண்டஸ்ட்ரியல் டைமண்ட் தொழிற்திட்டம்.
- ரூ. 40 கோடி செலவில் உருவாகும் 'பென்சிலின்' மருந்து தயாரிக்கும் தொழிற்திட்டம்.
- ரூ. 25 கோடி மூலதனத்தில் உருவாக்கப் படவிருக்கும் லாம்ப் மற்றும் லாம்ப் பாகங்கள் தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 10 கோடி செலவில் பேப்பர் லாமினேடட் எச்.டி.பி.இ. (HDPE) பைகள் தயாரிக்கும் தொழிற் திட்டம்
- ரூ. 12 கோடி மூலதனத்தில் உருவாகும் செராமிக் டைல்ஸ் தொழிற் திட்டம்



ஈ.வெ.கி. சுலோசனா சம்பத்
தலைவர்

டிட்கோ

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்**

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
735, அண்ணா சாலை, சென்னை-600 002